**1. இலக்கியங்களில் பூக்கள்**
முனைவர் து.சவிதா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.

**2. புன்னை மரமும் வரலாற்று நிகழ்வுகளும்**
முனைவர் செ.சாந்தி, கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத் துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

**3. ஆற்றுப்படை நூல்களில் மரங்கள்**
முனைவர் மு.சுபாஷினி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

**4. இலக்கியமும் ஆம்பலும்**
முனைவர் அ.இராஜலட்சுமி, முதுகலை பட்டதாரி ஆசிரியர்,
பாரதி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி, கோவை.

புத்தகக்குறிப்பு

9 788194 969594



# செங்காந்தள் – இயற்கை

முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் து.சவிதா



# செங்காந்தள் - இயற்கை

# Title Verso

| | | |
|---|---|---|
| **TITLE OF THE BOOK** | : | **Senkanthal - Iyarkkai** |
| **புத்தகத்தலைப்பு** | : | **செங்காந்தள் - இயற்கை** |
| **EDITORS** | : | **Dr. D.Maheswari & Dr. D.Savitha** |
| **தொகுப்பாசிரியர்** | : | **முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் து.சவிதா** |
| **FIRST EDITION** | : | 2021 |
| **முதல் பதிப்பு** | : | 2021 |
| **PAGES / பக்கங்கள்** | : | 90 |
| **PRICE / விலை** | : | 250 |
| **ISBN NUMBER** | : | 978-81-949695-9-4 |
| **CONTACT NUMBER** | : | 8526769556 |

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Rear side,
Virudhunagar – 626001.
Tamil Nadu

**பதிப்புரிமை/Copyright © 2021 – Maheswari Publishers**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

இப்புத்தகம் கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. The content of the book is licensed under **Creative Commons Attribution4.0** International License.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையை சூடியவன் முருகன் என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சார பெருமையை அடையாளப்படுத்தும்; செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது. தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ் சமூகம் தமிழ்த்தேன் பருக; தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளை புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே முதல் மலராய் மலர்கிறது.

# உள்ளடக்கம்


1. **இலக்கியங்களில் பூக்கள்** 1-23

முனைவர் து. சவிதா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.

2. **புன்னை மரமும் வரலாற்று நிகழ்வுகளும்** 24-38

முனைவர் செ.சாந்தி, கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத் துறை,

அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

3. **ஆற்றுப்படை நூல்களில் மரங்கள்** 39-56

முனைவர் மு.சுபாஷினி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

4. **இலக்கியமும் ஆம்பலும்** 57-79

முனைவர் அ. இராஜலட்சுமி, முதுகலை பட்டதாரி ஆசிரியர்,

பாரதி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி, கோவை.



*செங்காந்தள் - இயற்கை*

# இலக்கியங்களில் பூக்கள்

# Flowers in Literature



செங்காந்தள் - இயற்கை

# 1. Flowers in Literature

**Dr.D.Savitha,** Assistant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore.
**ORCiD:** https://orcid.org/**0000**-0002-4443-6290
**DOI: 10.5281/zenodo.4591422**

## Abstract

Flowers are one of the beautiful creations of nature. It dwells with the aesthetics of human life. From the birth to the death of humans, life is closely associated with flowers. There are lots of Tamil proverbs that evince the importance of flowers in Tamil Sangam life that has been reflected in Sangam Literature. The names of the flowers are used to indicate victory in war, to point out important places, medicinal names in the name of flowers and love expressed are indicated in association to flowers. So, one can see lots of evidence in Sangam literature glorifying the importance of flowers. Among the Sangam literary works, "Kurinchippattu" and "Pathuppattu" collection elicit about the flowers known at the Sangam times. It portrays 99 varieties of flowers that where seen in ancient Tamil Nadu. Hence, this chapter focuses on the classical works such as "Tholkappiyam", "Purananooru", "Kurunthogai", "Pathuppattu", "Kambaramayanam", Villibaratham", the Five epics of Tamil Literature", and the Didactic works.

**Keywords:** Flowers, Tamil culture, Tamil Sangam Literature.

## References

[1] Dr. G.V.Balasubramanian, Sanga Ilakkiyam Ettuthogai, Pathuppattu, New Century Book House, Ambathur, Chennai.
[2] Ulaga Tamil Chemmozhi Manadu Chirappu Malar, 2020.
[3] Elangovatigal, Silappathigaram, U.V.S. Noolnilayam, Chennai, 2001.
[4] Dr. Packia Mary, Vettri Nookil Ilakkanam Ilakkia Varalaru Mozhithiran, Pooventhan Pathipagam, Chennai-600004, 2013.
[5] Prof. Vaiyapuripillai. Sanga Ilakkiayam – Pattum, Thogaium-1. Parinilayam, Chennai, 1996.
[6] Dr.Chandra Sekaran. Sanga Ilakkiayam Panmuga Aaivu. Magakavi Barathiyar Library, Bharathiyar University, Coimbatore-641046, 2001.
[7] S.Sakthivel, Natupuraiyal Aaivu, 1983.
[8] Tholkkapiyar. Tholkkapiyam Ilampuranar Vurai, Kalaga Veliedu, 1985.
[9] Thirukkural. Parimelalagar Vurai, Puliurgesigan, Poompugar Pathipagam, Chennai, 1993.



*செங்காந்தள்- இயற்கை*

# 1. இலக்கியங்களில் பூக்கள்

**முனைவர் து. சவிதா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.**

**ORCiD:** https://orcid.org/**0000**-0002-4443-6290

**DOI: 10.5281/zenodo.4591422**

மக்களின் வாழ்வில் உடலிலும் உயிரிலும் கலந்து நிற்பன மலர்கள். மனிதன் பிறப்பது முதல் இறப்பது வரை மலர்களின் தொடர்பு கொண்டே வாழ்கின்றான்.

**பொன் வைக்கும் இடத்தில் பூவை வை**

**மனத்திற்கும் பூ மயக்கத்திற்கும் பூ**

**வாழ்விற்கும் பூ சாவிற்கும் பூ**

**வாழ்தலுக்கும் பூ வழுத்தலுக்கும் பூ!**

என்பன போன்ற தமிழ்நாட்டுப் பழமொழிகள் மலர்களின் சிறப்பினை புலப்படுத்துகின்றன. பேரிலும் மலர் பெயர்கள், ஊரிலும் மலர் பெயர்கள், மருந்துக்கும் மலர், மயக்கத்திற்கு மலர், ஒவ்வொரு கோணத்திலும் இன்பத்திலும் துன்பத்திலும் மலர்கள் இடம்பெற்று நிற்கின்றன. தமிழ் இலக்கியங்களில் பண்டையகால மலர்களைப் பற்றிக் கூறுவது பத்துப்பாட்டினுள் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு. அப்பாட்டு 99 வகையான தமிழ்நாட்டு மலர்களைப் பற்றிக் கூறுகின்றது.

**பூக்களின் சிறப்பு**

மலர்கள் என்ற பெயர் ஒரு காரணக்குறி. ஒரு மரத்தின் இலையோ, கிளையோ, காயோ, விழுதோ, மாந்தரின் மனத்தைக் கவர்வதில்லை. பூக்கள் மட்டுமே தங்கள் மனத்தாலும், நிற பொலிவாலும் மக்கள் மனத்தை மலரச் செய்கின்றன. மனதை மலரச் செய்வதால் அது மலரென காரணப் பெயர் பெற்றது. தமிழில் காப்பியங்களையும், தனி கவிதைகளையும், வடித்த புலவர்கள் மனத்தைப் பறிகொடுத்து. அவற்றை தம் நூல்களில் அமைத்துக் கொண்டுள்ளனர். இன்று மக்கள் வாழ்வில் மலர்களுக்கு அளிக்கப்படும் மாண்புகள் இரண்டு. ஒன்று இறைவன் திருவடியில் அர்ச்சனையாகச் சூட்டுதல் மற்றது மங்கையரின் கூந்தலை அலங்கரித்தல்! இறைவன் திருவடியில் மலர்களைச்





சூட்டுவதேயன்றி அத்திருவடியையே தேன் நிறைந்த ஒரு கமல மலராக வைத்துப் போற்றுகின்றார் மணிவாசகர்.

**ஊனார்உடை தலையில்**

**உண் பலி தேர் அம்பலவன்**

**தேனார் கமலமே**

**சென்றூதாய்கோத்தும்பீ (திருவாசகம் -216)**

என்ற பாடலில் இதைக் காணலாம். மனிதன் பிறந்தது முதல் காதல் வாழ்வு நடத்தி இறப்பது வரை ஒவ்வொரு கோணத்திலும் மலர்கள் பங்கு பெறுகின்றன.

**தாலாட்டு (பிறப்பு)**

குழந்தை பிறந்து வளரும் நிலையில் பாடப்படுவது தாலாட்டு. இதன்கண்

**கண்ணே உறங்கு என் கண்மணியே! நீ உறங்கு!**

**அத்தை அடித்தாளோ?ஆவிரம்பூ செண்டாலே,**

**மாமி அடித்தாலோ மல்லிகைப்பூச் செண்டாலே**

**அடித்தாரைச் சொல்லி அழு ஆக்கினைகள் பண்ணிடுவோம்**

**ஆரும் அடிக்கவில்லை ஐ விரலும் தீண்டவில்லை**

**அவன் தான் அழுகின்றான் தம்பி துணை வேண்டுமென்று (நாட்டுப்புறப் பாடல்)**

என்று தாய் பாடுகிறாள்.

**இறப்பு (ஒப்பாரிப் பாடல்)**

**இறப்பிலும் அழுகையின் ஊடே மலர்கள் தான் தாயாருக்கு**

**மஞ்சள் அரைச்சிநலங்கிட்டு**

**என்னை பெத்த மாதா**

**மனம்போல சீரிட்ட**

**சீக்கா அரைச்சி நலன்கிட்டுத்**

**தகுந்தாற்ப்போலச் சீரிட்ட**

**தேவி நீ செத்தாயிற்று**

**சீதைக்கு ஆள் வந்தா**

**சீதைமார் பெற்ற சீராளன்**



*செங்காந்தள்- இயற்கை*

**தேரேறிப் பூச் சுத்துவான்**

**இருப்பு வெட்டிக் கால் நிறுத்தி**

**இனுக்கினுக்காய்ப் பூச்சூடி**

**எமலோகம் போகும்போது நீ**

**எதிரே வரப் பொண்ணில்லையா? (அரக்கோணம் இராமலிங்கம்- குறிஞ்சிப்பூக்கள் நூறு பக்-11)**

மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் நாட்டுப்புறப் பாடல்கள் மலர்களின் இன்றியமையாமையை வெளிப்படுத்துகின்றன.

**இலக்கியத்தில் பூக்கள்**

தமிழ் இலக்கியங்களில் தொன்றுதொட்டே *தொல்காப்பியம்* முதல் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கியங்கள் வரை உள்ள கவிதைகளில் மலர்கள் இடம் பெற்றுள்ளன.

***தொல்காப்பியம்***

நாடாளும் மன்னர்க்கு அடையாள பூக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த செய்தியைத் தொல்காப்பியம் கூறுகிறது. அரசர்களின் மார்பு மாலையாகத் 'தார்' அணிந்தனர். தலையில் மலர்களால் தொடுத்த கண்ணி சூடினர். முடியுடை வேந்தரும் குறுநில மன்னர்களும் வேளிரும் தமக்கென தத்தம் அரச குடும்பத்திற்கு என ஒவ்வொரு பூவை அடையாள பூவாக கொண்டிருந்தனர். அரசருக்குரிய சின்னங்களில் மலர் மாலை சிறப்பாக கருதப்பட்டது.

**படையும் கொடியும் குடியும் முரசும்நடை நவில் புரவியும் களிறும் தேரும்**

**தாரும் முடியும் நேர்வன பிறவும்**

**தெரிவு கொள் செங்கோல் அரசர்க்கு உரிய**

என்னும் தொல்காப்பிய (616) நூற்பாவால் இதனை அறியலாம். முடிமன்னர் மூவரில் சேர மன்னனுக்கு உரியது பனம் பூ, பாண்டியனுக்கு உரியது, வேப்பம்பூ சோழனுக்கு உரியது ஆத்திப்பூ என்று வகுக்கப்பட்டிருந்தது.

**வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்து புகழ்**

**போந்தை வேம்பே ஆர் என வருஉம்**



*செங்காந்தள்- இயற்கை*

**மாபெரும் தானையர் மலைந்த பூவும் -(தொல். பொருள்.63)**

என வரும் தொல்காப்பிய நூற்பா இதனை உணர்த்தும்.

*புறநானூறு*

புறநானூறு தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் பழமையான பாக்களை உடையது. பழங்கால தமிழகத்தைத் தமிழர் நாகரிகத்தைத் தமிழ் மக்களின் சமுதாய வாழ்க்கையை அறியப்பெரிதும் துணை செய்வது அந்நூல். சோழனுக்கு ஆத்திமாலை அடையாளமாக அமைந்தது என்பதை கோவூர் கிழார் வாய்மொழியாக அமைத்த

**இரும்பனை வெண்டோடு மலைந்தோ ரத்தன்**

**கருஞ்சினை வேம்பின் தெரிய வோன் அல்லன்**

**நின்னகண்ணியும் ஆர்மிடைந்தன்றே நின்னொடு**

**பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே -புறம்-45(1-4)**

என்ற பாடல் புலப்படுத்துகின்றது. மார்பில் அணியப்படுவது தார் தலையில் சூடுவது கண்ணி என்பது முன்னர் சுட்டப்பட்டது.

*குறுந்தொகை*

சங்க இலக்கியங்களில் அகத்துறை தழுவிய நூல் குறுந்தொகை. இதன்கண் அக்காலத்து தமிழகத்தில் சிறப்புற வழங்கிய மலர்கள் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. சிறப்பாக குறிஞ்சி மலரைப் பற்றித் தலைவி கூறியதாகப் பின்வரும் பாடல் அமைகின்றது.

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**

**நீரினும் ஆரள வின்றே சாரல்**

**கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு**

**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே -(குறுந்தொகை-3)**

இப்பாடலில் தலைவன் கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு குறிக்கப்படுகிறான். குறிஞ்சி மலர்கள் மலைச்சாரலில் பூப்பது. கரிய காம்புகளை உடையது. 12ஆண்டுக்கு ஒருமுறையே மலர்வது. இது பூக்கும் ஆண்டில் குடம் குடமாக தேனடைகளில் தேன் தரவல்லது. இக்குறிப்பு கருங்கோல் குறிஞ்சிப் பெருந்தேன் என்ற சொற்றொடர்களில் சுட்டப்பட்டுள்ளது.



*செங்காந்தள்- இயற்கை*

*பத்துப்பாட்டு*

பத்துப்பாட்டில் உள்ள திருமுருகாற்றுப்படை தார் கண்ணி கோதை போன்ற மலர் மாலைகளும் தனி மலர்களும் குறித்துப் பேசப்படுகின்றது.

**(அ) *திருமுருகாற்றுப்படை***

திருமுருகாற்றுப்படை நூலில் குவளை செண்பகம் மருது முதலிய மலர்கள் பேசப்படுகின்றன.

**வெட்சியும் குவளையும்**

**செங்கால்வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு**

**பைந்தாட் குவளைத் துறவிகள் கிள்ளி**

**தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்துத்**

**திலகம்தைஇய தேங்கமழ் திருநுதல் (அடி 21 -24)**

**காந்தள்**

**சுரும்புமூசாச்சுடர்ப்பூங்காந்தள்**

**பெருந்தண் கண்ணிமிலைந்த சென்னியன் (அடி-43-44)**

**(ஆ) பொருநராற்றுப்படை**

பொருநராற்றுப்படை நூலில் பனம்பூ, வேப்பம்பூ, தாமரை, முல்லை, தோன்றி, கொன்றை, காயா என்னும் மலர்கள் பேசப்படுகின்றன.

**போந்தை, வேம்பு**

**இரும் பளம் போந்தைத் தோடும் கருஞ்சினை**

**ஆரவாய் வேம்பின்அங்குழைத்துத் தெரியலும்**

**ஓங்கு இருஞ் சென்னி மேம்பட மிலைந்த**

**இருபெருவேந்தரும் ஒருகளத்தவிய (அடி-143-145)**

**தாமரை**

**ஏரியகைந் தன்ன வேடில்தாமரை**

**சுரியிரும் பித்தளை பொலியச் சூட்டி (அடி-159-160)**

**நெய்தல்**

**நெய்தல் நறும்பூங்கண்ணி குறவர் சூட (அடி-199-201)**



*செங்காந்தள்- இயற்கை*

**(இ)** ***குறிஞ்சிப்பாட்டு***

குறிஞ்சிப்பாட்டு என்பது பத்துப்பாட்டு நூல். எட்டாவது பாடல் 261 அடிகளை உடைய அகவற்பா வால் ஆனது. இதனைப் பாடியவர் குறிஞ்சி பாடுதலில் வல்ல கபிலர். இது ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ்கற்பிப்பதற்காகப் பாடியது என அடிக்குறிப்பு கூறுகிறது. அறத்தொடு நிற்றல் என்ற அகப்பொருள் வரையறையில் அமைந்த இப்பாடலில் அக்காலத்தில் தமிழகத்தில் வழங்கிய 99 மலர்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

**திருக்குறளில் மலர்கள்**

திருக்குறள் இன்பத்துப் பாலில் ஆங்காங்கு சில மலர்களைச் சுட்டிச் செல்கிறது. அவற்றுள் முதன்மை பெற்றது அனிச்ச மலர். தலைவன் கூற்றாக அமைந்த திருக்குறளில், அனிச்ச மலரே நீ வாழ்க! எனது உள்ளம் கவர்ந்தவள் உன்னைவிட மென்மையானவள், அவளுடைய உடல் மென்மையானது, உள்ளம் அதை விட மென்மையானது, அவளுடைய மென்மைக்கு உவமைத்தேடி அலைந்தேன் நீ கிடைத்தாய் எனவே நீ வாழ்க!

**நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்**

**மென்னீரள்யாழ்வீழ் பழம் (குறள் 111)**

**குவளை**

பெண்களின் கண்களுக்கு குவளை மலரை உவமையாகக் கூறுவர் கவிஞர். ஆனால் என் காதலியின் கண்கள் குவளை மலரை விட அழகானவை. குவளை மலர்கள் கண்களை பார்த்தாள் அவற்றிற்கு ஒப்பாக முடியவில்லையே என்று நாணித் தலை கவிழும்! என்கின்றான் ஒரு காதலன்.

**காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்**

**வானிலைகண்ஒவ்வேம் என்று (குறள் 111)**

**(அ)** ***சிலப்பதிகாரம்***

சிலம்பில் நெய்தல், கொன்றை, முல்லை, ஆம்பல் போன்ற மலர்கள் அகத்துறை பகுதியில் நயம்பட ஆட்சி பெற்றுள்ளன.

**நெய்தல்**

தலைவி தலைவன் பிரிவை ஆற்றாது புலம்புகிறாள். கழிக்கரையில் பூத்திருக்கும்



*செங்காந்தள்- இயற்கை*

நெய்தல் மலரை நோக்கி கூறுகின்றாள். "நெய்தல் மலரே! நான் என் காதலரின் பிரிவை ஆற்றாது உள்ளம் உடைந்து வருந்துகின்றேன். அவர் என் நினைவில் வாரார். எனினும் கனவிலும் நீ கள்ளுண்டு மயங்கி நிற்கின்றாய். நீ உறக்கம் கொள்வாய்! நீ அடையும் கனவிலாவது என் காதலர் இங்கு வருவதைக் கண்டதுண்டோ? என்பதை,

**புன் கண் கூர் மாலை புலம்பும் என் கண்ணே போல்**

**துன்பம் உழவாய்துயில பெறுதியால்?**

**இன்கள்ளாய் செய்தால்**

**நீ எய்தும் கனவினுள்**

**வன்கணார்கானால் வரகண் அறிதியோ? (கானல் வரி-33)**

என்று காமம் மிக்க கழிபடர் கிளவியால் வேண்டுகிறாள்.

**கொன்றை**

கொன்றை முதலிய மலர்கள் இசை கருவியோடு இணைத்துக் கூறப்படுகின்றன.

**கன்றுகுணிலாக் கனி உதிர்த்த மாயவன்**

**இன்று நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்**

**கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!**

**ஆம்பல்**

**பாம்பு கயிறா கடல்கடைந்த மாயவன்**

**இங்கு நம் ஆனுள் வருமேல் அவன் வாயில்**

**ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ!**

**முல்லை**

**கொள்ளையனஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்**

**எல்லை நம் ஆனுள் வருமேல் அவன் வாயில்**

**முல்லை அம் தீம் குழல் கேளாமோ தோழீ! (ஆய்ச்சியர் குரவை)**

**(ஆ) *மணிமேகலை***

நாட்டியக்கலை அரசி மாதவியின் மகள் மணிமேகலை ஆடல் மகளிர் கூறிய அத்தனை கலைகளையும் கற்றவள் என மணிமேகலை காப்பியம் கூறுகிறது. ஆயக்



*செங்காந்தள் - இயற்கை*

கலைகளுள் **'மலர் ஆய்ந்து தொடுத்தல்'** என்பதும் ஒன்று. இதில் தேர்ந்தவள் மணிமேகலை என்பதை,

**வட்டிகைச் செய்தியும் மலர் ஆய்ந்து தொடுத்தலும்**

**கோலம் கோடலும் கோவையின் கோப்பும்**

**கற்றுத் துறைபோகிய பொற்கொடி நங்கை**

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

**கடம்பு – ஆர்**

முருகனுக்குரிய கடப்ப மலர் மாலையும் சோழருக்கு உரிய ஆத்தி மாலையும் பின்வரும் அடிகளில் சுட்டப்படுகின்றன. சோழன் தலையில் அணிந்துள்ள ஆத்திப் பூ மாலை, அவன் கார்அலன் கடப்பன் என்பதை,

**கார்அலன் கடம்பன் அல்லன் என்பதை**

**ஆரக்கண்ணியிற் மாற்றினர் வருவோன்**

என்று சாத்தனார் கூறுகின்றார்.

**(இ)** ***சீவக சிந்தாமணி***

சமண சமயக் காப்பியம் சீவக சிந்தாமணி அகப்பொருள் சுவை அமையப் பாடப்பட்டது. எனவே காம உணர்வை எழுப்பும் பல்வகை மலர்கள் ஆங்காங்கு பேசப்படுகின்றன. மாந்தர் குடும்ப திருமணத்தைப் போன்றே மலர்கள் குடும்பத் திருமணம் ஒன்றை புனைந்து காட்டுகின்றார் திருத்தக்கதேவர். மன நிகழ்ச்சியில் முல்லை தலைமை இடம்பெறுகிறது. மணவிழா முல்லை விழாவாகவே நடக்கிறது.

**மணமகன்- சரம் சரமாக பூத்துக் குலுங்கும் கொன்றை பூ.**

**மணமகள்-குரவம் பாவை.**

**திருமண விளக்கு-செங்காந்தள் மலர்.**

**நீர் வார்த்தது-குருந்த மலர்.**

**வாழ்த்துரை –வண்டினங்கள்.**

மாந்தர் இடையே பெரியோர் சென்று பெண் பேசி முடிப்பர். இங்கு முல்லை மலரே அவர்களைப்போல் சென்று பெண் பேசி முடித்ததாம்! சமுதாயத்தில் பெண்கள் தலையில்


*செங்காந்தள் - இயற்கை*

அமர்ந்து மணம் பரப்பும் முல்லை காவியத்திலும் பெண்ணை வழி நடத்தி மனம் செய்வதாக கூறுவது ஒரு நயமிக்க கற்பனை எனலாம்.

**குறிஞ்சி எல்லையின் நீங்கிக்**

**கொடிமுல்லை மகள் மொழிந்து தாட**

**சரிந்த பொன்னி இதழ்ப்பைந்தார்**

**கொன்றையைந் செலவற்குக் குரவம்**

**அறிந்து பாவையைக் கொடுப்பத்**

**தோன்றி அஞ்சுடர் ஏந்த,**

**நிறைந்த பூங்குருந்து உகுதேன்**

**நீர் பெய்து ஆர்த்தன அரும்பே! (சீவக-1563)**

என்ற சிந்தாமணி பாடல் ஓவியப்படுத்துகின்றது. முல்லை எப்போதும் சிரித்த வண்ணமாகவே இருக்கும் என்பதை 'குறுக்கென்றுசிரித்தமுல்லை' என்ற அடியில் புலப்படுத்துவர் பாவேந்தர்.

**(ஈ)** ***கம்பராமாயணம்***

கம்பராமாயணம் 10,533 பாடல்களைக் கொண்டது. எனவே பல்வேறு மலர்கள் ஆங்காங்கு பேசப்படுகின்றன. ராமனுடைய முகம் எப்பொழுதும் தாமரை மலர் போன்று சிரித்த தோற்றத்துடன் இருக்கும். ஆனால் கைகேயி நீ 14 ஆண்டுகள் காட்டில் சென்று தவம் செய்து வா என்று கூறியதைக் கேட்டவுடன் மகிழ்ந்த ராமனின் முகம் அப்பொழுது மலர்ந்த செந்தாமரையையும் வென்றதாம். இதனை,

**இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்**

**கரி தே யாரும்**

**செப்பரும்குணத்திராமன் திருமுகச்**

**செவ்வி நோக்கில்**

**ஒப்பதே முன்பு;பவ்வாசகம்**

**உணர்த்தக் கேட்ட**

**அப்பொழுது அலர்ந்த செந்தாமரை யினை**

**வென்றதம்மா? (கம்பரா. கைகேயி சூழ்வினை 108)**



*செங்காந்தள்- இயற்கை*

என ஓவியப் படுத்துவர் கம்பர்.

**தும்பை மலர்**

தும்பை மலர் வெண்ணிறம் உடையது. போர்த் திணை மலர். போர் தொடங்கும் காலை வீரர்கள் தலையில் சூடுவர். சூடும்போது இந்த மலரின் இதழைத் தனியாக எடுத்துச்சூட இயலாது. எனவே புறஇதழ்களும் இலைகளும் சரிந்த சொத்தாகவே சூடுவர். இதனை, **இளவரிகவட்டிலையோடுஏர் பெறத் துளவியல் தும்பையும் சுழியச்சூடினாள்** என்ற கம்பர் பாடல் புலப்படுத்துகிறது.

**(உ)** ***வில்லிபாரதம்***

பாரிசாதம், கற்பக மலர், முருக்க மலர், போன்ற பல மலர்கள் வில்லிபாரதத்தில் ஆங்காங்கு கூறப்படுகின்றன. அவற்றுள் முருக்க மலர் வெறும் வருணனைக்காக அன்றி அரியதோர் அறக் கருத்தை விளக்க எடுத்தாளப்படுகிறது.

முருக்க மலர் என்பது நாம் கறி சமைத்து உண்ணும் முருங்கை மரத்தின் வெண்மையான சிறிய மலர் அன்று. முள் மரத்தில் ரத்தச் சிவப்பாகக் கொத்துக் கொத்தாக பூக்கும் கல்யாணமுருங்கை மலரை அது குறிக்கும். இம்மலர் கண்ணைக் கவரும் செந்நிறமான அழகுடையது. பொலிவு மிக்கது. ஆயினும் மணம் இல்லாதது. எனவே இறைவன் பூசைக்கு -அர்ச்சனைக்குப் பயன்படாது. கல்வி அறிவற்றவர்கள் எத்துனை அழகு பெற்று இருந்தாலும் உலகம் அவர்களை மதிப்பதில்லை. அறிஞர்கள் அவர்கள் கூறுவதை ஏற்பதில்லை. அரசனும் அவர்களை மதித்துப் போற்றுவதில்லை. கற்றவர்கள் கூடிய அவையில் அவர்கள் பெருமையுடன் வீற்றிருக்க இயலாது. இதனை,

**கல்லாத நீண்ட ஒருவன் உலகத்து**
**நல்லறி வாளர்இடைப்புக்கு – மெல்ல**
**இருப்பினும் நாய் இருந்தற்றே;இராஅது**
**உரைப்பினும் நாய் குரைத் கற்று (நாலடியார் 254)**

**அறநூல்கள்**

**(அ)** ***நாலடியார்***

பூக்களை நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ என நால்வகைப்படுத்துவர். அவற்றுள் கோட்டுப்பூ நீர்ப்பூ என்னும் இரண்டையும் நல்ல நண்பினர்க்கும், தீய



*செங்காந்தள்- இயற்கை*

நண்பினர்க்கும் உவமை கூறுகின்றது ஒரு நாலடி செய்யுள். மரங்களில் பூக்கும் கோட்டுப் பூக்கள் முதலில் மலர்ந்து தாம் உதிரும் வரை குவிவதில்லை. அதுபோன்று நட்பு செய்த காலம் முதல் அன்பு மாறாது இருப்பது நல்ல நண்பர்களின் இயல்பு. நீர்நிலைகளில் பூக்கும் அல்லி முதலிய பூக்கள் முதலில் மலர்ந்து மறுநாளே கூம்பி விடும். தீய நண்பர்கள் தொடக்கத்தில் நயம் மிக்கவர் போல் நட்பாடி விரைவில் மாறி விடுவார் என்பதை,

**கோட்டுப்பூ போல மலர்ந்துபின் கூம்பாது**

**வேட்டதே வேட்டதாம் நட்பாட்கி – தோட்ட**

**கய பூப்போல் முன் மலர்ந்துபிற்கூம்பு வாயை**

**நயப் பாரும் பாரும் இல் (நாலடியார்-215)**

என்ற நாலடியார் செய்யுள் நெறிப்படுத்துகின்றது.

**(ஆ) *நீதி வெண்பா***

**செந்தாமரையும் குமுதமும்**

செழித்த செந்தாமரை மலர் கதிரவன் உதயத்தை எதிர்பார்க்கும். அல்லிமலர் சந்திரன் வரவை எதிர்நோக்கும். அதுபோல அரனடியார்கள் சிவபெருமான் அருளையே எதிர்பார்ப்பவர் என இரு மலர்களை உவமை கூறுகின்றது நீதிவெண்பா. இதனை,

**செந்தாமரை இரவி சேருதயம் பார்க்குமே**

**சந்திரோதயம் பார்க்கும் தன் குமுதம் - கந்தமிகும்**

**பூவலரப்பார்க்கும் பொறி வண்டு,அரன் அன்பர்**

**தேவரவைப் பார்ப்பர் தெளிந்து (நீதி வெண்பாபா.96)**

என்ற நீதிவெண்பா பாடலில் காணலாம்.

**சிற்றிலக்கியங்களில்**

**(அ) *கலிங்கத்துப்பரணி***

**செங்கழுநீர்ப் பூ**

கலிங்கத்துப்பரணி சிற்றிலக்கியங்களில் சிறப்பு பெற்றது. கி.பி13ஆம் நூற்றாண்டில் எழுந்தது. சோழன் குலோத்துங்கனது கலிங்க வெற்றியைப் பாடுவது. களஞ்சென்ற வெற்றி வீரர்கள் திரும்பி வந்து கடை திறக்கக் கூறும் பகுதி சுவை மிக்கது.



*செங்காந்தள்- இயற்கை*

கன்னி மகளிரின் அழகில் மனத்தைப் பறிகொடுத்து அவர்களிடம் எவ்வாறு இளைஞர்கள் அடிமை போல் நடக்கின்றனர் என்பதையும் அவர்களை மங்கையர்கள் எவ்வாறு ஆட்டி வைக்கின்றனர் என்பதையும்,

**முருகில் சிவந்த கழுநீரும்**

**முதிரா இளைஞர் ஆருயிரும்**

**திருகிச் செருகும் குழல் மடவீர்**

**செம்பொற் கபாடம் திறமினோ!**

என்ற கலிங்கத்துப்பரணி பாடல் அழகுற எடுத்துரைக்கின்றது.

**(ஆ)** ***திருக்குற்றாலக் குறவஞ்சி***

**செண்பகப்பூ : தேனலர் சண்பக வாசம் வானுலகில் வெடிக்கும்**

**குறிஞ்சி மலர் – முல்லை**

**குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக்**

**கொள்ளைக் கொடியில் வைத்துத் தொடுப்போம்**

குறமகளிர் குற்றாலமலைச் சாரலில் பூத்துள்ள குறிஞ்சி மலர்களைப் பறித்து முல்லைக் கொடியில் வைத்துத் தொடுத்து அணிகின்றனர்.

**பிற்காலக் கவிதைகள்**

19, 20 ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த பிற்கால கவிதைகளிலும் மலர்களின் மதிப்பு குறையவில்லை. அவை பல துறைகளிலும் ஆட்சி பெற்றுள்ளன.

**(அ)** ***பாரதியார் கவிதைகள்***

**வெள்ளைத் தாமரை**

**வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்**

**வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்**

பாரத தேவி பொற்றாமரை மாலை புனைந்தவர்.

**(ஆ) பாவேந்தர் பாரதிதாசன்**

**சிரித்த முல்லை**

**வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்**

**சோலை நடுவில் சொக்குப் பச்சைப்**



*செங்காந்தள் - இயற்கை*

**பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்தது**

**குலுக்கென்றுசிரித்த முல்லை**

**மலர்க்கொடி கண்டேன்; மகிழ்ச்சி கொண்டேனே (அழகின் சிரிப்பு ப..27)**

புதுக் கவிதைகள் இருபதாம் நூற்றாண்டில் தோன்றியவை. மரபுக்கவிதையின் பரிணாம வளர்ச்சியாக இலக்கண கட்டுப்பாட்டைப் புறக்கணித்து எழுந்தவை. இலக்கணத்தைப் புறக்கணித்தப் போதிலும் அவை மலர்களைப் புறக்கணிக்கவில்லை. தக்க இடங்களில் மலர்கள் மலர்ந்துள்ளன.

**நானிலப் பூக்கள்**

தமிழ் இலக்கியங்கள் நிலத்தை நான்கு வகையாகப் பிரிக்கின்றன. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இதனை,

**மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும்**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**

**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே (தொல் – சூத்திரம் 5)**

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். மனிதனது வாழ்வு மலையில் பிறந்து அருவியோடு காட்டில் குதித்தது. அருவி ஆறாக ஆறு வழியாக வயலைச் செய்தது. ஆற்று நீர் ஆற்றலொக்கோடு ஓடிக் கடலில் கலந்தது. இவ்வாறு மலை, காடு, வயல், கடல் என்ற வேறுபாடுகளை உடைய நான்கு நிலமே உலகம் எனக் கண்டு உலகை 4 நிலம் நானிலம் என்றனர் தமிழர். இவற்றுடன் வெப்பமும் மணலும் பாறையும் நிறைந்த கரடு நிலத்தை பாலை என உரைத்தனர். எனவே நிலம் ஐந்தாயிற்று. இங்கு நிகழும் ஒழுக்கங்கள் '**அன்பின் ஐந்திணை**' என அகப்பொருள் நூல்கள் கூறப்பட்டன. இந்நிலங்கள் பூக்களால் பெயர் பெற்றது என்பர்.

**குறிஞ்சி**

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். மலையில் மலைச்சாரலில் பசு மாடு போல் வளர்ந்து மலரும் மலர்களுள் முதன்மையானது குறிஞ்சி. பல்லாண்டு



*செங்காந்தள்- இயற்கை*

இடைவெளிகளில் கோடிக்கணக்காக ஐந்து வண்ணங்களில் பூத்துக் குலுங்குவது குறிஞ்சிமலர். குறிஞ்சி மலர் மலையின் தனித்தன்மை வாய்ந்த பூவாக விளங்குவதைக் கண்டு தமிழர்கள் இது வளரும் மலை நிலத்திற்குப் குறிஞ்சி என்றே பெயரிட்டனர். ஐவகை நிலங்களும் அவற்றில் பூக்கும் பூக்கள் பெயர் பெற்ற காரணக்குறி என்பர் இளம்பூரணர். முல்லை, குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரண குறியோ எனின் ஏகதேச காரணம் பற்றி, முதல் ஆசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப்படும். என்ன காரணம் எனின்;

**நெல்லோடு**

**நாழி கொண்ட நறுவீ முல்லை**

**அரும்பவிழ் அலரிதூஉய் (முல்லைப்பாட்டு: 8-10)**

என்றமையால் காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது.

**கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு**

**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்தொகை-3)**

என்ற வழி, மை வரை உலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்தது.

**இறால் அருந்திய சிறு கிரல் மருதின்**

**தாழ் சினை உறங்கும் தண் துறை ஊர! (அகநானூறு-286)**

என்ற வழி, தீம்புனல் உலகிற்கு மருதப்பூ சிறந்தமையாயினும்,

**பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்**

**இன மீன் இருங் கழி ஓதம் மல்குதொறும்**

**கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும்**

என்ற வழி பெருமணல் உலகிற்கு நெய்தல் பூ சிறந்தமையாயினும் என்னும் இளம்பூரணர் கூற்று பூக்கள் பூத்து இருப்பதைச் சிறப்பு பெறுவதைக் காரணமாக கொண்டு அவள் பெயர் பெற்றன என்பதைப் புலப்படுத்துகிறது.

**முல்லை**

காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலம் எனப்பட்டன. முல்லை மலர்கள் இங்கு சிறப்பாக மலர்ந்து இருத்தலின் முல்லை நிலம் எனப்பட்டது. **முல்லை சான்ற முல்லை யம்**


*செங்காந்தள் - இயற்கை*

**புறவின்** என்ற பாடல் தொடரின் நிலத்திற்கு முல்லை எத்துணைச் சிறந்தது என்பதை உணர்த்தும்.

மழை நிலத்தை விடுத்துக் காடுகள் நிறைந்த புன்செய் வெளிகளில் குடியேறிய மக்கள் செறிந்த குளிர்ந்த மலர்ச்சோலை கண்டனர். அவற்றிடையே வளர்ந்து தழைத்து பச்சைபசேலென நீக்கமறப் படர்ந்து, வெள்ளை வெளேரென பூக்களைப் பூத்து, பொலிந்து தழைத்திருந்த, முல்லைக் கொடிகள் அவர்கள் உள்ளங்கைகளைக் கொள்ளை கொண்டன. அந்நிலப்பகுதியை 'முல்லை திணை' என்ற சொல்லால் குறித்தனர்.

**மருதம்**

ஆறுகள் நீர் வளம் பெருகி பாய்ந்தன, நதிக்கரையில் குடியேறிய மக்களிடையே நாகரீகம் தோன்றியது. நகர்கள் தோன்றின. நகரிலிருந்து தோன்றியது தான் நாகரீகம். மக்கள் உறவைக் கண்டுபிடித்தனர். **உழு** தொழிலே உலகத்திற்கு அச்சாணி ஆயிற்று. நீர்வளம் பெருகும் வயல்களின் கரையில் மணம் வீசி மலர்ந்திருந்த மருத மர பூக்கள் அவர்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அந்நிலப்பகுதிக்கு '**மருதம்'** என பெயரிட்டனர்.

**நெய்தல்**

கடலும் கடற்கரையை சார்ந்த கானல்களும் '**நெய்தல்'** எனப் பெயர் பெற்றன. அங்கே கண்ணடித்து பூத்துக் குலுங்கிய நெய்தல் மலர்கள் இவ்வாறு நிலப் பெயர் பெற காரணமாயின. இந்நால்வகை நில மலர்களில் குறிஞ்சிப்பூ கொத்துக் கொத்தாக பூக்கும் நிலப்பூ. முல்லை கொடிப்பூ, மருதம் மரப்பூ, ஆதலால் கோட்டுப்பூ: நெய்தல் நீர்ப்பூ. இவ்வாறு கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ நான்கும் மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல் எனப் பெயர் பெற்றன.

**பாலை**

தொடக்கத்தில் நால்வகை நிலங்கள் தான் இருந்தன. அதனால் நிலம் நானிலம் என பெயரால் வழங்கியது. தமிழகத்தில் பாலை இல்லை. பிற்காலத்தில் பாலைநிலம் தோன்றியது. முல்லையும் குறிஞ்சியும் வெம்மையால் தம் இயல்பு திரிந்து கூடிய நிலை என வழங்கப்பட்டது.

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**

**நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்**



*செங்காந்தள்- இயற்கை*

**பாலை என்பதோர் படிவம் கொள்ளும் (சிலம்பு. காடுகாண்-64-66)**

என்பர் இளங்கோவடிகள். இரு நிலங்கள் திரிந்து உருவான இந்நிலத்தில் பாலை மரங்கள் மிகுதியாக காணப்பட்டன. அதற்கு பாலை மரத்தின் மலர் பெயரையே கொடுத்து பாலை என வழங்கினர். எனவே அந்தந்த நிலங்களில் நிகழும் ஒழுக்கங்களும் ஐந்து ஆயின.

**காதலர் கூடி மகிழும் புணர்தல் ஒடுக்கம் – குறிஞ்சித்திணை**

**காதலன் பிரிவைத் தாங்கிக் காதலி காத்திருக்கும் ஒழுக்கம் – முல்லைத்திணை**

**காதலரோடு ஊடுதல் – மருதத்திணை**

**காதலன் பிரிவாற்றாதுஇரங்கும் ஒழுக்கம் - நெய்தல் திணை**

**காதலனோடு உடன்போக்கில் செல்வது - பாலைத் திணை**

இவ்வாறு ஒழுக்கங்களும் மலர்களின் பெயராலேயே குறிக்கப்பட்டன.

**தெய்வ மலர்கள்**

மலர்கள் மங்கையர் கூந்தலை அலங்கரிப்பன. அது போன்று தெய்வங்களின் திருவடிகளையும் முடிகளையும் அலங்கரிப்பன. மக்கள் தமக்கு விருப்பமான மலர்களைத் தெய்வங்களுக்கும் சூட்டி மகிழ்ந்தனர். அதன்படி சிவபெருமானுக்குக் கொன்றை, திருமாலுக்குத் துளசி, மகிழம் முருகனுக்குக் கடம்பு, விநாயகனுக்கு அருகு; அருகனுக்கு அசோகு; புத்தனுக்குத் தாமரை உமாதேவிக்குக் குவளை திருமகளுக்குச் செந்தாமரை, கலைமகளுக்கு வெண்தாமரை, காளிக்குச் செவ்வலரி, இந்திரனுக்கு மந்தாரம்; கதிரவனுக்குத் தாமரை, சந்திரனுக்கு ஆம்பல் என்பவை விருப்ப மலர்கள் எனக் கூறப்படுகின்றன. சிவபெருமானுக்குச் சின்னமான மலர்க்கொன்றை கண்ணியாகவும் தாயாகவும் அமைந்துள்ளதை,

**கண்ணி கார்நறுங் கொன்றை காமர்**

**வண்ண மார்பில் தாரும் கொன்றை**

என்ற புறப்பாடல் கூறுகின்றது.

**பூவின் பருவங்கள்**

பூவின் வளர்ச்சிப் பருவம் 3 என்பர் திருவள்ளுவர். அவை 1 அரும்பு 2.போது, 3 மலர். தொடக்க நிலையில் செடியில் மொட்டாக தோன்றுவது அரும்பு. அரும்பு படுத்து மலரும் பருவத்து அரும்பாக முதிர்ந்த நிலை 'போது'. போது விரிந்த நிலை மலர். இம்மூன்றையும்



*செங்காந்தள்- இயற்கை*

**காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி**

**மாலை மலரும் இந்நோய் (குறள்.1227)**

என்னும் குறள் கூறுகின்றது. இலக்கிய ஆய்வாளர் மலரின் பருவம் ஏழு என்பர். அவை: 1.நனை 2.அரும்பு 3. முகை 4. போது5. மலர் 6.அலர் 7.வீ என்பன.

**1. நனைப் பருவம்**

இஃது எனது பிறப்பான் தோற்றப் பருவம். உங்களது பாங்கில் கூறினால் அரை குழந்தைப்பருவம். இந்த எனது தோற்றத்தில் ஈரநனைப்புத் தோன்றும். அகத்தேயம் நெய்ப்பு பிடிக்காத நீர் நைப்புள்ள தேன் நனைப்பு தோன்றும். இந்தத் தேன் நனைப்புத்தோன்றுவதை, **நனையினால் தோன்றும் நறா** என்றார் விளம்பிநாகனார். இப்பருவத்தில் தேனுக்குரிய மூல சாறு கருக்கொள்ளும். இச்சாறு பனை, தென்னை இவற்றின் கல் போன்று தினவெழுப்பும் 'மட்டு'(மது) என்பது குறிக்கத்தக்கது.

**2. அரும்பு பருவம்**

அரும்பூவாக வளர்வதற்கு அடிப்படை கொண்டதால் அரும்பூ – அரும்பு எனப் பட்டேன். அரும்புதல் என்பது தோற்றத்தின் மேல் வளர்ச்சியாகும். இது குறுகுறு நடந்து சிறுகை நீட்டும் மழலைப் பருவம் போன்றது. இலக்கியங்களில் பெரிதும் பொதுவில் கையாளப்படும் பெயர்.

**3. முகை பருவம்**

முகி என்னும் சொல் முகம்காணுதல் உள்ள இடம் வெளிப்பெற்று குவிதல் என்னும் பொருள் கொண்டது. 'குவி முறை' 'குவி முகிழ்' - என்றும் அடைமொழியோடு குறிக்கப்படுவது. அரும்பு பருவத்துப் கொழுப்பது முகை. அரும்பிய இதழ்கள் அகத்தே நெகிழ்ச்சி அடைந்து அடிப்பக்கம் சற்று பருத்து தோன்றுதலால் இப்பருவத்தில் முகை எனப்பட்டது. பருவங்களில் யாவும் மனம் உள்ளனவாயினும் முகை பருவமே மணதிற்குத் திறப்பு விழா செய்வது. இது திறப்பு விழாவைக் கண்டு உவந்த குறுங்கீரனார் என்னும் புலவர்.

**.. கொடிமுல்லை**

**முகை தலை திறந்த நாற்றம் (குறுந்தொகை; 342 1-2)**



*செங்காந்தள் - இயற்கை*

என்றார் மனம் திறக்கப்படும் இப்பருவம் உங்களில் காதலுணர்வு திறக்கப்படும் கட்டிளங்காளையர், கன்னியர் இவர்களின் பருவம் போன்றது எனலாம்.

**முகைபருவத்தர் (பரிபாடல்; 10:12)** இப்பருவம் கழிந்து அடுத்த பருவம் மாறும் போது கன்னித்தன்மை போகின்றது. எவரும் தொடாத கன்னி ஆகிய குகைப் பருவமலரைக் காற்றும் வண்டும் எச்சிற் படுத்திக் கன்னிமையைச் சாகடித்து விடுகின்றன. இவ்வகையில் முகை பருவ வாழ்வு குழைந்து நிலைபெறாது அழிகின்றது. தலைவன் பிரிவால் தலைவியின் இளமை பயனின்றி கழிவதைக் கூறும் தோழியை, **முதிர் முகையிற்குக் கூற்றம் போல (கலித்தொகை-17)** என்று கலித்தொகையில் இதனை உவமை கூறிப் பேச வைத்தார். முகை முதிர்ந்து அடுத்த பருவம் பெறுவதால் முகை பருவம் அறிதல் போன்று தலைவியின் இளமை குறைந்து வருகின்றது என்பது இதன் பொருள்.

**4. போதுப்பருவம்**

புகைக்கு அடுத்த பருவம் “போது”. இதனை, **போத்தின்முகை (கலித்தொகை 17:15)** என்பார். இதை கண்ணின் இலைப் பருவத்தில் கற்பை ஏற்கும் பருவம் அதாவது திருமணப் பருவம் எனலாம். **முகில் விரி நாட் போது (சிறுபாண் 188)** என இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

**5. மலர்ப் பருவம்**

**போது அவிழ் புது மலர் (மதுரைக்காஞ்சி)**

**போதுக்கு அடுத்து அவிழும் பருவம் மலர் (தொல். சொல்.சூ.303)**

மலர்ப்பருவத்தில் நிகழும் தாது சேர்க்கையால் கருப் பிடித்துக் காயாகி, கதிராகி, பருப்பாகி, பஞ்சாகி, வித்தாகி, மரமாகி, விளைப் பொருளாய், விழைப் பொருளாய், வளம் பெருகும் ‘மல்' என்னும் வளப்பம் ஆகிறது. அதனால் மலர் என்னும் பெயர் பெற்றது. மல் – என்றால் வளம். வழக்கின் முழு உருவமே மலர்ப் பருவம் ஒரு மங்கலப்பருவம்!

**6. அலர்ப்பருவம்**

**சுடர் நோக்கி மலர்ந்து ஆங்கே**

**படக் கூம்பும் அலர்**

என்னும் கலித்தொகை வரிகளில் கதிரவனை நோக்கி மலர்ந்து மலர் ஆயிற்று. கதிரவன் மறைவதால் கூம்பும் போது அலர் ஆகிவிட்டது. காலையில் மலர். இஃதே மாலையில் அலர்; அலர் ஒரு புகழ்பருவம்.

**7. வீ பருவம்**

மலராக நிறைவாழ்வு பெற்ற மலரானது, **கழன்று உகுவீ (புறம் 307:5)** என்றபடி காம்பிலிருந்து கழன்று கீழே வீழ்ந்து,

**குவிகுழை கழன்ற**

**ஆலி ஒப்பின்தூம்புடைத் திரள் வீ**

என்றபடி காம்பின் இணைப்பிலிருந்து கழன்றதால் அடியிலுள்ள துளையுடன் காட்சி தருகிறது. வீ-என்னும் சொல் நீங்குதல், வீழ்தல் என்னும் பொருள்களைத் தருகிறது. வீ என்னும் இப்பருவம் ஒன்றியதன்று. ஆகையால் தனித்து நிற்கும் பருவம் ஆகின்றது. எனவே 'வீ' பருவம் இறுதிப்பருவம். இவ்வாறு மலரின் வாழ்க்கையை ஏழு பருவங்களாக வகுத்தது பொருந்துமா என்பது ஆராய்ச்சிக்குரியது.

**பூக்கள் பற்றிய அரிய செய்திகள்**

வண்டு என்ற ஒன்று, மலர் என்ற ஒன்று இல்லை எனவும், உண்டு எனவும், இரு வேறு கருத்துகள் நிலவுகின்றன. வண்டுகள் உண்ணாத மலர்களும் உண்டு என்று பெரும் புலவர்களின் இலக்கியங்கள் பேசுகின்றன. காந்தள் மலரில் வண்டுகள் மொய்த்தது இல்லை என்பதை,

**சுரும்புமூசாச் சுடர்ப்பூங் காந்தள்**

என திருமுருகாற்றுப்படை (43) குறிப்பிடுகின்றது.

தாமரை கதிரவன் வரவால் மலரும், பனியால் கருகும், சந்திரன் வரவால் குவியும். அல்லிமலர் சந்திரன் வரவால் மலரும், காலையில் கதிரவன் வரவால் குவியும்.

ஓர் இளைஞன் முல்லை மலரை ஒரு பெண் கூந்தலில் சூடி விட்டால் அவள் அவனுக்கு உரியவள் ஆகிவிடுவாள். மலர்கள் எல்லாவற்றிலும் குறிஞ்சிமலர் சிறந்தது. உலகமெல்லாம் அடங்கிக் கிடக்கும் நள்ளிருளில் நொச்சி மலர் அவிழ்ந்து விழும்.

முல்லைக்கொடி வளர்ந்து பூ பூக்கும் போது ஒரு பெண் கன்னிமைத் தன்மை அடைவாள். முல்லை பூத்திருப்பது அவள் கன்னிமை அடைந்துவிட்டால் என்பதைக்



*செங்காந்தள் - இயற்கை*

குறிக்கும்.முல்லை மலர் கற்புக்கு அடையாளம். எனவே அது கற்பு முல்லை என சிறப்பிக்கப்பட்டுள்ளது. இல்லங்களில் வைத்து வளர்ப்பது பெருவழக்கு. இதனை இல் வளர் முல்லை என இலக்கியங்கள் குறிக்கின்றன. இறை வழிபாடு செய்யும் போது நெல்லையும் அரும்ப விழுந்த முல்லை மலரையும் தூவுவது மரபு.

அல்லி மலரின் பொகுட்டில் எண்ணற்ற வெண் சிறு கடுகு போன்ற விதைகள் இருக்கும். கைம்பெண்கள் இதை உணவாக உண்பர்.

போர்வீரர்கள் ஒவ்வொரு திணைக்கும் உரிய வெவ்வேறு பூக்களை அணிவர். இவற்றை அரசன் வழங்குவான். பாணர்கட்கு பொற்பூவும், பாடினிக்கும் பொன்னரி மாலையும் மன்னர்கள் பரிசிலாக வழங்குவர்.

உழவர்கள் வயலில் உழுவதற்கு பொன்னேர் பூட்டும் போது நொச்சித்தழை மாலையை சூடிக் கொள்ளுதல் மரபு. வாகைப்பூ வெற்றியின் சின்னம் போரில் வெற்றி பெற்றோர் வாகைப் பூ சூடுவர். வாழைப்பூவில் பிஞ்சைக் காண்பது அரிது. அம்மரத்தில் நள்ளிரவில் பிஞ்சு தோன்றி சில நாழிகையில் வளர்ந்து காலையில் காய் ஆகிவிடும்.

கொன்றைக் காயை துளையிட்டு உள்ளே உள்ள விதைகளை எடுத்துவிட்டு ஊதுகுழலாகப் பயன்படுத்தினர். தாழை மலர் தாது மணத்தூளாகப் பயன்பட்டது. தாழை விழுதுகளை கயிறாக புனைந்து மகளிர் ஊஞ்சலாடினர். மலர் நறுமணம் கமழ்ந்து மகளிர் கூந்தலை அலங்கரித்தது.

புன்னை மரம் கருநிற கிளைகளை உடையது. இலையும் கரும்பச்சை அரும்பு மலரும் வெனண்மையானவை. தாது பொன்னிறம் எனவே இம்மரம் நாள் நிறக் கடிகை எனக் குறிக்கப்பட்டது. மயிலை மலர் நள்ளிரவில்தான் பூத்து மணம் பரப்பும். எனவே இது நள்ளிருள் நாறி என பெயர் பெற்றது.

**குறிஞ்சிப் பூக்கள் நூறு - கபிலர்**

1. செங்காந்தள்
2. ஆம்பல்
3. அனிச்சம்
4. குவளை
5. குறிஞ்சி
6. வெட்சி
7. செங்கொடுவேரி
8. தேமா
9. மணிச்சிகை
10. உந்தூழ்



*செங்காந்தள் - இயற்கை*

11. கூவிளம் (வில்வம்)
12. எறுழம்
13. சுள்ளி
14. கூவிரம்
15. வடவனம்
16. வாகை
17. குடசம் (வெட்பாலை)
18. எருவை (கோரை)
19. செருவிளை (காக்கணம், சங்கு)
20. கருவிளை
21. பயினி
22. வானி(ஓமம்)
23. குரவம்
24. பசும்பிடி (இளமுகிழ்)
25. வகுளம் (மகிழம்)
26. காயா
27. ஆவிரை
28. வேரல் (சிறு மூங்கில்)
29. சூரல்
30. பூளை
31. கண்ணி (குன்றிமணி)
32. குருகிலை (முருங்கிலை)
33. மருதம்
34. கோங்கம்
35. போங்கம்
36. திலகம்
37. பாதிரி
38. செருந்தி
39. அதிரல் (புனலி)
40. சண்பகம்
41. கரந்தை
42. குளவி (காட்டு மல்லிகை)
43. கலிமா
44. தில்லை
45. பாலை
46. முல்லை
47. குல்லை
48. பிடவம்
49. யாரோடும்
50. வாழை
51. வள்ளி
52. நெய்தல்
53. தாழை (தென்னம்பாளை)
54. தளவம்
55. தாமரை
56. ஞாழல்
57. மௌவல்
58. கொகுடி
59. சேடல் (பவளமல்லிகை)
60. செம்மல்
61. செங் குரலி
62. கோடல்
63. கைதை (தாழை)
64. வழை (சுரபுன்னை)



*செங்காந்தள் - இயற்கை*

65. காஞ்சி
66. நெய்தல்
67. பாங்கர்
68. மரா (கடம்பு)
69. தணக்கம் (நுணா)
70. ஈங்கை
71. இலவம்
72. கொன்றை
73. அடும்பு
74. ஆத்தி
75. அவரை
76. பகன்றை
77. பலாசம்
78. பிண்டி
79. வஞ்சி
80. பித்திகம்
81. சிந்துவாரம் (நொச்சி)
82. தும்பை
83. துழாய் (துளசி)
84. தோன்றி
85. நந்தி (நந்தியாவட்டம்)
86. நறவம்
87. புன்னாகம்
88. பாரம் (பருத்தி)
89. பீரம் (பீர்க்கு)
90. குருக்கத்தி
91. ஆரம் (சந்தனம்)
92. காழ்வை (அகில்)
93. புன்னை
94. நரந்தம் (நாரத்தம்)
95. நாகம்
96. நள்ளிருள் நாறி (இருவாட்சி)
97. குருந்து (காட்டெலுமிச்சை)
98. வேங்கை
99. புழகு (மலை எருக்கு)
100. ஊமத்தம்பூ.

இவ்வாறு குறிஞ்சிப்பாட்டில் கபிலர் கூறப்பட்ட மலர்கள் பாட்டிலுள்ள நிழல் படி இங்கு பெயர் கூறப்பட்டுள்ளது. அவற்றுடன் ஊமத்தம் பூவையும் சேர்த்து மலர்கள் நூறாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

பண்டைய இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை மற்றும் காப்பியங்களில் முதன்மைப்பெற்ற சிலப்பதிகாரம் முதல் பாரதிதாசன் கவிதை வரை மலர்கள் ஆட்சிபெற்ற பாடல்கள் பற்றியும், பூக்களின் சிறப்பு, நானிலப்பூக்கள், பூவின் பருவங்கள், பூக்கள் பற்றிய அரிய செய்திகள் ஆகியவை இவ்வாய்வுக்கட்டுரையின் கீழ் ஆராயப்பட்டுள்ளது.



*செங்காந்தள் - இயற்கை*

**பார்வை நூல்கள்**

[1] முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.

[2] உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டுச் சிறப்பு மலர், 2010

[3] இளங்கோவடிகள்–சிலப்பதிகாரம், உ.வே.சா நூல்நிலையம்,சென்னை,பதிப்பு 2001

[4] முனைவர் பாக்கிய மேரி, வெற்றி நோக்கில் இலக்கணம் இலக்கிய வரலாறு மொழித்திறன், பூவேந்தன் பதிப்பகம், 10/2 சீனிவாசா சாலை, மயிலாப்பூர், சென்னை -600004, முதற் பதிப்பு – 2013.

[5] சங்க இலக்கியம் - பாட்டும், தொகையும் தொகுதி-I. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, பாரிநிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு -1996.

[6] சங்க இலக்கியம்: பன்முக ஆய்வு, பதிப்பாசிரியர் முனைவர் இரா.சந்திர சேகரன், மகாகவி பாரதியார் நூலகம், பாரதியார் பல்கலைக்கழகம் (அஞ்சல்), கோவை- 641046 முதற்ப்பதிப்பு-சூன் 2001.

[7] சக்திவேல்.சு – நாட்டுப்புற இயல் ஆய்வு – 1983.

[8] தொல்காப்பியர்., தொல்காப்பியம், இளம்பூரணர் (உரையாசிரியர்), கழக வெளியீடு, 1985.

[9] திருக்குறள் – பரிமேலழகர் உரை-பதிப்பாசிரியர், புலியூர் கேசிகன், பூம்பூகார் பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு – மே, 1993.

# புன்னை மரமும் வரலாற்று நிகழ்வுகளும்

# Chronology and Punnai Tree (Calophyllum Inophyllum)

# 2. Chronology and Punnai Tree (Calophyllum Inophyllum)

**Dr.S.Santhi,** Guest Faculty, Department of History, Alagappa University, Karaikudi.
ORCiD: https://orcid.org/0000-0001-6965-2478
**DOI: 10.5281/zenodo.4591617**

## Abstract

The Punnai tree seems an identity for the Tamils who lived very close to them. Two thousand years ago, the Tamil people lived amidst the Punnai tree. This tree often grows in the river banks and coastal areas that have pure water reservoirs. Moreover, this variety emits the maximum amount of oxygen and spread a good fragrance from its flowers. The people of the Sangam age lived ecologically balanced amid such trees. They trusted them as deities and safeguarded them with ecological awareness. This chapter details the cultural traditions followed by classical Tamil People. It details the Punnai **(Calophyllum Inophyllum)** species geographically and from the quotations taken from the Sangam literary works. There is ample evidence in Tamil literature to prove the chronological events politically and spiritually. The people gave more importance to the trees. It clearly portrayed in the chapter. Today, we are talking about the ecological crisis out of deforestation but Tamil society from the classical to the present age has extended more importance to live under the connections of environment. Hence, this chapter brings out the relationship between Punnai and Tamil culture.

**Keywords:** Tamil people, Tamil culture, Chronology, Punnai Tree, Sangam literary works.

## References

[1] Somasundaranar, P.V. (2007). Purananooru, Saiva Siddantha Noorpathipu Kazhagam, Chennai.
[2] Sivamani, S, (2007). Thirukovilgalum Saivathiru Muraigalum, Chennai.
[3] Rani,N. (2012). Sanga Ilakkia Thoguppu Nerimuraigal, New Century Book House, Ambathur, Chennai.
[4] Saravanakumaran, (2005). Maram Valarpom Valam Peruvom, Jothi Puthaga Nilayam, Chennai.
[5] Samy P.S. (1992). Sanga Noolgalil Marangal, Thirugural Pathipagam, Chennai.
[6] Seenivasan. (1987). Sanga Ilakkia Thavarangal, Tamil Palkalaikazhagam, Tanjore.
[7] Seenivasan. N.(2002). Vinthai Thavarangalum Mooligai Thavarangalum, The General Saplais Company, Chennai.
[8] Sundram. Rama, (1995). Sutrusulal Pathugaphu, Tamil Palkalaikazhagam, Tanjore.
[9] Selvaraj.H. (1960). Tamil Muligaigalin Aaraichi, Trichy.
[10] Jeyaraman.N.V. (1987). Tamil Ilakkiayathil Velanmai, New Century Book House, Ambathur, Chennai.
[11] Tamilvanan (1990) Thavarangalai Pariya Ariviyal Unmaigal. Manimegalai Prasuram, Chennai.
[12] Mazhilenthi. (2003) Sutruchsulaliyal Nokkil Sangath Tamilakam, Thi.Parker, Chennai.
[13] Santhi.Se. (2020) Avudaiyar Kovil Vattara Kalvettukal. Kottravai Veliyedu, Madurai.
[14] Jeyakumar.A (1992) Sutruppura Sulalum Manitha Membadum. Uma Pathipagam, Chennai.

[15] Floral Jeya, S., Saravanakumar, AR., (2019). *Sustainable Environmental Sensitization: An Educational Perspective, International Conference on Impact of Education on Sustainable Environmental Management,* Government College of Education, Pudukkottai, ISBN : 978-93-87865-14-3, PP. 338-340

[16] Neethiperumal, Saravanakumar.AR (2019). *Sustainable Development Towards Environment Control in Modern World, International Conference on Impact of Education on sustainable Environmental Management* , Government College of Education Pudukkottai ISBN 978-93-87865-14-3, PP 351-354

[17] Paavizhi.K., & Saravanakumar, AR., (2019). *Environmental education as a tool for EMS, International Conference on Impact of Education on sustainable Environmental Management*, Government College of Education Pudukkottai, ISBN: 978-93-87865-14-3, pp346-350

[18] Padmini Devi.KR., Saravanakumar, AR., (2019). *Effective Maintenance of Sustainable Development Through Environmental Management System, International Conference on Impact of Education on sustainable Environmental Management,* Government College of Education Pudukkottai, ISBN: 978-93-87865-14-3, PP341-345





# 2. புன்னை மரமும் வரலாற்று நிகழ்வுகளும்

**முனைவர் செ.சாந்தி, கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத் துறை**

**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.**

ORCiD: https://orcid.org/0000-0001-6965-2478

**DOI: 10.5281/zenodo.4591617**

இயற்கையின் சூழலைச் சார்ந்து வாழ்ந்த மக்களின் மரப் பயன்பாட்டை உணர்த்தும் இன்னொரு அடையாளம் புன்னை மரம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வில் ஒன்றெனக் கலந்தது தான் தொன்மையான இப் புன்னை மரங்கள். இம்மரங்கள் அதிகமாக ஆற்றங்கரைகளிலும், கடலோரங்களிலும் காணப்படுகின்றன. இப்புன்னை மரங்கள் நன்னீர் உள்ள நிலங்களில் தான் வளரும் என்று இல்லாமல் மணற்பாங்கான இடங்களிலும் பாதிப்புகள் இன்றி வளரும் தன்மை உடையவை. கோடையில் புன்னைமர நிழலில் அமர இதன் மலர்களின் அற்புத நறுமணம் காற்றில் கலந்து அந்தப் பகுதியையே மணமிக்கதாக மாற்றிவிடும் புன்னை மர நிழலில் சற்று நேரம் அமர்ந்திருந்தால் புன்னை மரக் காற்றில் கலந்துள்ள அதிக அளவு ஆக்சிஜனால் சுவாசம் வளமாகும் என்பதுக் குறிப்பிடத்தக்கது. சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையை கடவுளாக வணங்கி சுற்றுச்சூழலையும் பாதுகாத்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை இலக்கியங்களின் மூலம் நாம் அறிந்த ஒன்றாகும். இக்காலத்தில் தாவரங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து மரங்களை வழிபாட்டிற்குரியதாகவும் காவல் மரமாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

சங்க கால மக்கள் ஒவ்வொரு மரத்திற்கும் ஒரு விதமான முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளனர் என்பதற்கினங்க புன்னைமரம் மருத்துவக்குணம் கொண்ட ஒன்றாகும். மேலும் இம்மரம் சங்க காலத்தில் வங்கக்கடல் எல்லையில் நெய்தல் நிலத்தில் புன்னை மரச்சோலைவனமாக மிழலைக் கூற்றத்தை பாதுக்காப்பு அரணாக அலங்கரித்த ஒன்றாகும். காவல்மரமாக வளர்த்த புன்னையை மிழலைக் கூற்றத்தை ஆட்சி செய்த வேள் எவ்வியின் நண்பன் அன்னி புன்னை மரத்தை வெட்ட திதியன் அன்னி மீது போர் தொடக்க என்னும் பெரும் வரலாற்றுச் செய்திகளை இப்புன்னை மரம் எடுத்துரைக்கின்றது. மேலும் பக்தி இலக்கியக் காலங்கள் வரை இப்புன்னை மரத்தைப் பற்றியத் தரவுகள் பாண்டிய நாட்டிலுள்ள திருப்புனவாசல் சிவன் கோயிலை மையமிட்டு திருஞானசம்பந்தரும் சுந்தரரும் தேவாரப் பாக்களைப் பாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



*செங்காந்தள் - இயற்கை*

**மரங்களும் சங்ககால மரபுகளும்**

சங்ககால மன்னர்கள் மரத்தை காவல் மரங்களாக வழிபட்டுப் போற்றிப் பாதுகாத்தனர். அவை கடிமரம் அல்லது காவல்மரம் எனப்பட்டது. இம்மரம் தெய்வீகத் தன்மை உடையதாகக் கருதப்பட்டது. குறிப்பிட்ட அரசமரபின் மரத்தினை பகைவர் வெட்டினால் அம்மரமே வீழ்ந்ததாக தமிழ் மன்னர்கள் கருதினர். பகையரசனை அக்காவல் மரத்தில் கட்டினால் அம்மன்னன் வெற்றி பெற்றான் எனக் கருதினர். இவ்வகையில் இயற்கைவளமான மரம் முன்னோர்களால் போற்றப்பட்டது. சங்க இலக்கியமான அகநானூறு மக்களின் அகவாழ்வை இயற்கையோடு இணைத்து காட்சிப்படுத்தியுள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகைத் திணைகளின் அடிப்படையில் பாடப்பெற்றுள்ள இந்நூலில் பல்வேறு மரங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இம்மரங்களில் பொதுவாக வாகை, புன்னை, கடம்பு போன்ற மரங்கள் பண்டைய தமிழ் மன்னர்களின் காவல் மரமாக அகநானூற்று இலக்கிய வரிகளில் காணப்படுகின்றன என்பதுக் குறிப்பிடத்தக்கது. மேலும் குறிஞ்சிப்பாட்டில் 'கடியிரும் புன்னை' என்றும், ஐந்திணைக் கருப்பொருளைக் கூற வந்த இறையனாரின் அகப்பொருள் நூல் 'நெய்தல் தினைக்கு மரம் புன்னையும், ஞாலமும் கண்டலும்' என்றும் குறிப்பிடுகின்றது. இதைப் போல ஐங்குறுநூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை, போன்ற இலக்கியங்களிலும் சிறப்பித்துக் சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ளது.

பண்டையத் தமிழ் மன்னர்களின் காவல் மரமாகக் கருதப்பட்ட வாகை, புன்னை, கடம்பு முதலான மரங்களில் நன்னன் என்பவனின் காவல் மரமான வாகை மரமானது வாகைப் பெருந்துறை என்ற போர்க்களத்தில் காணப்படுகிறது. காவல் மரங்கள் பொதுவாக ஊர் புறத்தே அமைப்பது பண்டைய மக்களின் வழக்கம் ஆனால் நன்னனின் காவல் மரமான வாகை போர்க்களத்தில் இருந்ததாகப் பாடப்பட்டுள்ளது. மேலும் தொல்காப்பிய நூற்பாவில் "உன்ன நிலை உன்னம்" என்பதற்குச் சிறிய இலைகளை உடைய மரம் என்று பொருள். அதாவது போருக்குச் செல்லும் போது வீரர்கள் அனைவரும் போரில் வெற்றி கிட்டுமாயின் மரம் தளிர்க்கும் என்றும் தோல்வி வருமாயின் தளிர்கள் வாடிநிற்கும் என்றும் குறிக்கேட்பர் என தொல்காப்பியர் காவல்மரம் பற்றி தனது இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளார். மேலும் சங்க இலக்கியத்தில் தலைவனோடு உரையாடும் தலைவி அருகில் புன்னைமரம் இருப்பது கண்டு நாணப்பட்டாள். தலைவன் அவளை ஏன் நாணம் கொண்டாய் என்று கேட்க அதற்குத் தலைவி அம்மரமோ எனக்குச்



*செங்காந்தள்- இயற்கை*

சகோதரி முறை வேண்டும் என்கிறாள். இப்படிக் குடும்பத்தில் ஒருவராக மரத்தை பாவிக்கும் வழக்கம் அன்றைக்கு இருந்துள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

**புன்னை மரம்**

புன்னையைப் பறறியச் செய்திகள் சங்க இலக்கியத்தில் அதிகமான பாடல்வரிகளில் காணப்படுகின்றன. புன்னை மரம் அழகிய சிறுமரமாகும். இம்மரம் கடரோலப்பகுதியான நெய்தல் நிலத்தில் மிகுதியாக காணப்படும். இதன் அரும்புகள் நறுமணம் கொண்ட வெள்ளிய முத்தை ஒத்தவை. மேலும் இதன் பூர்வீகம் கிழக்கு ஆப்பிரிக்கா, பின் இந்தியாவின் தென் கடற்கரையோரங்களிலும், மலேசியா, மாலத்தீவு, ஆஸ்த்திரேலியா, கவாய் தீவுகள், புயூஜி தீவு, பிலிப்பைன்ஸ், அமரிக்கா, உகந்தா போன்ற நாடுகளுக்குப் பரவிற்று. இம்மரம் இந்தியாவில் தமிழ் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்துள்ளது. இம்மரத்தின் பெயர்களை கீழ்க்கண்டவாறு குறிப்பிடப் பெறுகின்றன.

- சங்ககால இலக்கியப் பெயர் - புன்னை
- பக்தி இலக்கியக் காலப்பெயர் - நாகம், புன்னை
- உலக வழக்குப் பெயர் - புன்னை
- ஆங்கிலப்பெயர் - அலெக்சாண்டிரின் லொரல்
- தாவரப் பெயர் - கலோபில்லம் இனொபில்லம்
- சிங்கள மொழியில் இது தொம்ப எனவும்
- மலையாளத்தில் புன்னாகம் எனவும் குறிப்பிடப் பெறுகின்றது.

மேலும், **Phyllum** என்பது இலை, **Calo** என்பது கிரேக்கச் சொல்லாகும் அதன் பொருள் அழகானது, அருமையானது என்பதுப் புன்னைக்கும் பொருந்தும்.

**சங்ககால இலக்கியங்களில் புன்னை**

**நெடுங்காற் புன்னை நித்திலும் வைப்பவும் (சிறுபான் - 149)**

என்னும் பாடல்வரியானது இம்மரத்தை நெடிய தாளையுடையதாகவும் இதன் அரும்புகள் முத்துக்கள் போல விளங்கும் என்பதையும் குறிப்பிடுகிறது

**கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய**
**பைங்காய் தூங்கும் பாய்மணர் பந்தர் (பெரும்பான் 266-267)**

என்னும் பாடல்வரியானது இம்மரத்தை வலையார் வளைத்துக் காலையுடைய புன்னை மரக் கொம்புகளை வெட்டிப் பந்தல் அமைத்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றது.

**புன்னைப் பூப்பெரியது மணம் மிக்கது**
**ஆரம் காழ்வை கடியிரும் புன்னை (குறிஞ்சி - 93)**





என்னும் பாடல்வரியானது மலைநாட்டு மகளிர் இம்மரத்தின் பூவை பயன்படுத்தினர் என்பதைக் குறிப்பிடுகின்றது

**கறவழங்கும் இரும்பௌவத்**

**திறவருந்திய இனநாறை (பொருநர் 203-204)**

என்னும் பாடல்வரியானது நெய்தல் நிலத்தில் கடல் இறாலைத் தின்ற நாரைகள் பூக்களையுடைய புன்னை மரத்தில் தங்கின என்பதைக் குறிப்பிடுகின்றது.

**வரலாற்று நோக்கில் புன்னை மரம்**

வரலாற்று நோக்கில் புன்னை மரமானது சங்க காலத்தில் மிழலைக் கூற்றத்தை ஆண்ட வேள் எவ்வியின் நண்பன் அன்னிக்கும், திதியனுக்கும் குறுக்கை என்னும் இடத்தில் நடந்த புன்னை மரப்போரினைப் பற்றியும், சங்க காலம் மற்றும் பக்தி இலக்கியக் கால புன்னை மரக் காடுகளைப் பற்றியும் இலக்கியச் சான்றுகளோடு பின்வருமாறு குறிப்பிடப்பெறுகின்றன. இவ்வூர் நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் திருகுறுக்கை என்னும் பெயருடன் அழைக்கப்பெற்று வருகின்றது.

வேளிர்களில் சிறந்தக் குறுநில மன்னனாக மிழலைக் கூற்றத்தை ஆண்டுவந்த எவ்வி என்னும் மன்னன் வேள்எவ்வி என அழைக்கப்படுகிறான். எவ்வி ஆண்ட மிழலைக் கூற்றமானது மிழலை நாடு என்றும் மிழலை நாட்டின் தலைநகரமாக நீடுரையும் குறிப்பிடப்படுகின்றன. இதனைப் பற்றியச் செய்திகள் இலக்கியவரிகளிலும் கிடைக்கப்பெறுகின்றன.

**யாழிசை மறுகின் நீடுர் கிழவோன்**

**வாய்வாள் எவ்வி (அகம் - 266)**

என நீடுரையும்

**பொலம் பூண் எவ்வி நீழல் (அகம் - 366)**

எனும் நீழல் ஊரையும் எவ்வியின் ஊர்களாக குறிப்பிடப்படுகின்றன.

நீடுர் என்னும் இப்பகுதி திருவாரூர் மாவட்டத்தில் நீடாமங்கலம் என்னும் பெயருடனும், நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் நீடுர் எனவும் குறிப்பிடப்படும் பகுதிகள் காணப்படுவதைத் தொடர்ந்து இந்நீடுர் மிழலை நாட்டின் தலைநகரமாக இருந்திருக்கக்கூடும் என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்தாக உள்ளது. இம்மன்னன் மிழலைக் கூற்றத்தை ஆண்டுள்ளான் என்னும் செய்தியை இலக்கிய வரிகளின் மூலமும் மேலும் இக்கூற்றம் வயல்வெளிகளாலும், புன்னை மரங்கள் நிறைந்தச் சோலைவனமாகவும் விளங்கியதை கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றன.



*செங்காந்தள்- இயற்கை*

**நெல்லரியும் இருந்தொழுவர்**
**செஞ்ஞாயிற்று வெயில் முனையின்**
**தென்கடல் திரைமிசைப் பாயுந்து**
**திண்திமில் வன்பரதவர்**
**வெப்புடைய மட்டுண்டு**
**தண்குரவைச் சீர் தூங்குந்து**
**தூவற் கலித்த தேம்பாய் புன்னை (புறம் 24)**

**ஓம்பா ஈகை மாவேள் எவ்வி**
**புனலும் புதவின் மிழலையொடும் கழனிக்**
**கயலார் நாரை போர்விற் சேக்கும்**
**பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர் (புறம் 24)**

எனக் குறிப்பிடப்பெற்றுள்ளன. வேளிர்களுக்கும், கோசர்களுக்கும் இடையே அதிகப் பகைமையுற்றிருந்தது. அந்நிலையில் கோசர் வம்சத்தையுடைய திதியனின் குறுக்கை என்னும் இடத்தில் இருந்த புன்னை மரத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அன்னி பேராசைக் கொண்டான். இத்தவறானச் செயலை அன்னி செய்யப்போகிறான் என்பதை உணர்ந்த எவ்வி அன்னிக்கு அறிவுரைத்து வேண்டாம் எனக் கூறியச் செய்தியினை இலக்கியவர்களின் மூலம் குறிப்பிடப்பெறுகின்றன.

**பயங்கெழு வைப்பின் பல்வேல் எவ்வி**
**நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்**
**பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்**
**திதியனெடு பொருத அன்னிபோல**
**விளிகுவை கொல் (அகம் 126)**

**அன்னியும் திதியனும்**

எவ்வியின் அறிவுரைகளையும் மீறி திதியனோடு பகை கொண்ட அன்னி குறுக்கை என்னும் இடத்தில் இருந்த புன்னை மரத்தை வெட்டி வீழ்த்தினான். இதனையறிந்த திதியன் குறுக்கை என்னும் இடத்தில் அன்னியை எதிர்த்து கடும் போரிட்டான். திதியன் போர் வேகம் கொண்டு கடுமையாக அன்னியை தண்டித்து போர் களத்திலையேக் கொன்று வீழ்த்தினான். இதனைக் கண்ட புலவர்கள் நண்பனின் அறிவுரையைக் கேளாது இறந்துவிட்டான் அன்னி என இகழ்ந்துப் பாடியுள்ளனர். இந்நிகழ்வை கீழ்க்கண்டவாறு இலக்கியவரிகளின் மூலம் விளக்கப்படுகின்றன.

**அன்னியும் பெரியன் அவனும் விழுமியன்**
**இருபெரு வேந்தர் பொருகளத்து ஒழித்த**
**புன்னை விழுமம் போல**
**என்னொடு கழியும் இவ் விருவரது இகலே (நற்றிணை 127)**



*செங்காந்தள்- இயற்கை*

**அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்**
**தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிப்**
**புன்னை குறைந்த ஞான்றை வயிரியர்**
**இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே (அகநானூறு . 126)**
**பெருஞ்சீர் அன்னி குறுக்கை பறந்தலைத் திதியன்**
**தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிய**
**நன்னர் மெல்லிணர்ப் புன்னை போலக்**
**கடுநவைப் படீஇயர் (அகநானூறு . 145)**

திதியனுக்கும் அன்னிக்கும் புன்னை மரத்தை முன்னிட்டு நடைபெற்ற போரானது குறுக்கை என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். சங்க கால நிகழ்வுளில் இலக்கியச் சான்றுகளை முன்னிட்டு வரலாற்றுத் தரவுகளில் குறுக்கையும் ஓர் உதாரணமாக இருந்து வருகின்றது. இவ்வூரில் முதலாம் குலோத்துங்கன் கால சிவன் கோயில் ஒன்றும் காணப்படுகின்றது. இக்கோயிலில் தலவிருட்சமாக புன்னை மரம் காணப்படுவது சிறப்புக்குறிய ஒன்றாகும்.

**குறுக்கையும் புன்னையும்**

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் காவிரியாற்றின் வடகரையில் உள்ள திருக்குறுக்கை என்னும் இவ்வூர் புராணக் காலங்களில் அட்டவீரட்டத் தலங்களுல் ஒன்றாகவும், சங்ககாலத்தில் அன்னிக்கும், திதியனுக்கும் ஏற்பட்டப் போரில் அன்னி போர்களத்திலே இறந்துப்படவே ஓர் புன்னை மரத்தை மட்டுமே கொண்டு நடந்த புன்னைப் போர் நடந்தேறிய குறுக்கை என்னும் இவ்விடம் சிறப்புக்குரிய ஒன்றாகும். இச்சங்ககாலத்தில் மக்களால் பயன்படுத்தப்பட்ட கருப்புநிறப் பானை ஓடுகள் களப்பணியின் போது இக்குறுக்கையிலும் கிடைக்கப்பெற்றது முக்கியத்துவம் பெற்றச் சான்றாக அமைகின்றது. சங்க காலத்தைத் தொடர்ந்து கி.பி6ம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தில் சைவ சமயத்தின் வளர்ச்சியில் பன்னிருத் திருமுறைகளில் திருநாவுக்கரசரால் தேவாரப் பாடல்பெற்ற தலங்களுல் ஒன்றாக திருக்குறுக்கையும் குறிப்பிடப்பெற்றுள்ளது. இப்பக்தி இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் நோக்கும் போது திருநாவுக்கரசரின் காலத்திலிருந்தே இத்தலம் இருந்திருக்கக்கூடும் பின்னர் சோழர்களின் காலத்தில் இக்கோயில் முழுவதும் தகர்த்தப்பட்டு இச்சோழர்களின் கலைப்பாணியில் கட்டப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வின் கருத்தாக அமைகின்றது.

சோழர்களின் காலத்தில் பிரிக்கப்பட்ட வளநாடுகளுள் திருக்குறுக்கை என்னும் இவ்வூர் காவிரியின் வடகரையில் விருதுராஜபயங்கர வளநாட்டின் உட்பிரிவுகளுள் குறுக்கை நாடு என்றும், இக்குறுக்கை நாடு விக்கிரமச் சோழ சதுர்வேதி மங்கலம் என்றும், ராஜநாராயணச் சதுர்வேதி மங்கலம் என்றும், இராசாதிராசச் சதுர்வேதி



*செங்காந்தள் - இயற்கை*

மங்கலம் என்றும், குலோத்துங்கச்சோழ நல்லூர், வகூர், கிளிஞ்சாலூர், ஜெயசிங்க்குலகால சதுர்வேதி மங்கலம் என்றும், நித்திய வினோதச் சதுர்வேதி மங்கலம் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. இச்சான்றுகள் முழுவதும் இக்கோயிலின் கல்வெட்டுக்களிலே முழுவதுமாகக் கிடைக்கப்பெறுவது சிறப்புக்குறிய ஒன்றாகும். மேலும் இக்கோயில் கல்வெட்டுகளில் காணப்படும் சோழ மன்னர்களுள் விக்கிரமச் சோழன், இரண்டாம் ராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் போன்ற மன்னர்கள் வழங்கப்பட்டத் தானச் செய்திகளும் காணப்படுகின்றது.

சோழரைத் தொடர்ந்த பிற்காலப் பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளுல் வீரபாண்டிய தேவரின் தனதுக் கடைசி ஆட்சியாண்டு வரை இக்கோயிலுக்கு வழங்கப்பட்டத் தானச் செய்திகள் காணப்படுகின்றது. மேலும் விஜயநகர மன்னர்களுள் இரண்டாம் ஹரிஹரர் மற்றும் கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுச் செய்திகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தத் தரவுகளுள் ஒன்றான 98 வலங்கை மற்றும் 98 இடங்கை சாதியினர் ஒன்றுகூடி அதிகமாக நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டக் கோயிலாகக் காணப்படுவது தமிழக வரலாற்றிற்கு முக்கியச் சான்றாக அமைகின்றது. மேலும் சோழர்காலத்தில் இக்கோயிலுக்கு அனுப்பப்பட்ட அடிமைப் பெண்களும், விஜயநகரக் கால வலங்கை, இடங்கைக் குறித்தத் தீர்மானச் செய்திகள் சிறப்புக்குரிய ஒன்றாகும். இக்கோயில் தருமை ஆதீனத்தின் கோயிலாக செயல்படுவதும், நாயக்கர் கட்டுமான மண்டபங்களைக் கொண்டும் காணப்படுகின்றது. திருமந்திரத்திலும் இக்கோயிலைப் பற்றி குறிப்பிடப்பெற்றுள்ளன. இக்கோயிலின் தரவுகள் தமிழக வரலாற்றிற்கு முக்கியச் சான்றாக அமைகின்றது.

**பக்தி இலக்கியங்கள் காட்டும் புன்னை**

தமிழகத்தில் தேவாரப் பாடல்கள் பாடப்பெற்ற பதினான்கு பாண்டியர் தலங்களுள் ஒன்றான புதுக்கோட்டை மாவட்டத்தின் ஆவுடையார்கோயில் வட்டாரத்தில் திருப்புனவாசல் என்னும் கிராமத்தில் அமைந்துள்ள பழம்பதிநாதர் என்றுக் குறிப்பிடப்பெறும் விருத்தப்புரீஸ்வரர் கோயிலும் ஒன்றாகும். இக்கோயில் வங்கக்கடல் எல்லையில் முததூற்றுக் கூற்றத்தில் புன்னைமரக் காட்டில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வருணித்து இறையுணார்வோடு திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடியுள்ளனர். இதனை பின்வருமாறு இலக்கியத் தோரணையோடு விளக்கப்படுகின்றன. இவ்வூர் சங்ககாலம் முதல் பக்தி இலக்கியக் காலம் வரை புன்னை மரம் நிறைந்தக்காடு ஆதலில் இவ்வூர் புனவாயில் என அழைக்கப்பட்டு வந்தள்ளது தற்போது இவ்வூர் திருப்புனவாசல் என்னும் பெயருடன் குறிப்பிடப்பெற்று வருகின்றது. மேலும் இவ்வூரின் சிவன் கோயிலின் ஸ்தலவிருட்சம் புன்னை மரம் என்பதும்



*செங்காந்தள் - இயற்கை*

குறிப்பிடத்தக்கது. இதைப்போல அம்மன் திருக்கோவில்களில் பிரசித்தி பெற்ற தஞ்சாவூர் மாட்டத்தில் புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில் அமைந்துள்ள ஊர் புன்னை மரங்கள் நிறைந்த சோலை வனமாக இருந்ததால் பண்டைய காலத்தில் இருந்து இவ்வூர் புன்னைநல்லூர் என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

**திருஞானசம்பந்தர்**

**புன்னைநன் மாமலர் பொன்னுதிர்க் கும்புன வாயிலே (திருமுறை. 323)**

புன்னை மரங்கள் பொன்னைப் போன்ற அழகிய மலர்களை உதிர்க்கும் புனவாயில் எனவும்

**கண்டலு ஞாழலும் நின்றுபெ ருங்கடற் கானல் வாய்ப்**
**புண்டரீ கம்மலர்ப் பொய்கை சூழ்ந் தபுன வாயிலே (திருமுறை. 324)**

புன்னை தாழையும் புலிநகக் கொன்றையும் நிற்கும் பெருங்கடற்கரைப் பகுதிகளில் தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கும் பொய்கைகள் சூழ்ந்தப் புனவாயில் எனவும்

**விடையுடை வெல்கொடி யேந்தின னும்விறற் பாரிடம்**
**புடைபட வாடிய வேடத்தா னும்புன வாயிலில் (திருமுறை. 325)**

பகைவர்களைக் கண்டு அஞ்சிய வேடர்கள் புனவாயிலில் மறைந்து வாழ்ந்தனர் எனவும்

**பொங்கர வம்மணி மார்வின னும்புன வாயிலில்**
**கலிபடு தண்டகல் நஞ்சமுண் டகறைக் கண்டனும்**
**புலியதள் பாம்பரைச் சுற்றின னும்புன வாயிலில் (திருமுறை. 326)**

என புலித்தோளை ஆடையாகவும், பாம்புகளை அணிகலன்களாகவும் அணிந்து புனவாயிலில் காணப்படும் சிவபெருமான் எனவும்,

**போருறு வெண்மழு வேந்தின னும்புன வாயிலில்**
**சீருறு செல்வம்மல் கவ்விருந்த சிவலோகனே**
**பொருந்தலர் தம்புர மூன்றுமெய்து புனவாயிலில்**
**பைங்கண்வெள் ளேந்றண்ண லாகிநின்ற பரமேட்டியே (திருமுறை. 327).**

என புனவாயிலில் உள்ள சிவபெருமானின் அணிகலன்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

**இனமிகு தொல்புகழ் பாடலா டடல்எழின் மல்கிய**
**புனமிகு கொன்றையந் தென்றலார்ந்த புனவாயிலே (திருமுறை. 328)**

இறைவனின் பழம்பெரும் புகழைப்பாடும் பாடல்களும் அவற்றிற் கிசைந்த ஆடல்களும் நிறைந்துக் கொல்லைகளில் கொன்றை மரங்களில் தென்றல் தவழ்ந்து வரும் புனவாயில் எனவும்

**நரல்சுரி சங்கொடும் இப்பியுந் திந்நலம் மல்கிய**
**பொருகடல் வெண்டிரை வந்தெறியும்புன வாயிலே (திருமுறை. 329)**



*செங்காந்தள் - இயற்கை*

ஓசை எழுப்பும் சங்குகளும், சிப்பிகளும் பெருங்கடலில் உந்தப்பட்டு அலைகள் மோதும் புனவாயில் எனவும்

**போதவிழ் தண்பொழில் மல்குமந் தன்புன வாயில்**

**பொற்றொடி யாளுமை பங்கன் மேவும் புனவாயிலே (திருமுறை. 330)**

மலர்கள் மொட்டு விழும் சோலைகள் நிறைந்த புனவாயில் எனவும் தேவாரப் பாக்களால் பாடப்பட்டுள்ளன. இப்பகுதி கடல் எல்லையில் புன்னை மரங்கள் சூழ அமைந்திருந்துள்ளன என்பதை இலக்கிய வரிகளின் மூலம் குறிப்பிடமுடிகின்றன.

**செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்**

**புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய் (திருமுறை திருப்பூந்தராய் 1)**

செந்நெல் விளையும் அழகிய வயல்களை உடைய சோலைகளின் அயலிடங்களில் வளமையான புன்னை மரங்கள் உதிர்த்த பூக்கள் வெண்மையான துணியிற் பவளங்கள் பரப்பினாற் போல விளங்கும் திருப்பூந்தராய் என்னும் சீகாழிப்பதியில் என்னும் பாடல் வரிகளும் குறிப்பிடுகின்றன.

**சுந்தரர்**

**பொத்தில் ஆந்தைகள் பாட்டுஅ**

**றாப்புன வாயிலே (திருமுறை 914)**

சோலைகள் நிறைந்த புன்னை மரப்பொந்துகளில் ஆந்தைகளின் பாட்டு ஒழியாத புனவாயிலே எனவும்

**பொருது சாந்தொடு பூசல்**

**அறாப்புன வாயிலே (திருமுறை. 915)**

வேடர்கள் வாணிகச் சத்தத்தோடு போர் செய்தலால் ஆரவாரம் நீங்காத புனவாயிலே எனவும்

**அக்கோடு அரவுஆர்த் தபிரான் அடிக்கு அன்பராய்**

**புக்கர் அவர்போற் றொழியாப் புனவாயிலே (திருமுறை 916)**

சிவனுக்கு அன்பராய் சிவனையே புகலிடமாக அடைந்தவர் அப்பெருமானைப் போற்றுதல் ஒழியாத புனவாயிலே எனவும்

**புற்கென்று தோன்றிடும் எம்பெரு**

**மான்புன வாயிலே (திருமுறை 917)**

கரையிடத்து சிறியக் கற்குன்றுகளும் புதர்களும் வெப்பம் மிகுந்த வெற்றிடமும் பொலிவிழந்துத் தோன்றும் எம்பெருமானது புனவாயிலே எனவும்

**புல்லாய்க் கணம் புக்கொளிக்**

**கும்புன வாயிலே (திருமறை 918)**


*செங்காந்தள் - இயற்கை*

வேடர்கள் தம் வில்லின்கண் தொடுத்த அம்பினால் வெருட்ட வெருண்ட ஓடிய மான் கூட்டம் புகுந்து ஒழிகின்ற புனவாயிலே எனவும்

**புறவங் கூம்பிடப் பொன்புனம்**

**சூழ்புன வாயிலே (திருமுறை 919)**

கள்ளிப் புதரின் வளர்ந்தக் கிளையில் ஏறி நின்றுக் கூப்பிட்டப் புனங்களில் பொன் நிறைந்துக் காணப்படுகின்ற புனவாயிலே எனவும்

**பூசல் துடி பூசல்**

**அறாப்புன வாயிலே (திருமுறை 920)**

வேடுவர்களது போர்ப்பறை ஆரவாரத்தை ஒழியாதப் புனவாயிலே எனவும்

**புள்ளி மானினம் புக்கொளிக்**

**கும்புன வாயிலே (திருமுறை 921)**

புல்தீய்ந்து கொடியகாடு அழிகையினால் புள்ளிமானின் கூட்டம் புகுந்து ஒழிகின்ற புனவாயிலே எனவும்

**புற்றேறிக் கூகூ என அழைக்**

**கும்புன வாயிலே (திருமுறை 922)**

இரையை உண்டக் கரியக் காணங்கோழிகள் ஈயற் புற்றுகளின் மேல் ஏறி நின்று கூகூ எனக் கூப்பிடுகின்ற புனவாயிலே எனவும்

**பொடியோடு மேனியன் பொன்புனம்**

**சூழ்புன வாயிலே (திருமுறை 923)**

நீற்றில் மூழ்கியச் சிவனின் புனங்களின் பொன் நிறைந்துள்ள புனவாயிலே எனவும் திருப்புனவாசலில் உள்ள விருத்தபுரீஸ்வரர் கோயிலின் சிவனைப் பற்றி தேவார இலக்கிய வரிகளில் பாடப்பெற்றுள்ளன.

**புன்னையும் தலவிருட்சமும்**

இந்தியாவில் மரவழிபாடு மிகவும் பழமையானது. அதுவும் தமிழ்நாட்டில் மரங்களைத் கடவுளாகவே வழிபடுகின்றனர். மரங்களின் பயன் கருதியே மரம் தங்கள் வாழ்விற்கும் தாழ்விற்கும் மரத்தின் அருளே பொருள் என நம்பினர். எனவே மரம் இருக்கும் இடத்திற்கும் சென்று வழிபட்டனர். இப்படி பக்தி - இறைவன் பெயர் சொல்லி மனிதன் மரத்தை மதிக்கக் கற்றுக் கொண்டான். அதன் நோக்கம் எந்த மரத்தையும் மனிதன் அழித்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு மரத்தை ஒதுக்கினான். கடவுளின் உருவச் சிலையைத் தனிமரத்தின் அடியில் வைத்து வழிபட்டதினால் தனி மரங்கள் தல விருட்சம் என அழைக்கப்பட்டன.

பண்டைக்காலத்திலிருந்து மனிதர்கள் பஞ்சபூதங்களான நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று, ஆகியவற்றை தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். நாளடைவில்



*செங்காந்தள்- இயற்கை*

இயற்கையோடு இணைந்த மரங்களையும் தெய்வமாக வழிபடத் தொடங்கினர். தொன்று தொட்டுவரும் இந்த வழக்கம் தற்போது ஸ்தல விருட்சங்கள் வடிவில் தொடர்கிறது. இந்து ஆலயங்களில் ஸ்தல விருட்சம் என்று ஒன்று இருப்பதன் நோக்கமே மரங்களை வழிபட வேண்டும் என்பதனால் தான். வேம்பு, அரசு, போன்ற மரங்களின் வரிசையில் புன்னைமரத்திற்கு மிகச்சிறந்த இடம் உண்டு என்பதுக் குறிப்பிடத்தக்கது.

காடுகளை அழித்து நாடுகள் ஊர்கள் உருவாக்கப்பட்டப் பொழுது அவ்வவ்பகுதிகளில் மக்களின் வணங்கும் தெய்வங்களுடன் அப்பகுதியில் இருந்த சிறப்பான மரங்கள் தலவிருட்சமாகப் போற்றி வணங்கப்பட்டன. எனவே ஒவ்வொரு கோயிலும் ஒருதல மரத்துடன் இணைத்து வணங்கப்பட்டதை காணமுடிகிறது.

இந்தியாவின் மற்றொரு சிறப்பான மரமான ஆலமரம் ஞானத்தை அளிக்கும் மரமாகக் கருதப்பட்டதால் சிவனின் ஒருரூபமாக விளங்கும் தென்திசைக் கடவுளான தட்சிணாமூர்த்தி ஞானத்தை கற்பிக்கின்ற இடமாக விளங்கி கோயில்களின் தென்பகுதி மாடக்குழிகளில் இடம்பெற்றன. இச்சிற்பமும் கூட மரத்தடியில் கற்றுக் கொடுக்கும் கல்விப் போதனைகளை எடுத்துரைக்கும் விதமாக அமையப்பெற்றிருப்பது சிறப்புக்குரிய ஒன்றாகும்.

தமிழகத்தில் தொன்மையான கோயில்களான தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் ஒவ்வொன்றும் தலவிருட்சங்களுடன் காணப்படுகின்றன. காட்டுப் பகுதிகளில் பெரும்பாலும் சிவாலயங்கள் இருந்தமையால் அவை ஆரண்யங்கள் அல்லது காடுகள் என்றும் வழங்கப்பட்டன. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் இக்கோயில்களின் அமைவிடம் அமைந்திருந்ததுடன் ஒவ்வொரு கோயிலும் ஐம்பூதங்களில் ஒன்றான நீரைப் பாதுகாக்கும் வகையில் கோயில்களுடன் இணைந்த குளங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தன. எனவே அவற்றை மக்கள் கடவுளர்களிடம் தொடர்புபடுத்தி போற்றிப் பாதுகாத்தனர். புன்னை மரத்தை ஸ்தல விருட்சமாகக் கொண்ட ஆலயங்கள் தமிழகத்தில் பல உள்ளன.

கும்பகோணம் அருகில் திருப்புறம்பயம், திருப்புள்ளபூதங்குடி, திருவாரூருக்கு அருகில் உள்ள திருப்புகலூர், திருநெல்வேலிக்கு அருகில் உள்ள சங்கரன்கோவில், சென்னை திருமயிலை உள்ளிட்ட ஸ்தலங்களின் விருட்சமாக புன்னை மரம் உள்ளது.

**மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்**
**கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். (இரண்டாம்திருமுறை. பா.1)**

இந்தப்பாடல் திருமயிலை கபாலீஸ்வரரை நினைத்து திருஞான சம்பந்தர் பாடிய பாடலாகும்.



*செங்காந்தள் - இயற்கை*

**மரங்களின் பாரம்பரியமும் பயன்பாடும்**

மரங்களுக்கும் மக்களுக்கும் ஒரு இணக்கமான பாசப்பிணைப்பு எப்போதுமே இருந்துள்ளது. ஆனால் இன்றைக்கு அப்படி ஒரு மரம் இருந்ததா என்று கேட்பது மாதிரி ஆகிலிட்டது. மரங்களை இழந்து நாம மழையையும் இழந்து விட்டோம். உசில் மரங்கள் நிறைஞ்சு இருந்த இடம்தான் உசிலம்பட்டி. இலுப்பை மரங்கள் நிறைஞ்ச பகுதி இலுப்பையூர், விளாமரம் இருந்த இடம் விளாத்திகுளம், வாகை மரங்கள் செழித்த பகுதி வாகைகுளம். இன்னும் ஆலங்குளம், அத்தியூர், அரசம்பட்டி, தாண்டிக்குடி, வேப்பங்குளம், தாழையூத்து இப்படி பல ஊர்ப் பெயர்களில் மரங்கள் இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு அந்தந்த ஊர்களிலேயே அந்த மரங்களை காணோம். அதற்கு பதிலாக தைல மரம், சீமைக் கருவேலம் 'தூங்கு மூஞ்சி' ன்னு விதவிதமா வெளிநாட்டு மரங்கள் ஆக்கிரமிப்பு. இந்த மரங்கள் சீக்கிரமே வளர்ந்து விடும். அதிக அளவு நீரையும் உறிஞ்சும். இதனால புல்வெளிகளுக்கு நீர் கிடைக்காமல் அழிய, அதை நம்பி வாழும் கால்நடைகளும் குறைந்து, உயிர் சுழற்சியே மொத்தமாக மாறிவிட்டது.

பார்த்தீனியம் செடிகள் நீர்நிலைகளை அழித்து விட்டன. இப்படி வளரும் மரங்களில் காய்கள், பழங்கள் எதுவுமே வராது. அதனால் பறவைகளும் இல்லாமல் போய் விட்டன. உசில் மரம் வறட்சியை தாங்கி வளரும். எந்த வெப்பமான பூமியிலும் மனிதர்களுக்கு நல்ல நிழல் தரும். வேங்கை மரம் இன்றைக்கு அரிதாகி விட்டது. இந்த மரத்தில் ஒரு குவளை செய்து, அதில் தண்ணீர் ஊற்றி வைத்தால் கொஞ்ச நேரத்தில் அது சிவப்பாகி விடும். இந்த தண்ணீரை குடித்தால் சர்க்கரை நோய் கட்டுக்குள் இருக்கும் என்கிறது ஆயுர்வேதம். மருத மரத்தின் பாகங்களிலிருந்து புற்றுநோயை தடுக்கும் மருந்து தயாரிக்கும் ஆராய்ச்சி நடக்கிறது.

இலுப்பை மரத்திலிருந்து எடுக்குற இலுப்பை எண்ணெய், தமிழர் கலாசாரத்தில் ரொம்பக் காலமாக விளக்கேற்ற பயன்பட்டிருக்கிறது. இடுப்பு வலிக்கும் ஏற்ற மருந்து இது. "தோதகத்தி" மரத்தில் எந்தப் பொருள் செய்தாலும் அது காலத்துக்கும் அழியாது. குஜராத் பக்கம் கடலுக்குள்ள மூழ்கிப்போன ஒரு நகரத்தை சமீபத்துல கண்டுபிடித்தனர். அங்கு தோதகத்தி மரத்துண்டு கிடைத்திருக்கிறது. 4 ஆயிரம் வருடத்துக்கு முன்னாடியே இங்கிருந்து அந்த மரங்களை கொண்டு போயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் புன்னை மரத்தின் சிறப்பு னஎ;பது சங்க காலம் தொடர்ந்து பக்தி இலக்கியக் காலம் வரை சிறப்புற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது.

**ஆயுர்வேதம்**

தமிழ் மருத்துவத்தில் புன்னை மரப்பூக்கள் கண் நோய்களை ஆற்றும் என்றக் குறிப்புகளும் இலக்கியங்களில் உண்டு புன்னை விதையையும் பருப்பையும் அரைத்துப்



*செங்காந்தள் - இயற்கை*

பற்று போட முடக்கு வாதம் மற்றும் கீழ் வாதம் விலகும் என்பதுக் குறிப்பிடத்தக்கது. மேலும் சளி, ஒற்றைத் தலைவலி, தலைசுற்றல் கண் எரிச்சல், தோல் நோய், வயிற்றுப் புண், வெட்டை, மேகப்புண், சிரங்கு, குஷ்டம் ஆகியவைகளைக் குணப்படுத்தும்.

**தொகுப்புரை**

சங்ககாலத் தமிழர்கள் தங்களை சுற்றி இருந்த தாவரங்களைப் பற்றிய நுணுக்கங்களை நன்கு அறிந்து வைத்துள்ளனர். அவற்றுள் பலவகை மரங்களுள் புன்னை மரமும் ஒன்றாகும். மரத்தை வெட்டியதன் காரணமாக அன்னியை போர்களத்தில் கொன்றத் திதியனின் கோபத்தை நோக்கும் போது ஒரு மரத்திற்கு எவ்வளவு முக்கியத்தவம் கொடுத்துள்ளான் மரத்தை எந்தளவிற்கு நேசித்துள்ளான். அம்மைந்தனின் இச்செயல் அக்கால மக்கள் இயற்கைக்கு கொடுத்த முக்கியத்துவத்தையும் மரங்களை தெய்வங்களாக வணங்கிய செய்தியினையும் கூட இவ்விலக்கியச் சான்றுகளின் மூலம் உண்மைச் செய்தியாக அறிய முடிகின்றது. அன்னியின் செயலை நோக்கும் பொழுது திதியனை பலிதீர்க்கும் எண்ணம் எவ்வகையிலாவது இருந்திருக்கலாம் ஆனால் திதியனின் காவல் மரத்தை வெட்டி வீழ்த்தினால் தான் திதியனுக்கு கோபம் வரும் என்று பலிதீர்த்த செய்தியானது திதியன் மரமாக மட்டும் பார்க்காமல் அம்மரத்தை தனது நண்பனாகவும் காவல் மரமாகவும் மரத்தின் பயனை உணர்ந்து செயல்பட்டுள்ளான். இப்படியெல்லாம் மரங்கள் சங்ககால வரலாற்றுச் செய்திகளில் இடம்பெற்றிருப்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். இதைப்போல இயற்கையைப் பாதுகாக்கும் சங்ககால மக்கள் சுற்றுச்சூழலையும் மிகவும் அழகாக பாதுகாத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பக்தி இலக்கியக் காலச் செய்திகளில் புன்னைமரம் வங்கடல் எல்லையில் நெய்தல் நிலத்தில் மிழலைக் கூற்றத்தை கடல் அலைகளில் நரல்சுரி சங்குகள் உந்தப்பட்டு தென்றல்வீசும் ஒரு சோலைவனமாக அமைந்துள்ளது என்பதை உணரமுடிகின்றது. இச்செய்திகளை நோக்கும் போது நமது முன்னோர்கள் இயற்கையை பாதுகாத்து ஒவ்வொரு மரத்தையும் கடவுளாக வணங்கியுள்ளனர். அதைப்போல நாமும் இயற்கையைப் பாதுகாத்து மரம் வளர்ப்போம் மழை பெறுவோம். என்னும் பழமொழிக்கேற்ப மரங்களை வளர்த்து வளங்களை பெருக்கி சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும். மண்ணரிப்பைத் தடுக்க வேண்டும். பசுமையை உருவாக்க வேண்டும்.

இன்றைய நவீனமயமாக்கலில் நாம் காடுகளையும், இயற்கை வளங்களையும் இழந்துவிட்டோம். முன்னோர்கள் கடவுளாகப் பேணிக்காத்த இயற்கை வளங்களை பாதுக்காக்க தவறிவிட்டு இன்று செயற்கை வாழ்வில் சிக்குண்டு கிடக்கிறோம். மரங்களை வெட்டிவிட்டு குளிர்சாதன பெட்டிகளை வாங்கும் மூடர்களை கண்ணை விற்று ஓவியம் வாங்குபவர்கள் என்பதற்கினங்க 'வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலார் வரிகளை இனியாவது உணரவேண்டும். மரம், செடி, கொடிகளின் பயன்களை உணர்ந்து மீதம் உள்ள மரங்களையாவது பாதுக்காக்க



*செங்காந்தள் - இயற்கை*

வேண்டும். அடுத்த தலைமுறைக்கு வாழக்கூடிய உலகத்தை விட்டுச் செல்வோம். இதை ஒரு வரலாற்றுச் செய்தியாக மட்டும் பார்க்காமல் இதன் மையக்கருத்தை எடுத்துக்கொண்டு மரத்தின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் சுற்றுச்சூழல் சார் பதிவுகள் இதைப்போன்ற கருத்துருவாக்கங்களிலும் அமையப்பெறுகின்றன. மேலும் இலக்கியங்களில் பதிந்துக் கிடக்கும் வரலாற்றுச் செய்திகளை வெளிக்கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தை மையமாகக் கொண்டு இக்கட்டுரையானது அமையப்பெறுகின்றது.

**துணைநூற்பட்டியல்**


[1] சோமசுந்தரனார் பொ.வே (2007). புறநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை.

[2] சிவமணி எஸ், (2007). திருக்கோயில்களும் சைவத் திருமுறைகளும், சென்னை.

[3] இராணி. ந, (2012). சங்க இலக்கியத் தொகுப்பு நெறிமுறைகள், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட் சென்னை.

[4] சரவணகுமாரன், (2005). மரம் வளர்ப்போம் வளம் பெறுவோம், ஜோதி புத்தக நிலையம் சென்னை.

[5] சாமி பி.எஸ, (1992). சங்க நூல்களில் மரங்கள், திருக்குறள் பதிப்பகம், சென்னை.

[6] சீனிவாசன், (1987). சங்க இலக்கியத் தாவரங்கள், தமிழப்பல்கலைகக்ழகம், தஞ்சாவூர்.

[7] சீனிவாசன். என், (2002). விந்தைத் தாவரங்கள் மூலிகைத் தாவரங்களும், தி ஜெனரல் சப்ளைஸ் கம்பெனி சென்னை.

[8] சுந்தரம். இராம, (1995). சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தமிழப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

[9] செல்வராஜ். எச், (1960). தமிழ் மூலிகைகளின் ஆராய்ச்சி, தங்கம் பதிப்பகம் திருச்சி

[10] செயராமன். ந.வி, (1987). தமிழ் இலக்கியத்தில் வேளாண்மை ,நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிலிட் சென்னை

[11] தமிழ்வாணன் (1990). தாவரங்களைப் பற்றிய அறிவியல் உண்மைகள், மணிமேகலை பிரசுரம், சென்னை.

[12] மகிழேந்தி, (2003) சுற்றுச்சூழலியல் நோக்கில் சங்கத் தமிழகம், தி.பார்க்கர் சென்னை.

[13] சாந்தி.செ. (2020). ஆவுடையார்கோயில் வட்டாரக் கல்வெட்டுகள், கொற்றவை வெளியீடு, மதுரை.





[14] ஜெயக்குமார்.அ (1992) சுற்றுப்புற சூழலும் மனித மேம்பாடும், உமா பதிப்பகம், சென்னை.

[15] Floral Jeya, S., Saravanakumar, AR., (2019). *Sustainable Environmental Sensitization: An Educational Perspective, International Conference on Impact of Education on Sustainable Environmental Management,* Government College of Education, Pudukkottai, ISBN : 978-93-87865-14-3, PP. 338-340

[16] Neethiperumal, Saravanakumar.AR (2019). *Sustainable Development Towards Environment Control in Modern World, International Conference on Impact of Education on sustainable Environmental Management* , Government College of Education Pudukkottai ISBN 978-93-87865-14-3, PP 351-354

[17] Paavizhi.K., & Saravanakumar, AR., (2019). *Environmental education as a tool for EMS, International Conference on Impact of Education on sustainable Environmental Management,* Government College of Education Pudukkottai, ISBN: 978-93-87865-14-3, pp346-350

[18] Padmini Devi.KR., Saravanakumar, AR., (2019). *Effective Maintenance of Sustainable Development Through Environmental Management System, International Conference on Impact of Education on sustainable Environmental Management,* Government College of Education Pudukkottai, ISBN: 978-93-87865-14-3, PP341-345

# ஆற்றுப்படை நூல்களில் மரங்கள்

# . Trees in the Aatruppadai Books

# 3. Trees in the Aatruppadai Books

**Dr. M.Subashini,** Assistant Professor of Tamil, National College, Trichy.
**ORCiD:** https://orcid.org/0000-0002-9679-0662
**DOI: 10.5281/zenodo.4591754**

## Abstract

The ancient Tamil people trusted the natural way of life in a whole-hearted manner. They planted trees around they live and put more importance on trees in their lives. So, the lives of the classical people flourished in a well fitting-manner and can be seen in Tamil literature. The poets have registered the use of trees in human lives in such a wonderful manner. One can a see many quotations from the *Aatruppadai* books (*Thirumuruguatruppadai, Porunaratruppadai, Sirupanatruppadai, Perumpanatruppadai, Malaipadukadam (Kootharatruppadai)*) about the influence of trees. This chapter defines the trees of the Sangam age with evidence from the related sources written in the Sangam times. The ultimate gains from the trees and the way leading a pastoral life are explained with ample quotations from literary sources. The flowers, fruits, barks, leaves and roots that are used for medicinal proposes are explained in this part. Therefore, this chapter brings forth the integral qualities of trees as registered by the poets of the Aatruppadai books.

**Keywords:** Tamil Life, Trees, Aatruppadai Books.

## References

### Primary Sources

[1] Mohan.Ra. Ed. Patuppattu Moolamum Uraiyum (Part 1), New Century Book House Pvt. Ltd., Chennai, Fourth Edition- 2011.

[2] Nagrajan.Vee Ed. Patuppattu Moolamum Uraiyum (Part 2), New Century Book House Pvt. Ltd., Chennai, Fourth Edition- 2011.

### Secondary Sources

[1] Anjanamalagiyapillai, Palavalam, Tirunelveli Thenindiya Saiva Siddantha Noorpathippu Kazhagam, Chennai, Revised Edition-1979.

[2] Gopalaiyer.Thi.Ve. Tholkappiyam Porulathikaram Perasiriyam (Part 1), Tamilman Pathippagam, Chennai, First Edition- 2003.

[3] Sami.P.L, Sanga Ilakiyangalil Sedi Kodi Vizhakam. Tirunelveli Thenindiya Saiva Siddantha Noorpathippu Kazhagam, Chennai, First Edition-1982.

[4] Seenivasan.Ku. Sanga Ilakkiya Thavarangal. Tamil Palgalaikazhagam, Tanjore, First Edition-1987.

[5] Mani. Pi.S. Vazham Tharum Marangal (Part-4). New Century Book House Pvt. Ltd., Chennai, Second Edition- 1994.

[6] Mathalai.Somu. Viyakka Vaikkum Tamilar Ariviyal, Ulagath Thamilaivu Kazhagam, Trichy, First Edition- 2005.

[7] Kazhagap Pulavar Kulu. Kazhagath Tamil Agarathi, Tirunelveli Thenindiya Saiva Siddantha Noorpathippu Kazhagam, Chennai, Seventeenth Edition-2002.

[8] Manavai Mustapha, Ilayar Ariviyal Kalanchiyam, Seethai Pathipagam, Chennai,

First Edition- 2010.
[9] Ariviyal Kalanchiyam. Thoguthi-6, Tamil Palgalaikazhagam, Tanjavur, First Edition- 1988.
[10] Ariviyal Kalanchiyam. Thoguthi-6, Tamil Palgalaikazhagam, Tanjavur, First Edition- 1995.



*செங்காந்தள்- இயற்கை*

# 3. ஆற்றுப்படை நூல்களில் மரங்கள்

**முனைவர் மு.சுபாஷினி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,**

**தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி -01**

**ORCiD:** https://orcid.org/0000-0002-9679-0662

**DOI: 10.5281/zenodo.4591754**

பழங்கால மக்கள் இயற்கையான வாழ்வையே பெரிதெனக் கருதினர். தங்களைச் சுற்றியுள்ள நிலங்களில் மரங்களை அளவுக்கு அதிகமாகவே வளர்த்தனர். மரங்களின் இன்றியமையாமையைக் கருதியே அவர்கள் மரங்களுக்கு முதன்மையான இடத்தை அளித்தனர். அதனால் அக்கால மக்களின் வாழ்க்கைமுறை மிகவும் செழிப்புடனே இருந்து வந்தது. இவற்றைக் கருத்தில் கொண்ட புலவர் பெருமக்கள் மரங்களின் பயன்களையும், மக்களுக்கு எவ்விதங்களில் பயன்பட்டதென்பதையும் தம் படைப்புகளில் பதிவு செய்த முயற்சியே இலக்கியங்களில் ஊடுருவத் தொடங்கின எனலாம். அத்தகைய வகையில் பார்த்தோமேயானால் ஆற்றுப்படை நூல்களில் புலவர்கள் மரத்தைப் பற்றி எவ்விதம் பதிவு செய்துள்ளனர் என்பதை ஆராயும் விதமாக இவ்வியல் அமைந்துள்ளது.

மரம் என்பது பல்லாண்டுத் தாவரம் ஆகும். இது நிலத்தில் (ஒரு விதையிலிருந்து) தோன்றி இடம்விட்டு, இடம் தானே நகராது. நிலைத்து வளரக்கூடிய ஒரு நிலைத்திணை வகையாகும். பொதுவாக முதிர்ந்த நிலையில் 4.5 மீட்டர் உயரமும், ஒரு தனி அடிமரத்தில் தாங்கப்பட்ட கிளைகளையும் கொண்டிருக்கும்.

மரம் என்பது புறத்தே வலிமை வாய்ந்ததோடு, அகத்தேயும் வலிமை நிறைந்து காணப்படும்.

**உலகம் வெப்பமடையாமல் காக்கும் (GLOBAL WARMING) கவசங்களில் ஒன்று மரம். அது மட்டுமல்லாமல் மண்அரிப்பு, வெள்ளப்பெருக்குப் போன்றவற்றைத் தடுக்கும் அரண்களாகவும் மரமே விளங்குகிறது. (மாத்தளை.சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல், ப.202)** இந்தியாவில் 2005 இல் வந்த ஆழிப்பேரலையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். கடலோரங்களில் மரங்கள் இருந்த பகுதியில் அதிக பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**அகில்**



*செங்காந்தள்- இயற்கை*

அகில் மரம் **அக்விலேயா அகல்லோச்சா** இனத்தைச் சார்ந்தது. "தைமீலியேசி" குடும்பத்தைச் சேர்ந்த இம்மரம் 60–70 அடி உயரமும், 5-8 அடி சுற்றளவும் கொண்டது. இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளில் குறிப்பாக அஸ்ஸாமிலுள்ள காசி, காரோ, நாகா மலைக்காடுகளில் வளர்கிறது.

**அகில் கட்டிகள் எண்ணெய் பசை நிறைந்தனவாகும். எண்ணெய் பிசின் போன்ற இக்கருமைப் பொருளே "அகில்" என அழைக்கப்படுகின்றது. அகில் கட்டிகள் மிகுந்த மணமுள்ளவை. அவற்றை நெருப்பில் இட்டால் சாம்பிராணி புகைப்போன்று மணமிக்க புகை வெளிவரும்."(மணவை முஸ்தபா, இளையர் அறிவியல் களஞ்சியம், பக்.5-6)**

**சங்ககால மகளிர்**

அகில் மரப்புகையைக் கூந்தலின் ஈரத்தை உலர்த்துவதற்குப் பயன்படுத்தினர். மேலும் அகில் மர விறகால் தீயினைக் காய்ச்சிய கள்ளினை நெய்தல் நிலத்துப் பெண்ணான நுளைகமள் விருந்தினருக்குக் கொடுத்து விருந்தோம்பினாள் என்பதை,

**வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகின்**

**கரும்புகைச் செந்தீ மாட்டி, பெருந்தோள் (சிறு.155-156)**

என்று சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது.

**பயன்கள்**

- பட்டையிலுள்ள நார் காகிதம் செய்யவும் கயிறு தயாரிக்கவும் உதவுகிறது. அகில் மரப்பட்டைகள் புத்தகங்களுக்கு உறையிடப் பயன்படுகின்றன.
- அகில் மரத்தூளை இக்காலத்தில் ஊதுபத்தி, அகர்பத்தி செய்வதற்குப் பயன்படுகிறது.

**அசோகு**

அசோகு சங்க இலக்கிய பெயர் **பிண்டியாகும். "சிசால்பினாடியே"** தாவரக் குடும்பத்தைச் சார்ந்த இம்மரம் தழைத்து வளரும் பசிய இலைகளைக் கொண்டது. மகளிரின் மரம் எனப்போற்றப்படும் அசோகு மரத்தின் இலைகள் அழகானவை. திருமுருகாற்றுப்படையில் இதனைப் **பிண்டி** எனவும், **செயலை** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



*செங்காந்தள் - இயற்கை*

**அசோகு மலர்கள் சிவப்பு நிறமானவை. நறுமணமுடையயைவை. புல்லிகள் நீண்ட கிண்ணம் அல்லது குழல் போன்றவை. அல்லிகள் இம்மரத்தை ஒத்த அம்கௌர்சியா நோபிலிஸ் (Amtherstia, Nosills), பிரவுனிய காக்கினியா (Brownia Coccinea) முதலிய மரங்களும் எழில் தரும் மரங்களாகும். (அறிவியல் களஞ்சியம், தொகுதி-6, ப.392)**

அசோகு மரத்தின் சிவந்த நிற மலர்களைச் சூரர மகளிர் தம் காதுகளில் குளிர்ச்சிக்காக அணிந்து முருகப்பெருமானை வழிபாடு செய்தனர்.

**வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர் (முருகு.31)**

**செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன் (முருகு.207)**

என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் குறிப்பிட்டுள்ளார்.

**பயன்கள்**

- வீடுகட்டவும், கலப்பைப் போன்ற கருவிகள் செய்யவும் அசோகு மரம் பயன்படுகிறது.

**ஆலமரம்**

ஆலமரத்தின் தாவரவியல் பெயர் **ஃபைகஸ் பென்கலன்சிஸ்.** இம்மரம் மொரேசியே (Moraceae) குடும்பத்தைச் சார்ந்தது. **ஆலமரம் கோடையில் ஒரு பக்கத்தில் இலையை உதிர்ந்து வரும்பொழுதே பளப்பளபான புதுத்தளிர்கள் தோன்றி, தொடந்து பசுமை மாறாதிருக்கும். மரத்திற்கு வலுவில்லாதிருப்பினும் கிளைகளில் விழுதுகள் உருவாகி நிலத்திலே வேராகவும் நிலத்திற்குமேல் மரமாகவும் இயங்கி முடிவின்றி வாழ்ந்திட உதவுகின்றன. அத்துடன் விழுதுகளின் நுனியில் "அசோபாக்டர்" என்ற நுண்ணுயிரிகள் வாழ்வதால் எந்நிலையிலும் தழைத்திட முடிகிறது. (பி.எஸ்.மணி, வளம் தரும் மரங்கள், தொகுதி-1, பக்.88-91)**

ஆலமரம் 20 முதல் 35 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. ஆலம் கிளைகளிலிருந்து வேர்கள் தோன்றி கீழ்நோக்கி வளர்கின்றன. இவை விழுதுகள் எனப்படும்.

படந்த அடர்த்தியான நிழல் தரும் மிகச்சிறந்த ஆலமரத்தின்கீழ்க் கூத்தர்கள் பல இசைக்கருவிகளை இசைத்த ஒலியைப்போல, அம்மரத்தின்மேல் அமர்ந்துள்ள பறவைக் கூட்டங்களும் பல ஒலிகளை எழுப்பும்.



*செங்காந்தள் - இயற்கை*

**கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்து**

**கூடு இயைந்து அன்ன குரல் புணர் புல்லின் (மலை.268-269)**

என்று கூத்தராற்றுப்படை எனும் மலைபடுகடாமில் குறிப்பிடப்பெறுகிறது.

**பயன்**

- இக்காலத்தில் அதிக அளவில் பாதிக்கும் உடல் நோய்களில் ஒன்றான மூட்டுவலியைக் குணப்படுத்தப் பயன்படுகிறது.

**இலவம்**

செய்பா பெடண்ட்ரா என்ற தாவரவியல் பெயரைக் கொண்ட இலவ மரத்தின் தாயகம் ஆப்பிரிக்கா ஆகும். இதன் சங்க இலக்கியப் பெயர் **இலவு.** இலவம் பாம்பகேசி (Bombacaceae) குடும்பத்தைச் சார்ந்த இதில் 22 பேரினங்கள் உள்ளன. இலவமரம் ஓங்கி உயர்ந்து வளரும் நடுமரத்திலிருந்தே கிளைகள் உருவாகும். இச்சிறுமரங்களின் தண்டில் கறுப்புநிற முள்கள் இருக்கும். காய்களுடன் இருக்கும்பொழுது கிளைகள் ஒடிந்துவிடும்.

**இலவ மரத்தின் கிளைகள் சற்று வளையங்களாகவும்**

**கிடைமட்டமாகவும் காணப்படும். இளம் கிளைகளின்மேல்**

**கூம்பு வடிவான சிறு முட்கள் உண்டு. முள்ளின்**

**அடிப்பகுதி தக்கையால் ஆனதால் கிளைகள்**

**முதிரும்பொழுது முள்கள் உதிர்ந்துவிடும். (அறிவியல்களஞ்சியம், தொகுதி-4, ப.818)**

இலவ மரத்தின் காய் வெடிக்கும்போது தோன்றும் கோடு அணிலின் முதுகு புறத்தில் தோன்றும் வெண்மையான கோடு போன்று, இலவங்காயின் பஞ்சு வெளிப்பட்டது என்று ஆசிரியர் பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடுகின்றார்.

**நீள்அரை இலவத்து அலங்குசினை பயந்த**

**பூளைஅம் பசுங்காய் புடை விரிந் தன்ன**

**வரிப்புற அணிலொடு (பெரும்.83-85)**

இலவ மரத்தின் பூக்கள் சிவந்த நிறத்தை உடையதாதலால், பாடினியின் அழகிய இதழுக்கு இலவ மலர் உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.

**இலவு இதழ் புரையும் இன்மொழித் துவர்வாய் (பொருந.27)**



*செங்காந்தள் - இயற்கை*

இதன் மலரில் ஐந்து சிவந்த அகவிதழ்கள் உள்ளன. எனவே பொருநராற்றுப்படைப் புலவர் மலரின் நிறத்தைத் தம் பாடலின் அடிகளில் காட்டியுள்ளார்.

**பயன்கள்**

- மெத்தை, தலையணை, இருக்கைகள் தயாரிக்க இலவங்காயிலிருந்து கிடைக்கும் பஞ்சு பயன்படுகிறது.
- இதனுடைய விதையிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டு சோப்புத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இலவம் புண்ணாக்குக் கால்நடைக்குத் தீவனமாகப் பயன்படுகிறது.
- காயின் மேலோடு எரிபொருளாகவும் மென்மையான பகுதி தீக்குச்சி தயாரிக்கவும் பயன்படுகிறது.

**ஈச்சம்**

ஈச்ச மரம் 1300 மீட்டர் உயரம் வரை சமவெளிகளில் வளரக்கூடியது. எயிற்றியர் தங்களது குடியிருப்புகளுக்கு அதிக அளவில் பயன்படுத்தியதைச் சங்கப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எயிற்றியர் குடிசைகள், கொழுமையான மடலாலும் வேல் போன்ற கூர்மையான இலைகளாலும் பொருந்திய ஈச்ச மரத்தின் இலையால் அவர்களின் குடில்கள் வேயப்பட்டிருந்தன.

**ஈத்துஇலை வேய்ந்து எய்ப்புறக் குரம்பை (பெரும்.88)**

இப்பாடலடியின் வாயிலாக ஈச்சஇலை முள் போன்ற அமைப்பைப் பெற்றது என்பதை அறிய முடிகிறது.

**கொடுவில் எயினக் குறும்பில் சேப்பின்**
**களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன (பெரும்.129-130)**

எயினர் வழங்கும் சோறு, ஈந்தின் விதை போன்று சிறந்த நிறத்தில் இருக்கும் என்ற செய்தியிலிருந்து ஈந்தின் விதை சிவப்பு விதை சிவப்பு நிறம் என்பதை அறியமுடிகிறது.

**கடம்பு**

கடம்பு மரம் (Anthocephalus indicus Anthocephalus Cadamba) முருகனுக்கும் திருமாலுக்கும் உரியது எனச் சங்கப்பாடல்கள் தெரிவிக்ககின்றன. மரா மரத்தை பழந்தமிழர் மராஅம் என்றே வழங்கினர். பின்னர் இதனை மராம் என்றனர். **இம்மலரின்**



*செங்காந்தள்- இயற்கை*

**நடுவில் சிறுதுளை, துளை மருங்கில் வெண்ணிறம். அதற்கு வெளிப்புறம் இளஞ்சிவப்பு நிறம், மலரின் வட்டத்தை ஒட்டிய மிகச் சிவந்த பிசிர் போன்ற நூற்றுக்கணக்கான தாதிழைகள், நுனியில் தாதுப்பைகள் அவற்றிலிருந்து வெளிப்படும் குங்கும நிறமான மகரந்தம். இப்பூக்கள் நீண்ட பூவிணரில் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கியதுபோல் மலரும்" (கு.சீனிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப.326)** என்று குறிப்பிடும் அறிவியல் குறிப்புகள் கருதத்தக்கது.

முருகப்பெருமான் இருக்கும் பழமுதிர்சோலையில் புதிதாக மலர்ந்துள்ள கடம்ப மரத்தில் வீற்றிருப்பான் என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கூறுவதன் வாயிலாக முருகனுக்கு ஏற்ற மரங்களில் கடம்பும் ஒன்று என்பது தெளிவாகிறது.

**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும் (முருகு.225)**

பாணர்கள் கடந்து சென்ற பாலை நிலத்தின் வழியில், குளிர்ச்சி பொருந்திய கடம்ப மரத்தின் அடியில் தங்கியதால் மிகுந்த வெப்பத்திலிருந்து விடுபட்டனர்.

**பாலை நின்ற பாலை நெடுவழிச்**

**சுரன்முதல் மராஅத்த வரிநிழல் அசைஇ (சிறு.11-12)**

கடம்ப மரம் நீரோட்டமுள்ள கரைகளில் செழித்து வளரும். பொய்கையைச் சூழ்ந்து நிற்கும் கடம்ப மரத்தின் மாலை போன்ற மலர்கள் இந்திரகோபப் பூச்சிபோலச் சிவந்த நிறத்தில் தன் தாதினை உதிர்த்தலால், அப்பொய்கை ஓவியம் வரைந்தாற் போன்று காட்சியளித்தது.

**நறுநீர் பொய்கை அடைகரை நிவந்த**

**துறுநீர்க் கடம்பின் துணை ஆர்கோதை**

**ஓவத்து அன்ன உண்துறை மருங்கில் (சிறு.68-70)**

என்ற பாடலடிகளின் வழியே கடம்ப மரத்தின் மலர்த்தாது சிவப்பு நிறத்தை உடையது என்று சிறுபாணாற்றுப்படை தெளிவுறுத்துகிறது.

**பயன்கள்**

- கடம்ப மரத்தின் இலைகளைக் கம்பளிப்பூச்சி, பட்டாம்பூச்சி, வரியன் பூச்சிகள் உணவாக கொள்ளுகின்றன.



*செங்காந்தள் - இயற்கை*

**கறிவேப்பிலை**

கறிவேம்பு என்பது கறிவேப்பிலையைக் குறிக்கும். இதன் அறிவியல் பெயர் **முர்ரேயா கொயினிசி** (Murraya Koenigi) ஆகும். இதன் தாவரவியல் பெயர் **ரூடேசி** என்ற குடும்பத்தைச் சார்ந்தது. கறிவேப்பிலை ஒரு குறுமரம். பூக்கள் கிளைகளின் நுனிகளில் சமதள மஞ்சரிகளாக உருவாகும். வெண்மை நிறமுடையவை. தொடக்கத்தில் பச்சை நிறமாகவும், அதன்பின் சிவப்பு நிறம் பெற்றும் முடிவில் கருமை நிறத்தையும் அடையும். ஆற்றுப்படையில் கறிவேப்பிலையைக் **கருவேம்பு** என்றே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**ஒரு கனமீட்டர் மரத்தின் எடை 686 கிலோ வேளாண்மைக் கருவிகள் செய்திட உபயோகித்திடலாம். (பி.எஸ்.மணி, வளம் தரும் மரங்கள், தொகுதி-1, பக்.179-180)**

அந்தணர் வீடுகளில் மாதுளங்காயை வகிர்ந்து, மிளகு பொடியோடு கறிவேப்பிலையையும் கலந்து வெண்ணெயில் வேகவைத்த மாதுளங்காய்ப் பொறியலைக் கலந்து விருந்தினருக்குக் கொடுத்தனர் என்று பாணருக்கு அவர் செல்லும் வழியில் கிடைக்கும் உணவினைக் கூறி ஆற்றுப் படுத்துவதாகப் பெரும்பாணாற்றுப் படையில் குறிப்பிடப்படுகிறது.

**சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து**
**உருப்புறப் பசுங்காய்ப் போழொடு கறிகலந்து**
**கஞ்சக நறுமுறி அளைஇ; பைந்துணர் (பெரும்.306-308)**

கருவேம்பு எனப்படும் கறிவேப்பிலையைச் சமைக்கும் உணவுவகைகளில் மணமூட்டுவதற்காகவும் மருத்துவ நலனை அடிப்படையாகக் கொண்டும் சேர்ப்பர்.

**பயன்கள்**

- கறிவேப்பிலையில் விட்டமின் ஏ என்ற உயிர்ச்சத்தும், கால்சியம், புரதம்,, இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்துகளும் உள்ளன.

**சந்தனமரம்**

சந்தன மரம் சங்க இலக்கிய பெயர் “ஆரம்” ஆகும். ஆற்றுப்படை நூல்கள் சந்தனத்தை, **ஆரம், தேய்வை,** சாந்து எனக் குறிப்பிடுகின்றன. சந்தனம் மருத்துவ பயனுடைய ஒரு மரமாகும். சந்தனக் கட்டையைச் சந்தனக் கல்லில் தேய்த்து வரும் சாந்தைக் கோடை வெப்பத்தைத் தணிக்க மார்பில் பூசிக்கொள்வது வழக்கமாகும். இந்திய



*செங்காந்தள் - இயற்கை*

மரங்களில் மிகவும் விலை உயர்ந்தது சந்தனமரமாகும். இதன் தாயகம் இந்தியா. சந்தன மரம் 12 முதல் 40 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. சந்தன மரம் தனித்து வளராது. அருகில் இருக்கும் மரத்தின் வேரிலிருந்து தனக்கு வேண்டிய ஊட்டச் சத்துகளைப் பெற்றுக்கொள்கிறது. மரம் வளர்ந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பழங்களைத் தருகிறது.

**மணத்துடன் உள்ள சந்தனச் சாந்து உடலுக்குக் குளிர்ச்சியும் தரும் (கு.சீனிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப.615)** வலிமையான வைரம் பாய்ந்த நறுமணமிக்க சந்தனக்கட்டை கொண்டு அரைத்த சந்தனக் குழம்பை மார்பில் பூசினர்.

**நறுங்குறடு உரிஞ்சிய பூங்கமழ் தேய்வை (முருகு.33)**

கடையேழு வள்ளல்களுள் ஒருவனான ஆய் எனும் மன்னன் கையில் வில்லேந்தி மார்பில் குளிர்ச்சி பொருந்திய சந்தனத்தைப்பூசி இருந்தான் என்று சிறுபாணாற்றுப்படை உரைக்கிறது.

**சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள் (சிறு.98)**

கூத்தராற்றுப்படையில் நன்னனின் நாட்டுவளத்தைக் குறிப்பிடும்போது, அவன் மலையிலே நறுமணமிக்க நன்கு முற்றிய வயிரத்தை உடைய சந்தனமரம் நிறைந்துள்ளமை அறியப்படுகிறது.

**பயன்கள்**

- உலர்ந்த கட்டை நறுமணமுடையது.
- சந்தன கட்டையில் மரவேலைபாடுகளும் கதவுகள், புகைப்பட பிரேம்கள் ஆகிய பொருள்களும் செய்யப்படுகின்றன.
- சந்தன தைலத்தைத் தோல்மீது தடவினால் தோல் நோய்கள் வாரா.

**நெல்லி**

நெல்லி மரம் பல்வேறு மருத்துவக் குணங்கள் நிறைந்தது. இது **யுபோர்பியேசி** குடும்பத்தைச் சேர்ந்த தாவரமாகும். இது உயரமான இலையுதிர் மரம். இதன் காய்கள் சதைப் பற்றுடனும் உருண்டையாக ஆறு பிரிவாகப் பிரிந்தும் வெளியே பசுமை நிறத்திலோ மஞ்சளாகவோ காணப்படும். நெல்லியில் கருநெல்லி, அருநெல்லி என்ற இரு வேறு இனங்கள் உண்டு. சுவையான அரி நெல்லிக்காய் என்பது வீட்டுத் தோட்டங்களில்





பயிரிடப்படும். நெல்லிமரம் 5 மீட்டர் 6 மீட்டர் வரை வளரக் கூடியது. இதன் கிளைகளில் இலைகள் கொத்துக்கொத்தாக அடர்த்தியாக வளரும். இலைக் காம்பை ஒட்டியே ஆறு பூ இதழ்கள் தலைகீழ் ஈட்டி வடிவமானவை. நெல்லிக்கனி **ட்ரூப்** வகையைச் சேர்ந்தது.

**நெல்லிக்காயை நன்கு காயவைத்து எடுத்த வற்றலை அரைத்துத்**
**தலையின் அழுக்கு நீக்கும் சோப்புப்போலப் பயன்படுத்தலாம். பேனா**
**மை செய்வதற்கும், தலை மயிரில் சாயம் ஏற்றவும் பயன்படுத்துகின்றனர்.**
**நெல்லி விதையில் எண்ணெய்ச் சத்து, பாஸ்பேட் போன்றவை உள்ளன.**

**(அஞ்சனமழகிய பிள்ளை, பழவளம், ப.143)**

இளமையையும் சாகாத் தன்மையையும் தரும் அரிய நெல்லிக்கனியை அதியமான் தன் உடலைப் பாதுகாத்துக் கொள்ளக் கருதாமல், தன் உயிர்த்தோழியும் தமிழ்மொழியைச் செழித்தோங்கச் செய்த பெண்மணியுமான ஒளவைக்கு தந்தான். இனிய அமுதமாகவும், மருத்துவப் பயன்மிக்கதாகவும் விளங்கும் அக்கனியை ஈந்ததால் அவனுடைய ஈகைக் குணமும் நெல்லியின் பயனும் புலனாகின்றன.

**ஆர்வ நன்மொழி ஆயும்; மால்வரைக்**
**கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி**
**அமிழ்துவிளை தீம்கனி ஒளவைக்கு ஈந்த (சிறு.99-100)**

நெல்லியின் பயனை அறிந்துணர்ந்ததால் நல்லூர் நத்தத்தனார் தம் பாடலில் அக்கனியைப் பதிவு செய்துள்ளார்.

**பயன்கள்**

- நீரிழிவு நோயின் தன்மையைக் குறைக்கவும் கொழுப்பைக் கரைக்கவும் இரத்தத்தைத் தூய்மை செய்யவும் நெல்லிக்காய் பயன்படுகிறது.
- உடல் வெப்பத்தைத் தணிக்கவும் மலச்சிக்கல் போக்கவும் நெல்லிக்காய் பயன்படுகிறது.

**பலா**

பழங்களிலேயே மிகப் பெரியது பலாப்பழமாகும். இதன் சங்க இலக்கிய பெயர் **பலவு, பலா** என்பதாகும். ஆற்றுப்படை நூல்களில் **ஆசினி, பலா, செஞ்சுளை, பெரும்பழம்** போன்ற பெயர்களில் சுட்டப்படுகிறது. இது **மோரேசி** குடும்பத்தைச் சார்ந்த தாவரமாகும்.





**அடிமலரல்** எனும் தனித்துவ இயல்புடையது. பலா இதன் காரணமாக மரத்தின் வேரிலும், தண்டிலும் காய்த்தல் நிகழும்.

**பலா மரத்தின் பட்டைகளிலிருந்து வடியும் பாலைத்**

**தொட்டிகளிலும் பானைகளிலும் உள்ள ஓட்டைகளை**

**அடைக்கப் பயன்படுத்துவர். பலாமரப் பலகைகள் தட்டு**

**முட்டுச் சாமான்கள் செய்யப் பயன்படுகின்றன.**

**(அஞ்சனமழகியபிள்ளை, பழவளம், ப.133)**

பழமுதிர்சோலையின் இயற்கை வளத்தைத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் குறிப்பிடுகையில் மலையிலிருந்து "இழும்" எனும் ஓசையுண்டாகத் துள்ளிக் குதித்தோடும் அருவி நீரில் பல்வேறு வகையான மரங்களை அடித்துக் கொண்டும் பலாப்பழத்திலேயே மிகப் பெரியதான ஆசினியின் சுளைகளைத் தன்னுடன் கலக்கிக் கொண்டும் காணப்பட்டமையை ஆசிரியர் காட்சிப்படுத்துகிறார்.

**தண்கமழ் அலர் இறால் சிதைய, நன்பல**

**ஆசினி முதுசுளை கலாவ, மீமிசை (முருகு.300-301)**

பலாப்பழம் கீழ்நோக்கி தாழ்ந்த குலைகளோடு இனிய சுளைகளைக் கொண்டு விளங்கும். ஃப்ரூக்டோஸ், சுக்ரோஸ் அதிகமாக இருப்பதே அதன் இனிப்புச் சுவைக்குக் காரணமாகும்.

**தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம் (பெரும்.356)**

பலாமரத்தின் காய்கள் மற்ற காலங்களைக் காட்டிலும் கார்காலத்தில் மிகுதியாகக் காய்க்கும் என்ற செய்தியை மலைபடுகடாத்தில் கௌசிகனார் குறிப்பிட்டுள்ளார்.

**கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப**

**நேர்சீர் கருக்கில் காயக் கலப் பையிர் (மலை.12-13)**

குறிஞ்சி நிலத்திற்கே சிறப்புடையதாக விளங்கும் பலாமரத்தின் நன்கு முற்றிய பெரிய பலாப்பழத்தை ஆண்குரங்கு (முசுக்கலை) தன் கைகளால் பிரித்தது. தேன் நிறைந்த அப்பழத்திலிருந்து வெளிவந்த மணம் மலை முழுவதும் மணக்கச் செய்தது என்று கூறுவதிலிருந்து பழங்களிலேயே நறுமணம் கமழ்வது பலாப்பழம் என்பது புலனாகிறது.



*செங்காந்தள் - இயற்கை*

**பயன்கள்**

- பலாப்பழத்தில் வைட்டமின் "ஏ", "சி" தயமின், பொட்டாசியம், கால்சியம், இரும்புச்சத்து, நையாசின், ரிபோஃப்ளே ஆகிய சத்துகள் நிறைந்துள்ளன.
- பலாப்பழத்தின் கடினமான தோல், "பெக்டின்" வகைக்கூழ்கள் தயாரிக்க உதவுகிறது. மேலும் இது புகையிலையைப் பதனிடப் பயன்படுகிறன்றது.

**பனை**

பனை (Palmyra Palm), புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரப் பேரினமாகும். இளம் பனைகள் **வடலி** என்று குறிக்கப்படுகின்றன. பனை சுமார் 30 மீட்டர் வரை வளரக்கூடியது. இதற்குக் கிளைகள் கிடையா. இதன் உச்சியில் 30-40 வரையிலாக விசிறி வடிவ ஓலைகள் அமைந்திருக்கும். **பனை தமிழ்நாட்டின் மரமாகும்.** பனை மரத்தில் மொத்தம் 34 வகைகள் உள்ளன. அந்தப் பயனுக்கு ஏற்றவாறு அதன் பெயரும் அமைந்துள்ளது. ஆற்றுப்படை நூல்கள் பனை மரத்தைப் **பனை, போந்தை, பெண்ணை** போன்ற பெயர்களால் குறிப்பிடுகின்றன.

**பனை ஒரு பால் தன்மையுடையது; ஆண் பனைகளும் பெண் பனைகளும் தனித்தனியானவை. ஆண் பனையில் திரட்சியாகத் தடித்த விரல்கள் உடைய பூந்தண்டு உருவாகும். இந்த விரல்களில் நெருக்கமான செதில்களில் சிறிய மஞ்சள் நிறப்பூக்கள் நிறைந்திருக்கும். இப்பூக்களைத் துள்ளும் பூக்கள் என்பர். காற்றிலே மிதந்து வரும் மகரந்தம், குறும்பையில் மகரந்தச் சேர்க்கை ஏற்படுகிறது. (பி.எஸ்.மணி, வளம் தரும் மரங்கள், தொகுதி-4, பக்.139-140)**

பனை மட்டையின் இருபுறத்தும் கூரிய வால் போன்ற கருக்குகள் காணப்படும் என்பதைத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் குறிக்கிறார். கரடியின் உடலமைப்புப் பனையின் செறும்பு போன்று அமையும் செய்தியினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

**இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன**
**குருமயிர் யாக்கைக் குடாஅடி உளியம் (முருகு.312)**

சேர மன்னின் குடிப்பூப் பனையாகும். பனையின் கிளை யானையின் நிறத்தை ஒத்த கருமை நிறம் கொண்டது என்று பொருநராற்றுப்படையில் ஆசிரியர் விளக்குகின்றார்.



*செங்காந்தள்- இயற்கை*

**இரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை (பொருந.143)**

பாணரும் விறலியரும் வள்ளலைக் காணச் செல்லும் வழியில், இளைப்பாறிய இடத்தின் அருகே அவர்களின் நாக்கு வறட்சி ஏற்பட்ட நிலையில் அதனைப் போக்குகின்ற பெரிய குலையையுடைய பனையின் நுங்கு, இனிய நீரை அளித்துத் தாகத்தைத் தீர்த்தது என்று சிறுபாணாற்றுப்படை ஆசிரியர் நத்தத்தனார் குறிப்பிடுகின்றார். பனையின் நுங்கு மக்களின் தாகம் போக்கும் அருமருந்தாக இருந்ததைத் தம் பாடலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**பயன்கள்**

- உணவுப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.
- மரப்பொருள்கள், அலங்காரப் பொருள்கள் ஆகியவற்றைச் செய்யலாம்.
- பனை ஓலை வேலிகட்டவும், மரம் வீடு கட்டவும் துணையாகின்றன.

**பாதிரி**

பாதிரி மூலிகை மருத்துவத்தில் பயன்படும் மரமாகும். இது அம்பு, அம்புவாகினி, பாடலம், புன்காலி எனவும் குறிக்கப்படுகிறது. **பிங்னோனியேசி (Bignoniaceae)** தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. இதன் மலர் நறுமணமுள்ள செந்நீல ஊதா நிறத்தில் இருக்கும்.

**சங்க நூல்களில் பாதிரி என்றே வழங்கப்பட்ட இம்மரம் முதன்முதலாகச் சிலப்பதிகாரத்தில்தான் “பாடலம்” என்று அழைக்கப்படுகிறது. திருப்பாதிரிப்புலியூர் பாதிரியைத் தலமாகப் பெற்றது. தற்போது “பாட்னா” என்று வழங்கும் ஊரும் பாடலி என்றே நந்தர் காலத்தில் பாதிரிப்பூவின் பெயரால் வழங்கியதாக வரலாறு கூறுகிறது. (பில்.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், பக்.119-120)**

யாழின் போர்வையாகப் பயன்படும் இத்தோல் பச்சையென்று சங்க நூல்கள் வழங்கும். இத்தோல் துவரூட்டிப் பாடம் செய்யப்பட்டதாய்ப் பொன்னிறமாக இருக்கும். மலைபடுகடாம் “புதுவது போர்த்த பொன்போற் பச்சை” (அடி.28) என்கிறது.

**காய்ச்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்**
**காசிலை யொழித்த பராஅரைப் பாதிரி**
**வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்த**
**னுள்ளகம் யுரையு மூட்டுறு பச்சை (பெரும்.3-6)**



*செங்காந்தள் - இயற்கை*

பாதிரியின் மலரைப் பிளந்தால் அதன் இதழ்கள் நிறரமூட்டப்பெற்ற யாழின் போர்வை போலிருப்பதாகப் பெரும்பாணாற்றுப்படை கூறுவதிலிருந்து பாதிரிப் பூவின் நிறம் தெளிவாகின்றது. எனவே, பாதிரிப் பூவின் நிறம் விளக்குச்சுடர் போன்றது. பொன் போன்றது என்பது விளங்கும்.

**பயன்கள்**

- பாதிரி மரத்தின் இலை, பூ, விதை, காய், வேர் ஆகிய அனைத்தும் மூலிகை மருத்துவத்தில் பயன்படுகின்றன.

**மாதுளை**

மாதுளை சிறுமர இனத்தைச் சேர்ந்த பழமரமாகும். மாதுளைக்குத் தமிழில் **தாடிமம், பீசபுரம், மாதுளங்கம், மாதுளம், கழுமுள்** என்ற பெயர்கள் உண்டு. **லித்ரேசியே (Lythraceae)** தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது. மாதுளையில் இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு ஆகிய மூன்று வகைகள் உள்ளன.

**மாதுளையின் வேர்ப்பட்டைகளில் இருபத்திரண்டு விழுக்காடு "டேனின்" இருப்பதால் இதிலிருந்து கருநிற எழுது மையைத் தயாரிக்கலாம். மோராக்கர்கள் காயின் மேல் தோலையும், பட்டையையும் முடிக்குச் சாயம் கொடுக்கப் பயன்படுத்துகின்றனர். (அஞ்சனமழகிய பிள்ளை, பழவளம், ப.94)**

அந்தணர் வீட்டிற்குப் பாணர்கள் சென்றால் சிவந்த நிறத்தில் இருக்கும் பசுவின் மோரிலிருந்து எடுக்கப்பட்ட வெண்ணெயோடு மாதுளங்காய் பொரியலைச் சேர்த்து விருந்தளிப்பர். **சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து (பெரும்.306)** என்ற பாடலடியின் வழியே அக்காலத்திலிருந்தே மாதுளை உணவிற்குப் பயன்பட்டுள்ளதையும் மருத்துவக் குணத்தையும் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில் காட்சிப்படுத்தியுள்ளார்.

**பயன்கள்**

- மாதுளம் பழ விதையில் 'Punicic Acid" எனும் அமிலம் உள்ளது. இது ஒரு நுண்கிருமிக் கொல்லியாகும். அதனால்தான் நுண்கிருமிகளால் உண்டாகும் மகப்பேற்றின்மைக்கு இது மருந்தாகிறது.



*செங்காந்தள் - இயற்கை*

**முருக்கம்**

முருங்கையைச் சிறுபாணாற்றுப்படை "முருக்கம்" என்றே குறிப்பிடுகிறது. முருங்கையின் தாவரப் பெயர் **மொரிகோ ஒலிஃபெரா (Moringa Oleifera)** ஆகும். இது **மொரிங்கேசி** தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. முருங்குவது என்றால் எளிதில் ஒடியக்கூடிய கிளைகளைக் கொண்ட "முருங்கை மரம்" ஆகும். முருங்கை அனைத்து வகை மண்ணிலும் வளரக்கூடியது; எனினும் மணல் சார்ந்த கனிமத் தன்மை அதிகமுள்ள நிலங்களில் நன்றாக வளரும். நல்லியக்கோடன் தன்னை நாடி வந்த இரவலருக்கு அவர்களின் வறுமையைப் போக்கி, அதன் பின்னரும் செல்வ வளத்தோடு வாழ, முருக்க மலர் மலர்ந்த தோற்றம்போலத் தச்சர் செய்த தேரினைப் பரிசாக நல்கினான் என்று சிறுபாணாற்றுப்படை விளக்குகிறது.

**சிதர்நனை முருக்கின் சேண்ஓங்கு நெடுஞ்சினைத்**
**ததர்பிணி அவிழ்ந்த தோற்றம்போல (சிறு.254-255)**

நீண்ட கிளைகளையுடைய முருக்க மரத்தில் பூத்த பூ ஓங்கி உயர்ந்து நிற்கும் தேருக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.

**முருங்கை காய்கள் நெற்று (Pods) எனும் உலர் வெடியாக்கனி வகையைச் சேர்ந்தவை. பச்சை நிறமான நீளமான காய்கள் முப்பட்டை வடிவங்களுடன் காணப்படும். 22-50 செ.மீ வரை நீளமுள்ள காய்கள் தொங்கு நிலையில் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில் பூக்களும் காய்களும் ஆண்டிற்கு இருமுறை தோன்றுகின்றன. (அறிவியல் களஞ்சியம், தொகுதி -17, ப.644)**

**பயன்கள்**

- முருங்கை இலைகளில் இன்றியமையா ஊட்டச்சத்துகளும் தாதுக்களும் அடங்கியுள்ளன.
- வைட்டமின் பி,சி,கே, புரோவிட்டமின், ஏ எனும் பீட்டா கரோட்டின், மாங்கனீசு, புரதம் இருப்பதால் ஊட்டச்சத்து உணவாகப் பரிந்துரைக்கப்பட்டு வருகின்றன.

**விளா**

மாற்று இலையடுக்கில் இலைகள் அமைந்திருக்கும். இலைக்கோணத்தில் முள்கள்



*செங்காந்தள்- இயற்கை*

காணப்படும். ஆண்மலர் பெண்மரரென நுனி அல்லது இலைக்கோணத்தில் விளா மலர்கள் அமைந்திருக்கும். கனி பெரியதாகவும் மிகுந்த சுவையுடையதாகவும் இருக்கும்.

விளா மரத்தைக் **கடிப்பகை, பித்தம், விளவு, வெள்ளி** என்ற பெயர்களாலும் குறிப்பிடுவர். ஆற்றுப்படை நூல்கள் **விளா** என்றும் **வெள்ளில்** என்றும் கூறுகின்றன.

**விளாம் பிசினைப் பசும்பாலில்**

**ஊறவைத்துச் சாப்பிட்டால் களைப்பு,**

**நரம்புத்தளர்ச்சி முதலியவைவிலகும். (அஞ்சனமழகியபிள்ளை,பழவளம், ப.169)**

சூரர மகளிர் முருகப் பெருமானை மனத்தில் நினைத்துக் கொண்டு, விளாமரத்தின் தளிரைக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் படும்படி முருகப் பெருமானின் வெற்றியைக்கூறிக் கொண்டும் அசுரர்களை அழித்த பெருமையினைப் பாடிக்கொண்டும் மகிழ்ந்து விளையாடினர் என்று திருமுருகாற்றப்படையில் நக்கீரர் கூறுகின்றார்.

**வெள்ளில் குறுமுறி சிள்ளுபு தெறியா**

**கோழி ஓங்கிய வென்று அடு விறற்கொடி (முருகு.37-38)**

வேடர்கள் மான்களைப் பிடிப்பதற்குத் தான் வளர்த்த மானை விளாமரத்தின் தாள்களில் பார்வைக்காகக் கட்டி வைப்பர். அத்தகைய மான் **"பார்வை மான்"** எனப்பட்டது. இச்செய்தியிலிருந்து விளாமரம் நன்கு அடர்த்தியான கிளைகளையும் குளிர்ந்த நிழலையும் தரும் என்பது புலனாகிறது.

**பார்வை யாத்த பறைதாள் விளவின்**

**நீழல் முன்றில் நிலஉரல் பெய்து (பெரும். 95-96)**

விளாமரத்தின் பயன்பாட்டை சங்க நூல்கள் திறம்பட உரைப்பதைக் காணமுடிகிறது.

**பயன்கள்**

- விளாமரத்தின் இலை செரியாமையைப் போக்குகிறது. மரத்தின் பட்டையைப் பொடியாக்கிச் சாப்பிடக் கல்லீரல் நோய்களைக் குணப்படுத்துகிறது.
- விளாம்பழம் பசியைத் தூண்டுகிறது. கக்குவான், இருமல் போன்ற நோய்களைக் குணப்படுத்த விளாங்காய் பயன்படுகிறது.

**தொகுப்புரை**

இயற்கையில் மனிதனுக்குக் கிடைக்கப்பெற்ற பொருள்களில் மரங்கள்



*செங்காந்தள்- இயற்கை*

சிறப்பானவை. மரங்கள் எல்லா வகைகளிலும் மனித வாழ்க்கையோடு ஒருங்கிணைந்தே செயல்படுகின்றன. மரங்களில் அகில் புகை நறுமணமுடையதாகவும், வாசணைப் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றன. அசோகு குளிர்ச்சித் தருவனவாக இருப்பதால் சங்ககால மகளிர் சூடியயுள்ளதை அறியமுடிகிறது. ஆலமரத்தின் பால் மூட்டுவலியைக் குணப்படுத்தவும், பட்டை நீரிழிவு நோய் போக்குவதற்கும், விழுது ஈறு நோய்களைப் போக்குவதற்கும் பயன்படுவதை உணரமுடிகிறது. இலவம் பஞ்சு மெத்தை, தலையணைப் போன்றன தயாரிக்கப் பயன்படுகிறது. ஈச்சமரம் எயிற்றியர் கூரை வேய்வதற்கும், இக்காலத்தில் ஒயின், ஜெல்லி, பதநீர், கள், பதநீர் போன்றவற்றைத் தயாரிக்கப்படுகின்றன. மராமரத்தைக் கடம்பு என்று குறிப்பிடப்படுகிறது. நறுமணத்திற்காகவும், மருத்துவத் தன்மை நிறைந்திருப்பதாலும் கறிவேப்பிலை பயன்படுத்தப்படுகிறது. சங்ககால மக்கள் சந்தனத்தைக் குளிர்ச்சிக்காகப் பயன்படுத்தியதைப் பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. முக்கனிகளளில் ஒன்றான பலாவை ஆற்றுப்படை ஆசினி, செஞ்சுளை, பெரும்பழம் என்று குறிப்பிடப்படுகிறது. மரம் கைத்தொழில் பொருள்கள் செய்ய பயன்படுகிறது. பாதிரி மரத்தின் பூ, பாணர் யாழின் பத்தரை மூடியுள்ள தோலுக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. மாதுளங்காய் பொரியல் செய்ததைப் பெரும்பாணாற்றுப்படை உரைக்கிறது. விளாமரத்தை ஆற்றுப்படை வெள்ளில் என்று குறிப்பிடுவதை அறியமுடிகிறது. மருத்துவக் குணம் நிறைந்திருப்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

**பாடல்களில் அமைந்த கருப்பொருள்கள்**

| வ.எண் | நூல்கள் | கருப்பொருள்கள் |
|---|---|---|
| 1 | சிறு.155-56 | நெய்தல், அகில், நுளைச்சியர், கள் காய்ச்சுதல் |
| 2 | முருகு.31,207 | குறிஞ்சி, பிண்டி, குறத்தியர் |
| 3 | மலை.268-69 | ஆலமரம், பறவைகள், |
| 4 | பெரும்.83-85 | இலவ மரம், அணில் |
| 5 | பொருந.27 | இலவமலர், பாடினி |
| 6 | பெரும்.88 | ஈச்சம் இலை, குடிசை |



*செங்காந்தள் - இயற்கை*

| | | |
|---|---|---|
| 7 | பெரும்.129-130 | எயினர், ஈந்தின் விதை |
| 8 | முருகு.225 | கடம்பமரம் |
| 9 | சிறு.11-12 | பாலை, கடம்பமரம்(மராஅம்) |
| 10 | சிறு.68-70 | கடம்ப மலர், பொய்கை, இந்திரகோபப்பூச்சி |
| 11 | பெரும்.306-308 | முல்லை, சேதா(சிவப்பு நிற பசு), மாதுளம், கறிவேப்பிலை, மிளகு |
| 12 | முருகு.33 | (தேய்வை) சந்தனமரம் |
| 13 | சிறு.98 | ஆய் மன்னன், சந்தனம் |
| 14 | சிறு.99-100 | அதியமான் மன்னன், நெல்லிக்கனி |
| 15 | முருகு.300-301 | ஆசினி (பலாப்பழம்) |
| 16 | பெரும்.356 | பெரும்பழம் (பலாப்பழம்) |
| 17 | மலை.12-13 | பலாப்பழம், கார்காலம் |
| 18 | மலை.292-293 | குறிஞ்சி, பெரும்பழம் (பலாப்பழம்), கலை (ஆண்குரங்கு) |
| 19 | முருகு.312 | பனை, உளியம் (கரடி) |
| 20 | பொருந.143 | போந்தை (பனை) யானை |
| 21 | சிறு.27 | பெண்ணை (பனை) |
| 22 | பெரும்.3-6 | பாலை, வேனிற்காலம், பாதிரி மலர், யாழ் |
| 23 | பெரும்.306 | சேதா (பசு), மாதுளம் |
| 24 | சிறு.254-255 | முருக்கு(முருக்கம் பூ), தேர்சக்கரம் |
| 25 | முருகு.37-38 | வெள்ளில் (விளாமரம்), சேவல்கொடி |
| 26 | பெரும்.95-96 | பார்வை (மான்), விளா(விளாமரம்) |

**துணை நூற்பட்டியல்**

**முதன்மைச் சான்றுகள்**

[1] மோகன்.இரா. உ.ஆ), பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற்பகுதி), நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, நான்காம் பதிப்பு -2011.





[2] நாகராசன்.வீ (உ.ஆ), பத்துப்பாட்டு மூலமும் உரையும் (இரண்டாம் பகுதி), நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, நான்காம் பதிப்பு -2011.

**துணைமைச் சான்றுகள்**

[1] அஞ்சனமழகியபிள்ளை, பழவளம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, திருத்திய பதிப்பு-1979.

[2] கோபாலையர்.தி.வே, தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியம் (முதற்பகுதி), தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு-2003.

[3] சாமி.பி.எல், சங்க இலக்கியங்களில் செடி கொடி விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற் பதிப்பு-1982.

[4] சீனிவாசன்.கு, சங்க இலக்கியத் தாவரங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற் பதிப்பு-1987.

[5] மணி.பி.எஸ், வளம் தரும் மரங்கள் (பாகம்-4), நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, இரண்டாம் பதிப்பு-1994.

[6] மாத்தளை.சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல், உலகத் தமிழாய்வுக் கழகம், திருச்சி, முதற்பதிப்பு – 2005.

[7] கழகப் புலவர் குழு, கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதினேழாம் பதிப்பு-2002.

[8] மணவை முஸ்தபா, இளையர் அறிவியல் களஞ்சியம், சீதைப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2010.

[9] அறிவியல் களஞ்சியம், தொகுதி- ஆறு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற் பதிப்பு – 1988.

[10] அறிவியல் களஞ்சியம், தொகுதி- ஆறு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற் பதிப்பு – 1995.





# இலக்கியமும் ஆம்பலும்

# Ambal (Nymphaea Pubescens) and Literature





# 4. Ambal (Nymphaea Pubescens) and Literature

**Dr A.Rajalakshmi,** P.G.Assistant, Bharathi Matriculation Hr.Sec. School, Coimbatore
**ORCiD:** https://orcid.org/0000-0002-2191-4384

**DOI: 10.5281/zenodo.4591933**


## Abstract

The Sangam literary collections like “Ettuththokai”, and “Pathuppattu”, have lots of enough registration of Ambal flowers. The word ‘Ambal’ denotes many meanings denotatively. It refers to a flower, invocation, blowing instrument, month, Amla tree, bamboo and elephant. Ambal flowers are used on those days to show the love of the beloveds (Thalaivi) to the lovers (Thalaivan). Its fragrance is also much glorified in Tamil Literature. In Sangam literature, the places where Ambal flowers grow, the uses of the flowers and the attractive beauty of the flowers are depicted in Tamil literary works. The various uses of the Ambal from ‘Agam’ and ‘Puram’ Literature are detailed in his chapter. Mostly “Ainkurunooru”, “Natrinai”, “Pathitruppathu, “Paripadal” portrays the aesthetic beauty and importance of Ambal flowers. Hence, this chapter discloses the aesthetic beauty and use of Ambal flowers in Sangam Tamil culture.


**Keywords:** Tamil Literature, Sangam Literature, Ambal Flower,

## References


[1] Puliyur Kesigan. Sanga Ilakkiyamum Moolamum Uraiyum. Saratha Pathippagam, Chennei-600014, 2012.

[2] Somasundaran Po.Ve. Ed. Ainkurunooru, Tirunelveli Thenindiya Saiva Siddantha Noorpathippu Kazhagam, Chennai, Reprint-1966.

[3] Tamilnattu Varalatruk Kulu. Tamilnattu Varalaru Sangakala Valviyal, Tamil Valarchi Iyakkathirkaga Veliyittor, Tamilnattu Padanool Niruvanam, Chennai-6. 1983.

[4] Somasundaran Po.Ve. Ed. Akananooru, Tirunelveli Thenindiya Saiva Siddantha Noorpathippu Kazhagam, Chennai, Reprint-1970.

[5] Balasubramaniyam. Si. Sanga Ilakkiyam Sila Parvaigal. Narumalar Pathippagam, Chennai, 1970.

[6] Pattuppattu Part 1. Tirunelveli Thenindiya Saiva Siddantha Noorpathippu Kazhagam, Chennai, 1971.

[7] Puliyur Kesigan. Ainkurunooru, Saratha Pathippagam, Chennei-600014, 2012.



*செங்காந்தள் - இயற்கை*

# 4. இலக்கியமும் ஆம்பலும்

முனைவர் அ.இராஜலட்சுமி, முதுகலை பட்டதாரி ஆசிரியர்,

பாரதி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி, கோவை.

ORCiD: https://orcid.org/0000-0002-2191-4384

DOI: 10.5281/zenodo.4591933

சங்ககால நூல்களாக குறிப்பிடப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் ஆம்பல் பற்றிய செய்திகள் பல இடங்களில் விரவிக் காணப்படுகின்றன. ஆம்பல் என்பதற்குப் பொருளாக அடைவு, இசைக்குழல், ஊதுகொம்பு, ஒரு பண், ஓர் எண்கள், குமுதக்கொடி, திங்கள், துதி, துன்பம், நெல்லிமரம், புளியாரைப் பூண்டு, மூங்கில், யானை என்று பலவாறு பொருள் கொள்ளப்படுகிறது.

ஆம்பல் குழல் என்பது குமுத வடிவாக அமைந்த ஓர் இசைக் குழல் என்றும் அகராதியில் குறிப்பிடப்படுகிறது. இந்த ஆம்பல் பற்றிய செய்திகள் பல கூற்று வாயில்களாக சங்க இலக்கியமான எட்டுத்தொகையில் பல இடங்களில் விரவிக் காணப்படுகின்றன. ஆம்பல் பூ வளர்ந்த இடங்கள், ஆம்பல் மலரின் ஒவ்வொரு பகுதியின் பயன்கள் போன்ற பல செய்திகளை எடுத்துக்காட்டுவதாக இந்த புத்தகப்பகுதி அமைகிறது.

**ஆழமான நீரில் ஆம்பல்**

பரத்தையானவள் தலைவனது நடத்தையைத் தலைவியின் தோழி முதலியோர் கேட்க தன் விறலியிடம் கூறியதாக பரணர் பாடிய மருதத் திணைப் பாடல் ஒன்றில்,

**குண்டு நீர் ஆம்பற் றண்துறை ஊரன் (நற் .100:3)**

என்ற பாடல் வரிகளின் மூலம் ஆழமான நீரில் முளைத்த ஆம்பல் பூ என்று இங்குக் கூறப்படுகிறது.

இந்தப் பாடல் வரிகளின் மூலம் ஆம்பலானது ஆழமான நீர்நிலைகளில் முளைக்கக் கூடிய ஒருவகை கொடி என்பது நமக்குத் தெரிய வருகிறது.

**நீர்ப்பூ ஆம்பல்**

மருதத்திணை பாடல் ஒன்றில் பரத்தையின் காரணமாகப் பிரிந்த தலைவன் மீண்டுவர, தலைவி மனம் நெகிழுமாறு தோழி குயவனிடம் கூறுபவள் போல பாணனுக்கு மறுப்புக் கூறிய செய்தியில்,

**ஆம்பல் அமன்ற தீம்பெரும் பழனத்துப்**
**பொய்கை ஊர்க்குப் போவாய் ஆகி (நற்.200:6-7)**



*செங்காந்தள்- இயற்கை*

என்ற வரிகளின் மூலம் திருவிழா நடக்கப் போகிறது என்று கூவிக்கூவி நீ கூறும் வேளையில் ஆம்பல்மலர்கள் மண்டிக்கிடக்கும் அழகிய பழமையான வயல்களையும் பொய்கையையும் உடைய ஊருக்குச் செல் என்று கூறுகிறாள்.

இந்த வரிகளிலிருந்து ஆம்பல் மலரானது வயல்களிலும் பொய்கையிலும் பூக்கின்ற ஒரு வகை நீர்ப்பூ என்பது தெரிய வருகிறது.

**நண்டும் ஆம்பலும்**

ஐங்குறுநூற்றின் களவன் பத்துப் பாடல்களில் முதலாவதாக அமைந்த பாடலில், தான் பரத்தமையைக் கைவிட்டுவிட்டதாக உறுதிகூறி தலைவியைத் தெளிவிக்கின்றான் தலைவன். அவளோ! அவன் கூறிய உறுதிமொழியை நம்பாதவளாக அது அவன்பால் உள்ளது என்று சொல்லி அவனோடு மீண்டும் பிறழ்ந்து வேறுபடுகிறார்கள். அவளுக்குத் தோழி சொல்வதாக அமைந்த செய்யுள் பாடலில்,

**முள்ளி நீடிய முதுநீர் அடைகரைப்**
**புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும் (ஐங்குறு.21:1-2)**

அன்னையை! முள்ளிச் செடிகள் உயரமாக படர்ந்துள்ளதும் பழைய நீரினைக் கொண்டதுமான அடைகரை கண்ணே புள்ளிகள் உடைய நண்டானது ஆம்பலின் தண்டினை ஊடு புகுந்து அறுக்கின்ற குளிர்ந்த நீர் துறை அமைந்த ஊருக்குரியவன் தலைவன் எனக் கூறுகிறாள்.

இந்தப்பாடலில் இருந்து நண்டும் ஆம்பலும் நீரில் வளரக்கூடிய தன்மை உடையன என்பது அறியப்படுகிறது.

**வற்றாத நீர்நிலை**

சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் பெருங்குன்றூர்கிழார் பாடிய பரிசில் கடாநிலை துறையில் பாடாண்திணை பாடலாக அமைந்த புறநானூற்றுப் பாடலொன்றில் மழை பெய்யாது போனதால் நீர் நிலை பற்றி வெடித்த கோடைகாலமாயினும் ஆம்பல் இலையின் நிழலில் கொம்புகளை உடைய நத்தையும் சங்கும் பகற் காலத்தில் கூடி மகிழும் நீர் நிறைந்த வயல்களை உடைய நாட்டிற்கு அரசனே! என்று ஆலோசனை கூறுவதாக செய்தி அமைந்துள்ளது. இந்தப் பாடலில் இருந்து கோடைக்காலத்திலும் நீர் வற்றாத வயல்களையும் வயல்களில் இலைகள் சுருங்காத ஆம்பலையும் காணமுடிந்ததாக இந்தச் செய்தி நோக்கப்படுகிறது.

**பயங்கெழு மாமழை பெய்யாது மாறிக்,**

**கயங்களி முளியும் கோடை ஆயினும்,**

**புழற்கால் ஆம்பல் அகலிடை நீழல்**
**கதிர்க்கோட்டு நந்தின் கரிமுக ஏற்றை**
**நாகு இளவளையொடு பகல்மணம் புகூஉம் (புறம்.266:1-5)**

**கூந்தலன்ன மலர்ந்த ஆம்பல்**



*செங்காந்தள்- இயற்கை*

தலைவி தன்னைப் பழித்தாள் என்று கேள்வியுற்ற பரத்தைக்குச் சினம் பொங்குகின்றது. புதுப்புனலாட அவனுடன் யான் செல்வதை முடிந்தால் தடுத்து விடும் என்று தலைவியின் தோழியர் கேட்கும்படியாக வஞ்சகமாக கூறுகின்ற பாடலில்,

**கூந்தல் ஆம்பல் முழு நெறி அடைச்சி,**

**பெரும் புனல் வந்த இருந் துறை விரும்பி, (குறு.80:1-2)**

என்ற பாடலின் வரிகளின் மூலம் ஆம்பல் மலரானது கூந்தலைப் போன்று மென்மையான நெருப்பினைக் கொண்டு பரந்து காணப்படுகின்ற துறையினைக் கொண்டது. அத்துறையின் தழையினை உடுத்தியவர் முழு நெறி துறையில் பெரிய புனல் விளையாடுவோம் நானும் தலைவனும் என்று கூறுகின்றாள். இதிலிருந்தே இந்த ஆம்பல் மலரானது கூந்தல் எங்கும் விரிந்து காணப்படுகிறதுபோல அந்த நீர் நிலைகளில் எங்கும் ஆம்பல் மலர் பூத்து காணப்படுகின்றது என்ற செய்தி காணப்படுகிறது..

**கொக்கும் ஆம்பலும்**

தலைமகன் மணம் பேசி வருவதாகக் குறித்த காலம் நீடித்த பொழுது தோழி, வரைந்து மணத்தலின் அவசியத்தை வற்புறுத்துவதாக கூறுகின்ற குன்றியனாரின் நெய்தல் திணைப் பாடல் ஒன்றில்,

**மாரி ஆம்பல் அன்ன கொக்கின் (குறு.117:1)**

என்ற பாடல் வரிகளிலிருந்து மாரிக்காலத்து மலர்கின்ற ஆம்பல் மலரைப் போன்று விளங்கும், கொக்கினது பார்வையைக் கண்டு அஞ்சிய துன்பத்தை உடையது என்று கூறுகிறார். இந்தப் பாடலிலிருந்து மாரிகாலம் வந்த பின்னும் அவன் வராததை நினைத்தவள் 'மாரியாம்பல் அன்ன' என்கின்றாள். கொக்கின் உடல் நீர்த் துளிகளோடு காணப்படுவதை மாரியினால் நனைந்த ஆம்பலைப் போல என்றதுவுமாம். இப்பாடலிலிருந்து மழையில் நனைந்த ஆம்பலானது பார்ப்பதற்கு நீர் துளிகளோடு நிறைந்து காணப்படும் கொக்கைப் போன்று இருக்கும் என்று உவமை இங்கு காணப்படுகிறது.

**மென்மை தன்மையான ஆம்பல்**

மதுரை நக்கீரனாரின் மருதத்திணை பாடல் ஒன்றில் தலைமகள் பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனுக்குச் சொல்லிய கூற்றுப் பாடலில், பிளந்த வாயினையும் பல வரிகளையும் உடைய பெரிய ஆண் வரால் மீன் வளைந்த வாயையுடைய தூண்டிலில் தன்னைக் கொல்வதாக இரையினை விழுங்கியது. ஆம்பற் கொடியின் மெல்லிய இலைகள் கிழியுமாறும், குவளையின் அரும்பு மலர்ந்த பல மலர்கள் சிதையுமாற்றும் பக்கத்தே எழுந்து பாய்ந்தது என்று கூறுகின்றாள்.

**பகுவாய் வராஅல் பல் வரி இரும் போத்துக்**

**கொடு வாய் இரும்பின் கோள் இரை துற்றி, (அகம் .36:1-2)**



*செங்காந்தள்- இயற்கை*

அகநானூற்றின் 56 ஆவது பாடலான மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனாரின் மருதத்திணைப் பாடல் ஒன்றில் பரத்தை மனைக்குச் செல்கின்ற பாணன் தன் மனைக்கு வந்தானாகஇ தோழிக்குத் தலைமகள் சொல்லிய கூற்றில்,

**இரும்பு இயன்றன்ன கருங் கோட்டு எருமை,**

**ஆம்பல் மெல் அடை கிழிய,. (அகம்.56:3-4)**

இரும்பாற் செய்யப்பட்டதைப் போன்ற கரிய கொம்புகளை உடைய எருமைகள் பளிங்கு மணியைக் கண்டாற் போன்ற தெளிந்த நீரை உடைய குளத்தினைக் கலக்குமாறு செய்தன. ஆம்பலின் மெல்லிய இழைகள் கிழிய அன்றலர்ந்த குவளையின் மலர்களை உண்டன என்ற பொருள் பெறப்படுகிறது.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று பரத்தையோடு வைகையாற்றில் புனலாடி மகிழ்ந்தான் எனக் கேள்வியுற்ற தலைவி ஊடி இருந்தாள். அதனைக் கேள்வியுற்ற தலைவன் தோழியிடம் சென்று தலைவியின் ஊடலைத் தீர்க்குமாறு வேண்டினான். வேண்டுதலுக்கு இணங்க மறுத்த தோழி கூற்றாக அமைந்த மதுரைத் தமிழக் கூத்தனார் கடுவன் மள்ளனாரின் மருதத்திணை பாடலாகிய 256 ஆவது பாடலில்,

**பகுவாய் நிறைய, நுங்கின் கள்ளின்**

**நுகர்வார் அருந்து மகிழ்புஇயங்கு நடையோடு**

**தீம்பெரும் பழனம் உழக்கி, அயலது**

**ஆம்பல் மெல்அடை ஒடுங்கும் ஊர! (அகம்.256:4-7)**

குடி மயக்கத்தில் தள்ளாடும் நடையினை உடையதாய் பெரிய அழகிய வயல்களை உலகில் இருக்கும் மென்மையான ஆம்பல் இலைகளுக்கு இடையே சென்று ஒதுங்கியது யாமை என்ற செய்தி காணப்படுகிறது.தலைமகளைக் கண்டு காமுற்றுக் கருத்தழிந்தவன் பல காலம் முயன்றும் அவள் இசைந்து இணங்காதவளாக அவள் தோழியிடம் தன் குறை தீர்க்க வேண்டிக் கேட்டு நிற்கின்றான். அவனுக்கு, அவள் தலைவி இன்னமும் காதலிக்கும் பருவத்தை அடையாதவள் என்று கூறி அவனை விலக்கும் பொருட்டு சொல்வதாக அமைந்த இச்செய்யுளில் குறிஞ்சித் திணை துறை எனும் எருமை என்னும் கருப்பொருள் வந்து மருதத் திணைக்கு கொளப்படுவதைப் பெற்றது.

**நெறிமருப் பெருமை நீல விரும்போத்து**

**வெறிமலர்ப் பொய்கை யாம்பல் மயக்கும் (ஐங்குறு.91:1-2)**

நெறித்தக் கொம்பை உடைய எருமையின் கருமையான பெரிய கடாவானது, மணமுள்ள மலர்கள் நிறைந்த பொய்கையிலே சென்று, அதனிடையேயுள்ள விரிமலர் அருமையும் ஆம்பலின் மென்மையும் அறிய மாட்டாமல் அதனைச் சிதைக்கும் தன்மை உடையது. இதிலிருந்து ஆம்பலின் மென்மைத்தன்மை அறியப்படுகிறது. மேற்கண்ட



*செங்காந்தள்- இயற்கை*

நான்கு பாடல் பகுதிகள் மூலமும் ஆம்பல் இலைகள் மிகவும் மென்மையான தன்மையைக் கொண்டன என்பது அறியப்படுகிறது.

**துருத்தி போன்று சுருங்கும் இலை**

மருதம் பாடிய இளங்கடுங்கோவின் மருதத்திணை பாடல் ஒன்றில் பரத்தையர் மீண்டு வந்த தலைவன் தோழியை வாயில் வேண்ட அவளும் அவன் செயலால் ஏற்பட்ட ஊர் அலரை எடுத்துக் கூறி வாயில் மறுத்த கூற்றுப் பாடலில்,

**அர வாய் அன்ன அம் முள் நெடுங் கொடி**

**அருவி ஆம்பல் அகல் அடை துடக்கி,**

**அசைவரல் வாடை தூக்கலின், ஊதுஉலை**

**விசை வாங்கி தோலின், வீங்குபு ஞெகிழும்... (அகம்.96:4-7)**

என்ற பாடல் வரிகளின் மூலம் அரத்தின் வாய் போன்ற அழகிய முட்களை உடைய பிரம்பின் நீண்ட கொடி அருவி ஆம்பலின் அகன்ற இலையைச் சுற்றிக் கிடக்கும்; அவ்விலையை அசைந்து வரும் வாடைக் காற்று விட்டுவிட்டுப் புகுந்து அலைத்தலால் அவ்விலை ஊதப் பெரும் கொல்லனது உலைக் களத்து விசை கொண்டு இழுக்கும் துருத்தியைப் போல புடைத்து சுருங்கும் தன்மை உடையது என்பதை அறியலாம். இந்தப் பாடலின் மூலம் ஆம்பலின் இலை அகன்ற தன்மையை உடையது என்பதும் அதன் மென்மை தன்மையானது கொல்லனின் உலைத் துருத்தி போல வாடைக் காற்று படும் போது புடைத்து சுருங்கும் தன்மையை உடையது என்பதும் அறியப்படுகிறது.

**இலையின் பின்புறமும் வௌவாலும்**

தலைவன் பிரிந்த காலத்தில், அந்தப் பிரிவினால் உண்டாகிய துன்பத்தைத் தாங்க இயலாத தலைவி, தன் ஆருயிர் தோழிக்குத் தன் மன வருத்தத்தைக் கூறுகின்ற கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் பாலைத் திணைப் பாடலில்,

**நெடுநீர் ஆம்பல் அடைப்புறத் தன்ன**

**கொடுமென் சிறைய கூர்உகிர்ப் பறவை (குறு.352:1-2)**

என்ற பாடலில் ஆழமான நீர் இடத்தே வளர்ந்த ஆம்பல் இலையின் புறத்தைப் போன்ற வளைந்த மெல்லிய சிறையை உடையன இகூரிய நகங்களை உடைய வௌவால் என்று இங்குக் கூறப்படுகிறது. இந்தப் பாடலில் இருந்து ஆழமான நிலையில் வளரக்கூடியது ஆம்பல் மலர் என்றும் ஆம்பல் மலரின் இலையின் மேற்புறத்தின் பின் பகுதியானது வௌவாலின் சிறகுகள் போன்று காணப்படுகின்ற தன்மையுடையது என்பதும் இங்கு பார்க்கப்படுகிறது.

**இலையின் பயன்**

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனுக்குக் கிழத்தி சொல்லிய பரணரின் மருதத்திணை பாடல் ஒன்றில் ஆம்பலது அகன்ற இலையில் சுடுகின்ற சோற்றோடு





புளிப்பும் இனிப்பும் கலந்த திரட்சியான பழத்தைக் கொண்டு ஆக்கிய புளியங்கீரை இட்டு உண்டனர் என்ற செய்தி,

**ஆம்பல் அகல்இலை, அமலை வெஞ்சோறு**

**தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து (அகம்.196:5-6)**

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியப்படுகிறது. ஆம்பலின் அகன்ற இலையானது சோறு உண்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செய்தி வெளிப்பட்டுள்ளது.

மூவன் பரிசில் தர நீட்டிட்ட போது பெருந்தலைச் சாத்தனார் பாடிய புறநானூற்றுப் பாடலில்,

**கூம்புவிடு மென்பிணி அவிழ்ந்த ஆம்பல்**

**அகல் அடை அரியல் மாந்தித் தெண்கடல் (புறம்.209:3-4)**

எனக் கூறும் பாடல் வரிகளின் மூலம் கடற்கரை ஓரத்தில் உள்ள வயல்களில் நெல்லை அறுத்து உழவர்கள் ஆம்பல் இலையில் மதுவை உண்டு கடல் அலையின் தாளத்திற்கு ஏற்ப ஆடி மகிழ்வர் என்ற செய்தி தெரியவந்தது.

இந்தப் பாடலில் கூறுவதிலிருந்து அகன்ற இலைகளையுடைய ஆம்பல் மலரின் இலையில் கள்ளை ஊற்றி உண்டனர் என்னும் செய்தி புலனாகிறது.

**ஆம்பல் இலையாடை**

பாங்காயினார் கேட்ப நெருங்கிச் சொல்லியதாக அமைந்த துறை விளக்கப் பாடலாக ஔவையார் பாடிய மருதத்திணை பாடலாக அமைந்த இப்பாடலில்இ தலைவி தலைவனைக் காதலிகள் கைக்கொண்டு விடுவார்களோ? என்று எண்ணி தான் அழகிய ஆடைகளை அணிந்து விழாவிற்கு வருவேன் என்று கூறுவதாகவும், பரத்தையிலிருந்து பிரிந்து தலைவன் வந்து தன்னைக் கூட வேண்டும் என்று கூறுவதாகவும் அமைந்ததாக இப்பாடலின் பொருளை எடுத்துக் கொண்டால்,

**வயல்வெள் ளாம்பல் உருவ நெறித்தழை**

**ஐதகல் அல்குல் அணிபெறத் தை, (நற்.390:4-5)**

தலைவனது ஊராகிய கோயில் வெண்ணியைச் சூழ்ந்துள்ள வயலில் ஆம்பல் கொடிகள் மிகுந்து காணப்படுகின்றன. அந்த ஆம்பலின் அழகிய தழையை என் அகன்ற அல்குலின் மேலே உடுத்திக்கொண்டு விழா களத்திற்குச் செல்ல வேண்டும் என்று தலைவி தனது அழகை அலங்கரித்துக் கொள்ளும் தன்மை கூறுகின்ற இடத்தில் ஆம்பல் மலரின் தலைகளை உடுத்திக் கொள்வேன் என்று கூற்று காணப்படுகிறது.

ஒக்கூர் மாசாத்தனாரின் தாபத நிலை துறையில் பொதுவியல் திணையில் அமைந்த பாடலில்,

**அளிய தாமே சிறுவெள் ளாம்பல்**

**இளையம் ஆகத் தழையா யினவே; (புறம்.248:1-2)**



*செங்காந்தள்- இயற்கை*

சிறிய ஆம்பல் கொடி இரங்கத்தக்கது. யாம் இளமையாய் இருந்தபோது ஆம்பல் இலை தழை ஆடையை எமக்கு அழகு செய்தது என்று கூறுவதிலிருந்து ஆம்பல் இலைகளை ஆடையாகவும் பயன்படுத்தியுள்ளனர் என்ற செய்தியும் காணப்படுகிறது.

புறநானூற்றின் 250 ஆவது பாடலில், **தொன்று தாம் உடுத்த அம்பகைத் தெரியல் (புறம்.280:12)** என்ற பாடல் வரிகளின் மூலம் பெண்கள் சிறிய வயதில் இளமை காலத்தில் ஆடையாய் அல்லியின் இலைகளை உடுத்திய செய்தி காணப்படுகிறது.

ஆம்பல் இலைகள் உடையாகப் பயன்படுத்தப்பட்டன என்ற செய்தியை மேற்கண்ட பாடல்களின் மூலம் நாம் அறியலாம்.

**ஆம்பலின் தன்மை**

நற்றிணையின் 230-ஆவது பாடலாக ஆலங்குடி வங்கனார் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் பரத்தையிற் பிரிந்தவன் வாயில் வேண்டி இறந்து நின்றபோது தோழி தலைவனைக் கடிந்து வாயில் மறுத்த செய்தியில் ஆம்பல் மலரின் தன்மைகள் முழுவதும் இங்கு அறியப்படுகிறது. ஆம்பல் மலரானது பிடி யானையின் செவி போல பச்சை இலையைக் கொண்டது. கூட்டமாக வாழும் அழகிய கொக்குப் போல கூம்பிய மலர் உடையது. தண்டையும் கொண்டுள்ளது. ஆம்பல் மலரானது அமிர்தம் போல மணக்கும் தன்மை உடையது. விடியற்காலம் கிழக்கு திசையில் தோன்றும் கதிரவன் போல இருளைப் போக்கி மலரும் என்ற பாடல் மூலம் ஆம்பல் மலரின் தன்மைகள் முழுவதும் கூறப்படுகிறது

**முயப்பிடிச் செவியின் அன்ன பாசடைக்**
**கயக்கணக் கொக்கின் கூம்புமுகை யன்ன**
**கணைக்கால் ஆம்பல் அமிழ்துநாறு தண்போது**
**குணக்குத் தோன்று வெள்ளியின் இருள்கெட விரியும (நற். 230:1-4)**

தலைவனை ஏற்குமாறு தோழி வேண்டியதை மறுத்து தலைவி சினந்து கூறியதான மருதத்திணை பாடல் ஒன்றில்,

மரக்கிளையில் கொக்கு அமர்ந்தது. அதனால் அந்தக் கிளை அசைந்தது. மாங்கனியும் உதிர்ந்தது. கொக்கு போன்ற குவிந்த நிலை போன்ற ஆம்பல் மொட்டுகள் நிறைந்த ஆழமான நீர்நிலையில் மாங்கனிகள் திடுமென விழுந்தது.

இந்தப் பாடலில் இருந்து ஆம்பல் மலர்கள் ஆழமான நீர்நிலைகளில் வளரக்கூடிய தன்மை உடையன என்றும் அதனது மொட்டுக்கள் கொக்கினைப் போன்ற குவிந்த நிலையை உடையனவாக இருக்கின்றன என்பதும் அறியப்படுகிறது.

**கொக்கினுக் கொழிந்த தீம்பழங் கொக்கின்**
**கூம்புநிலை யன்ன முகைய ஆம்பல்**
**தூங்கு நீர்க் குட்டத்துத் துடுமென விழும் ( நற். 280:1-3)**

மேற்கூறிய பாடல்களில் இருந்து ஆம்பலின் மலர் கொக்கினைப் போன்று கூம்பிய வடிவம் கொண்டது என்பது தெரியவருகிறது.



*செங்காந்தள்- இயற்கை*

**தாமரையும் ஆம்பலும்**

தூதனாக வந்த பாணனிடம் விறலி தனது தலைவி அவனை ஏற்க மாட்டாள் எனக் கூறிய பரணரின் மருதத் திணைப் பாடல் ஒன்றில், நெய் வடித்தது போல பிசிர் அடங்கிய நரம்பு பூட்டிய யாழையுடைய சுற்றத்தினருடைய பாணர் தலைவனே! ஒளியுடைய தொடி அணிந்த அரசகுமாரி சினமடைந்தாள். அவர் கூட்டம் கைதொழுது அவளை இறைஞ்சியது போல மென்மையாக காற்று மிகுந்து வீசுவதால் ஆம்பல் மலர் குவிந்து தாமரை மலரைச் சாய்ந்து வணங்கும்.

**சுடர்த்தொடிக் கோமகள் சினந்தென அதனெதிர்**
**மடத்தகை ஆயம் கைதொழு தாஅங்கு**
**உறு கால் ஒற்ற ஒல்கி ஆம்பல்**
**தாமரைக்கு இறைஞ்சும் தண்டுறை ஊரன்! (நற்.300:1-4)**

இந்தப் பாடல் வரிகள் மூலம் ஆம்பலும் தாமரையும் ஒரே பொய்கையிலே தடாகத்தில் ஆழம் நிறைந்த நீர்நிலைகளில் வளரக்கூடிய பூக்கள் என்றும், தாமரை குளத்திற்கு இராணி போல் வீற்றிருக்கும் என்றும், ஆம்பல் மலர்கள் அதிகமாக பூத்திருந்தாலும் சேடிப் பெண்களுக்கு உவமையாகக் கூறப்படுகின்ற தன்மையைப் பார்க்கலாம்.

ஆம்பலும் தாமரைப் போன்றே ஒரு நீர்ப் பூ என்பதும் அறியலாம். மற்றொரு கலித்தொகைப் பாடலொன்றில், வீட்டுத் தலைவன் நாள் தவறாமல் பரத்தையின் உறவைத் தேடி போய்விடுவதால் தலைவி மனமும் உடலும் வாடுகிறாள். அவனிடம் எதுவும் கேட்கவோ, நொந்து கொள்ளவோ இல்லை. அவள் தோழிக்கு இது வருத்தமாக இருந்தது என்றாள். அதற்கு உன் மனநிலையை அவனிடம் கூற வேண்டியது தானே என்று கூறிய தோழிக்ககுத் தலைவி கூறுகின்ற பாடல் ஒன்றில்,

**நேர் இதழ் ஆம்பல் நிரை இதழ் கொண்மார், (கலி.75:2)**

என்ற ஒரு வரி இடம்பெறுகிறது. அப்பாடலில் நம்மூர் விளையாட்டு சிறுமியர் தம் காலில் செந்நிற சிலம்புகள் ஒலிக்க வயல்களிலே மலர்ந்திருக்கும் தாமரை மலரையும் ஆம்பல் மலரையும் பறிக்க செல்வர் என்று கூறுகிறாள். இதிலிருந்து தாமரையும் ஆம்பலும் வயல்களிலும் வளர்ந்து வருகின்ற செய்தி கூறப்படுகிறது. வயல்களும் நீர் நிறைந்த நிலைகளாகக் காணப்பட்ட செய்தியில் அந்த ஊரின் நீரின் வளமும் இங்கு ஒப்புநோக்கப்படுகிறது .

**குளிர்ச்சியுடைய ஆம்பல்**

தலைவி தலைவனுடன் வெளியேறு சென்றதையறிந்த செவிலித்தாய் தலைவியின் முடிவைத்தான் முன்பே அறிந்திராததற்கு இரங்கி கூறுகின்ற மோசிக்கீரனாரின் பாலைத்திணைப் பாடல் ஒன்றில்,



*செங்காந்தள்- இயற்கை*

**வேங்கையும் காந்தளும் நாறி,**

**ஆம்பல் மலரினும் தான் தண்ணியிளே. (குறு.84-4-5)**

என்ற பாடல் வரிகள் மூலம் பல இடத்தில் உள்ள வேங்கை மலரும் காந்தள் மலரும் தன்பால் மணக்க ஆம்பல் மலரைக் காட்டினும் குளிர்ச்சியாக விளங்கினாள் என் மகள் என்று கூறுகின்றார்.

இப்பாடலில் இருந்து ஆம்பல் மலரானது மிகவும் குளிர்ச்சி வாய்ந்த தன்மையை உடையது என்பதை அறியலாம்.

**வண்டால் அவிழ்ந்த ஆம்பல்**

தலைவி தன்னைப் புறங்கூறிப் பழித்தாள் என்பதைக் கேட்ட தலைவனது பரத்தைக்குச் சினம் எழுகின்றது. அதனால் தலைவியின் தோழியர் கேட்குமாறு சொல்கின்ற வில்லக விரலினாரின் மருதத் திணைப் பாடல் ஒன்றில், பொய்கை இடத்து உள்ள ஆம்பலின் அழகான நிறத்தைக் கொண்டது கொழுமையான ஆம்பல் அரும்புகள். அந்த அரும்புகளை வண்டுகள் ஊதி ஊதி அவிழ்க்கின்ற தண்ணிய நீர்த் துறைகள் உள்ளன என்று கூறுகின்றார்.

**பொய்கை ஆம்பல் அணி நிறக் கொழுமுகை**

**வண்டு வாய் திறக்கும் (குறு.370:1-2)**

என்ற பாடலின் வரிகள் மூலம் மலரும் பருவத்தில் உள்ள அரும்புகளை வண்டுகள் பிறழ்க்க வைக்கின்றன என்ற பாடல் பொருள் இங்கு கூறப்படுகின்றது.

**கண்டல் காயால் கட்டவிழ்த்த ஆம்பல்**

வரைந்து கொள்ளாது காலம் தாழ்த்தும் தலைவனின் செயலை நினைத்து வருந்திய தலைவியிடம் விரைந்து வந்து வரைவு கடாவுவேன் என்று தலைவன் கூறும் பொழுது, அது கண்ட தோழி அவனைக் கடிந்து கூறியதாக அமைந்த நம்பி குட்டுவனாரின் நெய்தல் திணைப் பாடல் ஒன்றில்,

**கானற் கண்டல் கழன்றுகு பைங்காய்**

**நீல்நிற இருங்கழி உட்பட வீழ்ந்தென,**

**உறுகால் தூக்கத் தூங்கி ஆம்பல்,**

**சிறு வெண் காக்கை ஆவித் தன்ன, (நற்.345:1-4)**

என்ற பாடலில் கடற்கரை சாலையில் உள்ள கண்டல் மரத்தின்

பசுங்காய் காற்று வீசுவதால் கழன்று விழும். அது நீல நிறமுடைய பெரிய கழியில் உள்ளே சென்று பதியுமாறு விழும். காய்கள் விழுதலால் நீர் அலை எழும்பப்பட்டு ஆம்பலின் அரும்புகள் சாய்ந்து மலரும். ஆம்பலின் வெண்மையான அரும்புகள் மலர்கள் வளர்வது வெண்மையான நீர் காக்கை கொட்டாவி விட்டது போல இருக்கும் என்று இங்கு கூறப்படுகிறது. இந்தப் பாடலில் மலரும் தன்மை இல்லாத பருவத்தில் அந்த





கண்டல் காய் விழுந்ததால் ஆம்பல் மலரானது மலர்கின்றது என்பதும், காற்றால் ஊதப்பட்ட கண்டல் காய்கள் தான் பருவமே வராத ஆம்பல் மொட்டை மலரச் செய்து பின், அந்தக் காய்கள் சேற்றில் விழுகின்றது என்பதும், அவ்வாறு மலரும் ஆம்பல் மலர்கள் நீர்க்காக்கை கொட்டாவி விட்டு வாய் அகல திறப்பதற்கு ஒப்பானது என்று இங்குக் கூறப்படுகிறது.

**கெண்டையால் மலர்ந்த ஆம்பல்**

உலகியலிலே செயற்குரியதான ஒரு செயலை முடிக்கக் கருதித் தலைவன், ஒரு சமயம் தன் மனைக்குப் போகின்றான். அதனை அறிந்த காதற்பரத்தையை முற்றிலும் பிரிந்து தன் வீட்டிற்கேத் திரும்பினான். அங்கே மனைவியுடன் பிரியாது இன்புற்று வாழ்கின்றான் என்று பலர் பரத்தையிர் கூற காதற் பரத்தைத் தன் தோழிக்குச் சொல்வாள் போல கூறுகின்ற பாடலில்,

**அம்ம வாழி, தோழி, மகிழ்நன்**

**ஒண்தொடி முன்கை யாம்அழப் பிரிந்து, தன்**
**பெண்டிர் ஊர்இறை கொண்டனன்' என்ப**
**கெண்டை பாய்தர அவிழ்ந்த**
**வண்டுபினி ஆம்பல் நாடுகிழ வோனே (ஐங்குறு.40)**

கெண்டை மீன் பாய்தலினால் கட்டவிழ்ந்து மலர்ந்த, வண்டு விரும்பும் ஆம்பல் பூக்களை உடைய நாட்டின் தலைவன் என்று கூறும் செய்தியிலிருந்து பூக்கும் பருவம் வருகின்ற சமயத்திற்கு முன்பாகவே கெண்டை மீன்களினால் ஆம்பல் மலர்கள் மலர்ந்து விட்டன என்று இங்கு பொருள்பட கூறுகின்றனர்.

**கன்னி விடியலில் பூத்த பூ**

தலைமகளைப் பழித்துப் பேசின பரத்தை, தலைமகள் தன்னைப் பழித்து பேசியதாக புறங்கூறித் திரிகின்றாள். அதனைக் கேள்வியுற்ற தலைவி தலைவனிடம் சொல்வதாக அமைந்த இச்செய்யுளில்,

**கன்னி விடியல் கணைக்கால் ஆம்பல்**
**தாமரை போல மலரும் ஊர! (ஐங்குறு.68:1-2)**

என்ற பாடல் வரிகளின் மூலம் திறந்த தண்டையுடைய ஆம்பலானது கன்னி விடியல் பொழுதில் கதிரவன் உதயத்திற்கு முற்பட்ட இளங்காலைப் பொழுது; இதற்கு முந்திய இரவைப் போதை கன்னி இருட்டு என்பர். சிறப்பில்லாத சேதாம்பலானது, சிறப்பான தாமரையைப் போலவே இதழ் விரித்து மலர்ந்திருக்கும் ஊரை உடையவன் தலைவன் என்று இப்பாடலில் கூறப்படுகிறது.



*செங்காந்தள்- இயற்கை*

இப்பாடலிலிருந்து ஆம்பல் மலரானது கன்னி விடியலில் பூக்கும் பூவாக இருந்தது என்பதும் தெரியவருகிறது. மேலும் இப்பாடலிலிருந்து தாமரை மிகவும் சிறப்பான மலராக அக்காலத்தில் கருதப்பட்டது. ஆம்பல் சிறப்பு இல்லாமல் தான் கண்ட நீர்நிலைகளில் தானே முளைக்கும் தன்மை உடையதாக இங்குக் கூறப்படுகிறது. ஆம்பல் மலர் பரத்தையர்க்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ள செய்திகள் இங்கு பல அகப்பாடல்களில் காணப்படுகின்றன.

**மதி நோக்கி அலர்ந்த ஆம்பல்**

பரத்தையர் சேரியே தான் வாழும் இடமாக கழித்து வந்த ஒருவன் தன் வீட்டிற்குப் புறமாக வரும்போது தலைவியின் மெலிவைக் கண்டு அவளைத் தேற்ற முயல்கிறான். தலைவன் தன்னைத் தேற்றுவது உள்ளன்புடன் அன்று என்பதைத் தலைவி அறிந்து, "எனக்கொன்றும் கேடு வந்துவிடாது என்று கூறுகிறாள். எல்லாம் உனக்குத் தான்"என்று எச்சரிக்கின்றார். மருதக்கலி பாடல் எண் ஏழாவது பாடலில்,

**மதி நோக்கி அலர் வீத்த ஆம்பல் வால் மலர் நண்ணி (கலி.72:6)**

என்னும் ஆறாவது வரியில் இரவு வேலை மலராத தாமரை மொட்டு ஒன்று, நிலவை நோக்கி மலர்ந்த ஆம்பலின் பக்கத்திலேயே தனது மலர்ச்சி காலத்தை நோக்கி காத்து இருந்தது என்ற செய்தியைக் கூறுகிறாள்.

இப்பாடலில் ஆம்பல் பூவானது இரவு நேரத்தில் மலர்கின்ற தன்மையை உடையது என்பதைக் காட்டப்படுகிறது. ஆம்பலானது விடியலுக்கு முன்பே நிலவினை நோக்கி வளரும் தன்மை உடையது என்பதும் இங்கு உற்று நோக்கப்பட வேண்டும்.

**தானே மலர்ந்த ஆம்பல்**

பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தில் அமைந்த 23 ஆவது பாடலில்,

**அழன்மருள் பூவின் றாமரை வளைமகள்**

**குறாஅது மலர்ந்த ஆம்பல் (ப.பத்து.3ஆம் பத்து.23:23-24)**

என்ற வஞ்சித்துறைப் பாடாண் பாட்டில் அமைந்த பாடலில் வளை அணிந்த விளையாட்டு மகளிர் பறிக்காமல் தானே மலர்ந்த ஆம்பல் என்று இங்கு கூறப்படுகிறது.

விளையாட்டு மகளிர் குழு பறிக்காமல்விட்டதால் மலர்ந்த ஆம்பல் என்றவாறு மகளிர் தமக்கு எட்டாத ஆம்பலைப் பறிக்காமல் விட்டு விட்டனர் என்று இங்கே பாடப்படுகிறது. அந்த ஆம்பல் மலர்கள் தானே மலர்ந்தன என்றும் கூறப்படுகிறது.

விளையாட்டு மகளிர் தழையாடை அணியவும்இமாலை சூடவும் இதலையில் சூடவும் ஏதோ ஒரு காரணத்திற்காக பூவை அனைத்தையும் பறித்து விடுவர் என்பதும், பெரிய ஆழமான நீர் நிலையாக இருக்கும் போது அவர்களால் பறிக்க முடியாமல் போன தன்மையும் இந்தப் பாடலில் காணலாம்.

**கழனியில் முளைத்த ஆம்பல்**



*செங்காந்தள் - இயற்கை*

புதல்வனைப் பெற்ற வாலாமை நாளில், திதலை படரவும் தீம்பால் கமழவும் தலைவி விளங்குகின்றாள். தலைவனுக்குத் தலைவி கூறி தடுப்பதாக அமைந்த செய்யுளில்,

**கரும்புநடு பாத்தியிற் கலித்த ஆம்பல்**
**கரும்புபசி களையும் பெரும்புனல் ஊர! (ஐங்குறு.65:1-2)**

கரும்பு நடுவதற்கு எனச் செப்பஞ் செய்த பாத்தியிலே, தானாகவே தழைத்த நீராம்பலானது வண்டினத்தின் பசியைப் போக்குகின்ற பெரும்புனல் வளமுடைய ஊரனே! என்று கூறுவதிலிருந்தே பகுத்துப் பகுத்து பகுதி பகுதியாக அமைந்துள்ள நிலப்பகுதியில் செழித்து தழைத்து தானாகவே முளைத்த ஆம்பல் என்று இங்குக் கூறப்படுகிறது.

ஆம்பல் நீர் நிறைந்த வயல் வெளிகளில் கூட தானாகவே முளைக்கும் தன்மை உடையது என்பதை இங்கு பார்க்கப்படுகிறது.

**சூடற்குகந்த சூட்டில் மலர்ந்த பூ**

மதுரை மருதன் இளநாகனாரின் மருதத்திணைப் பாடலில் பரத்தை விறலிக்குச் சொல்லுவாள் போலத் தலைவியிடம் உடல் வேண்டாம் என நயந்து கூறுவதாக அமைந்த பாடல் ஒன்றில்,

**வயல்வெள் ளாம்பல் சூடுதரு புதுப்பூக்**
**கன்றுடைப் புனிற்றா தின்ற மிச்சில் (நற் .290:1-2)**

முல்லைப்பூ போன்ற கூரிய பற்களை உடையவளே ஆம்பல் மலரானது வயலில் வளர்ந்து இருக்கும். உழவர்கள் அந்தப் பூவையும் சேர்த்து அறுத்து கதிரோடு கொணர்ந்து களத்தில் போடுவார்கள். கன்றை ஈன்ற பசு அந்த ஆம்பல் மலரைத் தின்னும் என்னும் செய்தி உள்ளது. இந்தப் பாடல் வரிகள் மூலம் சூடு தரும் என்பதை இரண்டு வகையாக கொள்ளலாம். சூடுவதற்காக பறித்த முதல் பூ என்றும், சூட்டில்(வயல் வெளிகளில்) மலர்ந்த பூ என்றும் கொள்ளலாம்.

சூட்டில் மலர்ந்த பூ என்று கொள்ளும்பொழுது ஆம்பல் மலரானது அந்த நீர் நிறைந்த வயல் வெளிகளில் வளர்ந்து இருக்கக்கூடிய தன்மைப் பற்றி அறிவதாக உள்ளது. பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தில் அமைந்த 62 ஆவது பாடலில்,

**அரிய லார்கை வன்கை வினைஞர்**
**அருவி யாம்பன் மலைந்த சென்னியர் (ப.பத்து.ஏழாம் பத்து.62:16-17)**

என்ற பாடல் வரிகளின் மூலம் அரிய பூவாகிய ஆம்பலைச் சூடிய தலையினை உடையராய் என்ற பொருள் கொள்வதிலிருந்து ஆம்பல் மலரைத் தலையில் சூடிய ஒரு பூவாக இருந்தது என்றும் கொள்ளப்படுகிறது.



*செங்காந்தள்- இயற்கை*

நெல் அரியும் இடத்தில் மலரும் அருவி ஆம்பல். ( நெல் அரியும் இடத்தில் வைத்து நீரை வடித்து விடுதலின் ஆம்பல் முதலிய நீர் பூக்கள் அறிய வாதலின் அருவி ஆம்பல் எனப் பொருளும் கொள்ளப்படுகிறது). தலையில் சூடி இழப்பு எனவும், நெல் அரியும் இடத்து வயலில் விளைந்த அந்தப் பூக்களை அழியும் ஆம்பல் எனவும் இங்கு கொள்ளப்படுகிறது.

பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தில் அமைந்த முதல் பாடலில்,

**அருவி யாம்ப னெய்தலொ டரிந்து (ப.பத்து.எட்டாம் பத்து.71:2)**

என்னும் பாடல் வரிகளின் மூலம் நிறைந்த பூக்களாகிய ஆம்பலையும் நெய்தலையும் நெல்லுடன் அறுத்து உழவர்கள் அறுவடை தொழில் செய்தனர் என்ற செய்தி இங்குக் காணப்படுகிறது. அருவி ஆம்பல் என்பதற்கு நீரின் மலர்ந்த ஆம்பல் என்றும் பொருள் கொள்ளலாம்.

மேற்கண்ட பாடல்களிலிருந்து ஆம்பல் மலரானது நீர் நிறைந்த வயல்களில் நெற் கதிர்களுடன் வளரும் தன்மை உடையது என்பதும் உழவர்கள் நெல்லை அறுவடை செய்யும்போது ஆம்பல் மலர்களையும் அறுவடை செய்து களத்துமேட்டில் குவித்தனர் என்றும் அந்த ஆம்பல் மலர்களை எருமைகள் உண்டன என்பதும் பெண்கள் தலையில் சூடுவதற்காக எடுத்துக் கொண்டனர் என்ற செய்திகளும் இங்கு அறியப்படுகிறது.

**பல்கதிர் வெண்மையன்ன ஆம்பல்**

தலைவன் புறத்தொழுக்கமுடையனாயின் எனக் கேட்ட தோழி, அவனையே அதுபற்றி கேட்பதாக அமைந்த செய்யுளில்,

**பகலில் தோன்றும் பல்கதிர் தீயின்**
**ஆம்பலஞ் செறுவின் தேனூர் அன்ன (ஐங்குறு.57:1-2)**

என்னும் பாடலில் ஆம்பர் பூக்கள் நிறைந்திருக்கும் வயல்களை உடைய தேனூர் அதனைப் போன்ற சிறப்பு உடைய தலைவியின் அழகெல்லாம் பகற் பொழுதிலே தோன்றுகின்ற பலவான சுடர்களை உடைய தீயிலேயே சிக்கினார் போன்று முற்றவும் வெந்து அழியும் என்று கூறுகிறாள்.

இந்த இடத்தில் ஆம்பலுக்குப் பகலில் தோன்றும் பல்கதிர் தீயிலே போன்று வெண்மை நிறமுடையது என்று இங்கு காட்டப்படுகிறது.

**மணமுள்ள மலரிது**

நல்வழுதி யார் எழுதிய பரிபாடலின் பன்னிரண்டாவது பாடலான வையை பாடலில்,

**மல்லிகை மௌவல் மணங்கமழ் சண்பகம்**
**அல்லி கழுநீர் அரவிந்தம் ஆம்பல்**
**குல்லை வகுளம் குருக்கத்தி பாதிரி**



*செங்காந்தள்- இயற்கை*

**நல்லிணர் நாகம் நறவம் சுரபுன்னை**
**எல்லாம் கமழும் இருசார் கரை (பரி.12:77-80)**

என்று கூறுவதிலிருந்து மல்லிகை, முல்லை, மணம் கமழும் சண்பகம், அல்லி, செங்கழுநீர், தாமரை, செவ்வல்லி, வெட்சி, மகிழம், குறுக்கத்தி, பாதிரி, நல்ல கொத்தாக பூத்துள்ள நாகம், நறவம், சுரபுன்னை என்னும் எல்லா வகையான மலர்களின் மணமும் வையைக் கரையின் இருபுறமும் கலந்து கொண்டிருந்தன என்று கூறப்படுகிறது.

இதிலிருந்து ஆம்பல் மலரும் மிகுந்த மணத்தை உடையது என்பதும் அறியப்படுகிறது.

**தழையுடையாகிய ஆம்பல்**

தலைவி புலவி நீங்கி தன்னோடு புதுப்புனலாட வேண்டிய தலைவன் முன்பு களவில் புனலாடியதை அவள் கேட்பதாகக் காட்டும் நச்சினார்க்கினியரின் உரை விளக்கமாக அமைந்த இப்பாடலில் புனலாடவேண்டி தலைமகன், தலைமகள் கேட்ப தோழிக்குச் சொல்லிய பாடலில்,

**வயன்மலர் ஆம்பல் கயிலமை நுடங்குதழைத் (ஐங்குறு.72:1)**

வயலிடத்தே மலர்ந்த ஆம்பலால் தொடுக்கப்பட்டதும், மூட்டுவாய் கொண்டதுமான அசைகின்ற தழை உடை அணிந்தவள் என்று கூறுகின்றான்.

இந்த ஆம்பல் மலரானது வயலிடத்தே செழித்து வளரும் தன்மை உடையது என்றும், மலரானது தழை ஆடையாக உடுத்தவும் (தழையுடை இடுப்பில் இணைத்துக் கட்டுவதற்கு உதவும் பகுதி) பயன்பட்டது என்பது இங்குக் காணலாம்.

பதிற்றுப்பத்தில் இரண்டாவது பத்தில் அமைந்த பதின்மூன்றாவது பாடலின் ஆறாவது வரியில்,

**வளைதலை மூதா வாம்ப லார்நவும்**
**ஒலிதெங்கி னிமிழ் மருதிற் (ப.பத்து. 2ம் பத்து:13:6-7)**

என்ற பாடல் வரிகளின் மூலம் வளைந்த தலையையுடைய முதிய ஆக்கள், பெண்கள் துணங்கை ஆடும் பொழுது இடையில் ஆம்பல் தழை ஆடையையும், ஆம்பல் மலரிலே கண்ணியும் மாலையும் தொடுத்து அணிந்துள்ளனர் என்றும், அந்த தழையுடையிலிருந்து உதிர்ந்த ஆம்பலை மேயும் இடங்களாகவும் கொண்டன என்று கூறுவதிலிருந்து ஆம்பல் அணிந்த செய்தியும் அந்த ஆடையிலிருந்து விழுந்த ஆம்பல் மலரினை உண்ண பசுக்கூட்டம் சென்றன என்ற செய்தியும் பார்க்கப்படுகிறன.

ஆம்பல் மலர் மாலையாகவும் தழையாடையாகவும் பயன்பட்ட செய்தியை இப்பாடல் மூலம் நாம் அறியலாம்.

**ஆம்ப லக மடிவை**



*செங்காந்தள் - இயற்கை*

பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தில் அமைந்த 27 ஆவது பாடலில்

**தொடர்ந்த குவளைத் தூநெறி யடைச்சி**
**அலர்ந்த வாம்ப லகமடி வையர்**
**கரியலஞ் சென்னிப் பூஞ்செய் கண்ணி (ப.பத்து. 3ஆம் பத்து.27:3-4)**

என்ற பாடல் வரிகளின் மூலம் ஆம்பல் மலர்கள் இடையே, அழிவின்றி தொடர்ந்து மலரும் குவளையின் முழு பூவைச் சேர்த்து அகப்பட தொடுத்த தழையினை உடுத்தவர் என்பது பெறப்படுகிறது.

புறவிதழொடித்த முழுப்பூவைத் தூநெறி என்றனர். குவளையும் ஆம்பலும் பைந்தழையும் விரவித் தொடுக்கப்படும் தழையுடையில் ஆம்பற்பூவை இடையிடையிட்டு ஏனையவற்றை அதனைச் சூழத் தொடுத்த தழை உடையை "ஆம்பல் அக மடிவை" எனப்பட்டது. இவ்வாறன்றிப் பலவகைப் பூக்களையும் வண்ணம் மாறுபடத் தொடுக்கப்படுவது பகைத் தழை எனப்படும். இந்த இருவகையும் ஒருங்கமையத் கொடுப்பதும் உண்டு. அதனை "அம்பகை மடிவைக் குறுந்தொடி மகளிர்" என்றனர்.

இப்பாடலிலிருந்து ஆம்பல் பூவானது தொடுக்கப்படும் அமைப்பைக் கொண்டு பலவிதமான பெயர் பெற்றது என்ற செய்தியும் வெளிப்படுகிறது.

**கூந்தலை அலங்கரித்த பூ**

ஆவூர் மூலங்கிழார் பாடலான மருதத்திணைப் பாடலில் தலைமகளைத் தோழி தலைமகனை வரைவு கடாவிய பாடலொன்றில்,

**குவளை உண்கண் இவளும் யானும்**
**கழனி ஆம்பல் முழுநெறிப் பைந்தழை,(அகம்.156:8-9)**

என்ற பாடல் வரிகளின் மூலம் குவளை மலர் போன்ற கண்களையுடைய தலைவியும் நானும் வயலிலே பூத்த இதழ் ஒடியாத ஆம்பல் மலரொடு கூடிய பசிய தழையைத் தலையிலே செருகிக்கொண்டு சிற்றில் விளையாடிய செய்தி கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து அந்த ஆம்பல் மலரின் இலையோடு தலையில் செருகி விளையாடினர் என்ற செய்தியும் வெளிப்படுகிறது.

**இயற்கை மணத்தின் மரபு**

களவிற் கலந்த இன்புற்று தலைவியின் மேனியிலே எழுந்த நறுமணத்தால் வண்டினம் மிகுதியாக வந்து மொய்க்கின்றன. அதுகண்டு ஐயுற்று வினாவிய செவிலித்தாய்க்குத் தோழி சொல்வதாக அமைந்த செய்யுள் இது. சிறைப்புறத்தானாகிச் செவ்வி பார்த்திருக்கும் தலைவனும் தலைவனும் கேட்டு, இனித் தலைவி இற் செறிக்கப்படுதலும் நேரும்; ஆகவே விரைந்து வரைந்து கொள்ளவே செய்யத்தக்கது என்று துணிவான் என்பதுமாகும்.

**எருமைநல் லேற்றினம் மேயல் அருந்தெனப்**
**பசுமோ ரோடமோ டாம்பல் ஒல்லா (ஐங்குறு.93:1-2)**



*செங்காந்தள் - இயற்கை*

பல்வகையாக உள்ள மலர்களிலிருந்து தேன் உணவை வெறுத்தனவாகிய வண்டினம் தலைவியின் கூந்தலிலே வந்து மொய்த்தன. இப்பகுதியில் இருந்து பசுமோரோடம் என்ற பசிய செங்கருங்காலியின் பூ மிகுந்த நறுமணம் உடையது. நறுமோரோடம் என்று இதனை நற்றிணை கூறும்.

சிறுமாரோடம் என்பதைப் பற்றி குறிஞ்சிப்பாட்டு கூறுகிறது. மகளிர் கூந்தலின் இயல்பான நறுமணத்திற்கு மொரோடாவின் மணத்தையும் ஆம்பலின் மணத்தையும் உவமிப்பது மரபு.

இப்பாடலில் இருந்து இயற்கையாகவே பெண்களின் கூந்தலுக்கு மணம் வீசுகின்ற தன்மை ரோடாவின் மனத்தையும் ஆம்பலின் மணத்தையும் ஒப்பிட்டு பற்றி கூறுகின்ற தன்மை காணப்படுகிறது.

**செவ்வாயில் நாறும் ஆம்பல்**

இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைமகன் நின்னைப் பிரியேன் என்றதும்இ பிரிவும் உள்ளதென்ற அச்சத்தால் அவள் வாடினாள். அதனைத் தீர்க்குமாறு அவன் ‘அஞ்சற்க! இவ்வுலகமே பெறுவதாயினும் நின்னைப் பிரியேன்’ ஏன் என வலியுறுத்திக் கூறி அவளைத் தேற்றுகிறான் என்ற கூற்றாக அமைந்த சிறைக்குடி ஆந்தையாரின் குறிஞ்சி திணைப்பாடல் ஒன்றில்,

**குவளை நாறும் குவைஇருங் கூந்தல்,**
**ஆம்பல் நாறும் தேம்பொதி துவர்வாய் (குறும்.300:1-2)**

என்ற பாடல் வரிகளின் மூலம் குவளை மலரின் மணத்தை வீசுகின்ற தொகுதியாக கூந்தலையும் ஆம்பல் மலரின் மணத்தை வீசுகின்ற தேன் பொதிந்த செவ்வாயும் உடையவள் தலைவி என்று கூறுகின்றான் தலைவன்.

இந்தப் பாடலிலிருந்து ஆம்பல் மலரின் வாசம் செவ்வாயின் இதழ்களில் உள்ளது என்று மிகை ஏற்படுத்தி கூறுகின்ற செய்தி காணப்படுகிறது.

**ஆம்பலன்ன செவ்வாய்**

பரிபாடலில் எட்டாவது பாடலாக அமைந்த செவ்வேளுக்குரிய பாடலில் 116 ஆவது வரியில் செவ்வாய் ஆம்பல் என்னும் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

**தங்கைப் பதுமம், கொங்கைக் கயமுகை**
**செவ்வாய் ஆம்பல் செல்நீர்த் தாமரை (பரி.8:115-116)**

அதில் பெண்களின் அனைத்து உறுப்புகளும் தாமரை மலர் போல இருக்கும் பொழுது அவர்களது செவ்வாய் மட்டும் ஆம்பல் மலர் போல காணப்படுகிறது. இவ்வாறு பெண்களின் உறுப்புகள் புனல் இடத்தை மலர்ந்த தாமரை மலர்களுடன் கலந்து கண்ணுக்கும் புலனுக்கும் வேறுபாடு தோன்றா வண்ணம் விளங்கின என்று கூறப்படுகிறது.



*செங்காந்தள்- இயற்கை*

நப்பண்ணனார் எழுதியதும் மருத்துவன் நல்லச்ச்சுதனார் பண் வகுத்ததும் காந்தாரம் பண்ணைக் கொண்டதுமான பரிபாடலின் 19 ஆவது பாடல் செவ்வளுக்குரியது. அந்தப் பாடலின் 75 ஆவது வரியில்,

**பசும்பிடி இளமுகிழ் நெகிழ்ந்தவாய் ஆம்பல் (பரி.19:75)**

என்று கூறுவதிலிருந்து மகளிர் இதழ்களைப் போன்ற செம்மை உடைய ஆம்பர் பூக்கள் மலர்ந்திருக்கும் என்ற செய்தி பார்க்கப்படுகிறது இப்பகுதியிலிருந்து மகளிர் இதழ்கள் ஆம்பல் மலருடன் ஒப்புமை காட்டப்பட்டுள்ள செய்தியும் பார்க்கப்படுகிறது.

மேற்கண்ட பாடல் பகுதிகளில் ஆம்பல் மலரானது பெண்களின் வாயோடு ஒப்பிட்டு கூறப்படுகிறது.

**ஆம்பலையொத்த தேவ மகளிரின் செவ்விதழ்**

பரிபாடலின் பத்தாவது பாடலாக அமைந்த வையை பாடலில் கரும்பிள்ளை பூதனார் எழுதிய மருத்துவன் நல்லச்சுதனாரால் பண் வகுக்கப்பட்ட, பாலை யாழ் பண்ணில் அமைந்த பாடலில், 78 ஆவது வரியில் செவ்வாம்பல் போன்ற இதழ்களில் வைத்து தேவ மகளிர்கள் கிண்ணத்து மதுவை அருந்துவர்.அது தேவ மகளிர் விண்ணில் அல்லாமல் நிலத்திலிருந்து அமுதத்தைப் பருகுவது போன்று இருந்தது என்ற செய்தி காட்டப்படுகிறது. இப்பாடலில்,

**மதியுண் அரமகளென ஆம்பல்வாய் மடுப்ப (பரி.10:78)**

என்று கூறுவதிலிருந்து தேவ மகளிர் இதழ்களானது செவ்வாம்பல் போன்ற அழகினைப் பெற்றிருந்தது என்று கூறப்படுகிறது.

**ஆம்பற் பூவின் சாம்பலன்ன கூம்பிய சிறகு**

தலைமகனின் பிரிவுக் காலத்தில் பிரிவைத் தாங்க மாட்டாள் தலைவி எனத் தோழி கலங்கிய பொழுது தலைவிஇ தான் தலைவன் வரும்வரை பொறுத்திருக்கக் கூடியவள் என்று கூறி அவளைத் தேற்றுகின்ற மாமலாடனின் மருதத்திணை பாடலில்இ

**ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன**

**கூம்பிய சிறகர் மனைஉறை குரீ, (குறு.46:1-2)**

என்ற பாடலின் மூலம் ஆம்பற் பூவானது வாடலையொத்த கூம்பிய சிறகுகள் உடையே மனையிடத்தே தங்குவன ஆயக் குருவிகள் என்று கூறுகிறார். இதில் சாம்பல் என்பது பூவின் வாடிய நிலையை குறிக்கின்றது.

ஆம்பல் பூவின் வாடிய நிலையியானது ஆயக் குருவின் சிறகுகளை ஒத்துக் காணப்படுகின்றன என்பது இங்கு காணப்படுகிறது.

ஆம்பல் பூவின் வாடிய பகுதியும் ஆயக்குருவின் சிறகுகளும் ஒத்து காணப்படுகின்ற தன்மையை இங்குக் காணலாம்.

**மாலையாகப் பயன்பட்ட ஆம்பல்**



*செங்காந்தள்- இயற்கை*

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனுக்குத் தலைவி விளக்கிக் கூறிவதாக அமைந்த அகநானூற்றுப் பாடலொன்றில்

**அரிபெய் சிலம்பின் ஆம்பலந் தொடலை,**

**அரம்போழ் அவ்வளைப் பொலிந்த முன்கை, (அகம்.6:1-2)**

என்ற பாடல் வரிகளின் மூலம் ஐயை என்பாள் மணிகள் உள்ளிட்ட சிலம்பினையும் ஆம்பல் மலராலான அழகிய மாலையும் அணிந்தவள் என்று கூறப்படுகிறது.

அகநானூற்றின் மருதத்திணை பாடலான 136- ஆவது பாடலில் விற்றூற்று மூதெயினனார் பாடலில் தலைவியின் ஊடற்கண் தலைமகன்,

**தன் நெஞ்சிற்குச் சொல்லியது,**

**பரூஉப்பகை ஆம்பற் குரூஉத்தொடை நீவி,**

**சுரும்புஇமிர் ஆய்மலர் வேய்ந்த (அகம் .136:27-28)**

என்ற பாடல் வரிகள் மூலம் ஆம்பல் மலரின் இதழ்களான பருத்த நிறம் பொருந்திய மாலையை அகற்றினாள் என்ற பாடல் பொருள் காணப்படுகிறது.

மேற்கண்ட பாடல்களிலிருந்து ஆம்பல் மலரானது பெண்கள் மாலையாக அணிவதற்குப் பயன்பட்ட ஒரு மலரென அறியப்படுகிறது.

**ஆம்பல் மலரும் உணவும்**

மதுரை நக்கீரனாரின் குறிஞ்சித்திணை பாடல் ஒன்றில்,

உலகெலாம் பரவி கிடக்கும் பலரும் புகழும் நல்ல புகழ் அடையும் வாய்மை தவறாத மொழியினையும் உடையவர் கபிலர். அவர் சூழ்ந்தவாறே, வளமை சான்ற வயல்களில் விளைந்த முற்றிய நெற்கதிர்களை நெடுந்தொலைவினின்றும் கொண்டு வரச்செய்து, அவற்றைப் பெரிய தண்டினை உடைய ஆம்பல் மலராகிய அவியலோடு சமைத்து உண்டனர் என்ற வரிகள் காணப்படுகிறது.

**உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல் இசை**

**வாய் மொழிக் கபிலன் சூழ, சேய் நின்று**

**செழுஞ் செய்ந் நெல்லின் விளை கதிர் கொண்டு,**

**தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி (அகம்.78:15-18)**

என்ற பாடல் வரிகளின் மூலம் அந்த ஆம்பல் மலரானது தண்டுடன் சமைத்து உண்ணப் பட்ட செய்தியும் இங்குப் பார்க்கப்படுகிறது

இந்தப் பாடலில் கபிலன் சூழ என்பது மூவேந்தரும் பாரியின் பறம்பு அரணை முற்றுகையிட்ட போது அதனுள் இருப்போர் உணவின்றி வருமாறு கபிலர் கிளிகளை வளர்த்து பழக்கி வெளியில் இருந்து முற்றிய நெற்கதிர்களைக் கொண்டுவரச் செய்தும்



*செங்காந்தள்- இயற்கை*

உள்ளே இருந்த ஆம்பல் மலர்கள் தண்டுடன் சமைத்து உண்ட செய்தியும் இங்கு வரலாற்றுச் செய்தியாக பார்க்கப்படுகிறது.

**ஆம்பல் கிழங்கின் உணவு**

ஒய்மான் நல்லியக்கோடனைப் பற்றி புறத்திணை நன்நாகனார் பாடிய புறநானூற்று பாடலில்,

**யாமை ஈன்ற புலவுநாறு முட்டையைத்**
**தேன்நாறு ஆம்பல் கிழங்கோடு பெறூஉம் (புறம். 176:3-4)**

என்ற பாடல் வரிகளின் மூலம் விளையாட்டில் ஈடுபட்ட மகளிர் பன்றி உழுத சேற்றைக் கிளறி அதனுள் இருந்த ஆமை முட்டைகளை ஆம்பல் கிழங்குடன் எடுப்பர்.

அங்கிருந்து தேன் மணக்கும் ஆம்பல் மலர்கள் உடைய அந்தக் கொடியின் கிழங்குகளையும் எடுப்பர் என்று கூறுவதிலிருந்து ஆமை முட்டையையும் ஆம்பல் கிழங்கினையும் உணவாகச் சமைத்து உண்டனர் என்ற செய்தி இங்குப் பெறப்படுகிறது.

ஆம்பல் கிழங்கானது உணவாக பயன்பட்ட செய்தியானது ஒக்கூர் மாசாத்தனாரின் தாபத நிலை துறையில் பொதுவியல் திணையில் அமைந்த பாடலில், என் கணவன் மடிந்தான் யாம் கைம்பெண்ணாக நேரம் மாறி உண்ணும் காலத்திலும் ஆம்பல் கிழங்கு புல்லரிசியாக எனக்கு உணவாய் உதவியது என்று கூறப்படுகிறது.

**பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப், பொழுது மறுத்து**
**இன்னா வைகல் உண்ணும்**
**அல்லிப் படூஉம் புல்ஆ யினவே. (புறம்.248:3-5)**

இதிலிருந்து நேரம் கழித்து உண்ணும் பொழுது கைம்பெண்கள் ஆம்பல் கிழங்கை உணவாகப் பயன்படுத்தி உள்ளனர் என்ற செய்தியும் இங்குப் பார்க்கப்படுகிறது. மாறோக்கத்து நப்பசலையாரின் பாடலொன்றில் ஆனந்த பையுள் துறையில் பொதுவியல் திணையில் அமைந்த பாடலில், கைம்பெண் கோலம் போட விரும்பாத பெண்ணொருத்திக்கு இளமைக் காலத்தில் ஆடையாய் உதவிய ஆம்பலானது தற்போது கணவனை இழந்த பின், அக்கொடியிலிருந்து விளைகின்ற அரிசியினை உண்டு வாழும் கைம்மை நோன்பை தான் விரும்பவில்லை என்று கூறுவதாக இப்பாடலைப் பாடியுள்ளார்.

**சிறுவெள் ஆம்பல் அல்லி உண்ணும்**
**கழிகல மகளிர் போல,**
**வழிநினைந்து இருத்தல்இ அதனினும் அரிதே! (புறம்.280:13-15)**

மேற்கண்ட பாடல்கள் மூலம் ஆம்பலின் கிழங்கானது உணவாக பயன்படுத்தப்பட்ட செய்தியும் கைம்பெண் கோலத்தில் பெண்கள் ஆம்பலை உணவாகப் பயன்படுத்தினர் என்ற இரு செய்திகளையும் நாம் அறிகிறோம்.

**அணியாகிய ஆம்பல் தண்டு**


*செங்காந்தள் - இயற்கை*

சோழன் வேல்பஃறொடை பெருநற்கிள்ளி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் இருவரும் பெரும் போர்க்களத்தில் இறந்தபொழுது பரணர் பாடிய பாடலில்,

**ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர் (புறம்.352:5)**

என்ற வரியின் மூலம் ஆம்பல் வளையலாக அணிந்தனர் பெண்கள் என்று கூறுகின்றார். இதிலிருந்து ஆம்பல் மலரின் தண்டுகளைப் பெண்கள் வளையலாகவும் அணிந்துள்ளனர் என்ற செய்தி பெறப்படுகிறது.

**மாந்தளிர் நிறம் கொண்ட ஆம்பல் தண்டு**

இரவு காலத்தே தலைவியைக் கூடி மகிழக் கருதிய தலைவன் தோழி கேட்கும்படியாக கூறுவதாக அமைந்த பாடலில் பரணர்,

**நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால்**
**நார்உரித் தன்ன மதனில் மாமை (நற் .6:1-2)**

என்ற பாடல் வரிகளின் மூலம் நீரில் வளரும் அல்லித் தண்டை நார் உரித்தல் போல அழகற்ற மாந்தளிர் போன்ற உடலை உடையவள் தலைவி என்று கூறுகிறார்.

ஊடி இருப்பவரிடம் தலைவனுக்குப் பரிந்து பேச சென்றவர்கள் தலைவனின் சிறப்பினைப் பலவாக கோரி நிற்பது கேட்டு பொறாதவளான தலைவி பொய்யுரை கேட்டே போல என் மேனி பசந்தது எனத் தன் தோழியிடம் கூறுவது போல அவர்கள் பேச்சையும் மறுக்கின்றாள். இந்தத் துறையில் அமைந்த ஐங்குறுநூற்றில் 35 ஆவது பாடலில்

**அம்ம வாழி, தோழி, நம்ஊர்ப்**
**பொய்கை ஆம்பல் நார்உரி மென்கால்**
**நிறத்தினும் நிழற்றுதன் மன்னே!**
**இனிப் பசந்தன்று, என் மாமைக் கவினே! (ஐங்குறு.35:1-2)**

தோழி நம் ஊர் பொய்கை இடத்தே உள்ள ஆம்பலின் நார் உரிக்க பெற்ற மெல்லிய தண்டினைக் காட்டில் ஒளி உடையதாக முன்னர் இருந்தது என் மேனியின் மாமைக் கவின். அதுதான், இப்போது இவர் கூறும் பொய்யுரை பலவும் கேட்கவும் தான் கேட்டழிந்து பசந்ததே! என்ற பொருள் கொள்ளும் இப்பாடலில் நார் உரிக்க பெற்ற சிவப்பு ஆம்பலின் தண்டு பேரெழிலும் ஒளியும் உடையதேனும் அதனைக் கவிந்து பேணிக்காக்கும் நாரினை இழந்தமையால் விரைவில் அழிந்து வாடிப் போகும் தன்மை உடையது என்பதும் காணப்படுகிறது. மேற்கண்ட பாடல்களின் மூலம் அல்லித் தண்டினை நார் உரித்தால் மாந்தளிர் நிறம் காணப்படும் என்பது இங்கு அறியப்படுகிறது.

**துளையுடைய தண்டு**

தலைவி தலைவனோடு நடத்தும் இல்லற வாழ்வினைக் காண்பதற்காக தோழி தலைவியின் இடத்துக்குச் சென்றாள். அங்கே தலைவன் தலைவியோடு கூடுதலை





விரும்பி மாலை காலத்தில் விரைதலை கண்டவள் களவு காலத்து நினைவுகளை நினைத்து இறங்கியதாக கூறுகின்ற பாடலில்,

**ஏந்துஎழில் மலர தூம்புடைத் திரள்கால்**
**ஆம்பல் குறுநீர் நீர்வேட்டாங்கு, (குறு.178:2-3)**

அயிரை மீன் பரந்து கிடக்கின்ற அழகிய தன்மையுடைய வயலிடத்தில் அழகே மேற்கொண்ட மலரை உடையவாகிய தொளை கொண்ட தண்டினைக் கொண்ட ஆம்பலைப் பறிப்பவர்கள் என்று வரும் செய்தியிலிருந்து ஆம்பல் மலரின் தண்டு துளைகளை உடையது என்ற செய்தி இங்கு பார்க்கப்படுகிறது.

தலைமகளானவள் தலைவனின் புறத்தொழுக்கத்தால் தன்னோடு ஊடி சினந்து இருப்பதனை எண்ணி, அவளைத் தெளிவித்துத் தன்னுடன் உறவாட செய்யும் பொருட்டு தலைவன் தன் பாணர்கள் முதலியோரை ஏவுகின்றான். அவர்கள் கேட்டு திரும்புமாறு தலைவி தோழிக்குச் சொன்னாற் போல அமைந்த செய்யுளில்,

**அம்ம வாழி. தோழி! நம்ஊர்ப்**
**பொய்கைப் பூத்த புழைக்கால் ஆம்பல்**
**தாதேர் வண்ணம் கொண்டன**
**ஏதிலா ளர்க்குப் பசந்த என் கண்ணே! (ஐங்குறு.34)**

என்று அமைந்த பாடல் வரிகள் மூலம் தோழி கேட்பாயாக! நம்மிடத்தே அன்பற்றவனாகவே ஒழுகி வரும் தலைவனின் பொருட்டாகப் பசப்பற்ற என் கண்கள், பொய்கையிடத்தே, புழை பொருந்திய தண்டினையுடைய ஆம்பல் பூவின் தாது போலும் நிறத்தையும் கொண்டனவே! என்று கூறுவதாக அமைந்த இப்பாடலில் ஆம்பல் பூவின் இருவேறு தன்மைகள் இங்குக் கூறப்படுகிறது.

**தொகுப்புரை**

மானிடரால் அமைக்கப்படாமல் தானாக அமைந்த நீர் நிலையான பொய்கை துறையில் வளரும் ஆம்பலின் தண்டு உள்ளே துளையை உடையது என்பதையும் ஆம்பற் பூவின் தாது நிறத்தையும் அறியலாம்.

ஆம்பல் மலரானது ஆழமான நீர் நிலையில் பூக்கின்ற ஒரு பூ என்பதும், நண்டும் ஆம்பலும் ஒரு நீர்நிலையில் வளரக்கூடியன என்றும், அது வற்றாத நீர் நிலையில் கூந்தல் போல் வளரும் தன்மை உடையது என்பதும் அறியப்படுகிறது.

ஆம்பல் மலரானது மிகவும் மென்மை தன்மை உடைய இலையினைக் கொண்டது என்பதும், அந்த இலையானது கொல்லன் உலைத் துருத்தி போன்று புடைக்கும் தன்மை உடையது என்பதையும் அந்த இலையின் பின்பகுதி வௌவால் போன்று இருக்கும் என்பதும் அறியப்படுகிறது.



*செங்காந்தள் - இயற்கை*

பல பாடல்களின் வாயிலாக தாமரையும் ஆம்பலும் ஒரு நிலையில் பூக்கின்ற பூக்கள் என்பதும், ஆம்பலானது குளிர்ச்சி நிறைந்த பூ என்பதும், அது தழையாடையாகவும் ஆடையாகவும் பயன்பட்டது என்பதும், அதன் இலையானது யானையின் செவியைப் போன்று அகன்ற தன்மை உடையது என்பதும், அந்த அகன்ற இலையில் உணவை இட்டு உண்டனர் என்றும் அறியப்படுகிறது. இந்த ஆம்பல் பூவானது விரியும் பருவம் வருவதற்கு முன்பே வண்டாலும் கண்டல் காய்களினாலும், கெண்டை மீனாலும் பருவமடைந்தது என்றும் அவ்வாறு இல்லையெனில் இளமை பருவம் வந்தவுடன் நிலவின் ஒளியைப் பார்த்து மலர்ந்தது, கண்ணி விடியலில் மலர்ந்தது என்பதும் அறியப்படுகிறது.

ஆம்பலானது நீர்நிலையில் மட்டுமல்லாமல் கழனியில் நீர் நிறைந்த பகுதிகளில் வளரும் பொழுது நெல்லுடன் அறியப்பட்ட செய்தியும், இந்தப் பூக்கள் பெண்கள் சுடுவதற்கு ஏற்ற பூவாகவும் இருந்தது என்பதும், இது தேவ மகளிரின் செவ்விதழ் போன்றும், மகளிரின் செவ்விதழ் போன்றும் இருந்தது என்பதும் அறியப்படுகிறது. மேலும், அந்தப் பூவின் வாடிய நிலையானது குருவியின் சிறகுகள் போன்று இருந்தது என்பதும் இந்தப் பூக்கள் மாலையாகவும் உணவாகவும் பயன்படுத்தப்பட்டன என்பதும் பல பாடல்களில் இருந்து நாம் அறிகிறோம்.

ஆம்பல் பூவின் கிழங்கானது உணவாகவும் அதன் தண்டு வளையும் தன்மை மிகவும் மெல்லிய மாந்தளிர் வண்ணத்தைக் கொண்டதாகவும் உள்ளீடற்ற ஒரு குழல் போன்று காணப்பட்டது என்பதும் பல பாடல்களில் இருந்து நாம் அறிகிறோம்.

**பார்வை நூல்கள்**

[1] புலியூர் கேசிகன். சங்க இலக்கியமும் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை-600014, மு.ப.2012.

[2] சோமசுந்தரன் பொ.வே., (உ.ஆ). ஐங்குறுநூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்னை. மறுபதிப்பு 1966.

[3] தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் வாழ்வியல், தமிழ் வளர்ச்சி இயக்கத்திற்காக வெளியிட்டோர், தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை-6, மு.ப., 1983.

[4] சோமசுந்தரனார்பொ.வே., (உ.ஆ), அகநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. மறுபதிப்பு (1970).



*செங்காந்தள் - இயற்கை*

[5] பாலசுப்பிரமணியம் சி., சங்க இலக்கியம் சில பார்வைகள், நறுமலர்ப் பதிப்பகம், சென்னை.மு.ப. (1989).

[6] புலியூர்க்கேசிகன், ஐங்குறுநூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை-600014.

[7] பத்துப்பாட்டுமுதற்பகுதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த கழகம் லிட், சென்னை. மு.ப.,1971.





# குறிப்புகள்



*செங்காந்தள் - இயற்கை*

# குறிப்புகள்



*செங்காந்தள் - இயற்கை*

# குறிப்புகள்



*செங்காந்தள் - இயற்கை*

# குறிப்புகள்





# குறிப்புகள்



*செங்காந்தள் - இயற்கை*

# குறிப்புகள்



*செங்காந்தள் - இயற்கை*

# குறிப்புகள்



*செங்காந்தள் - இயற்கை*

# குறிப்புகள்



*செங்காந்தள் - இயற்கை*

# குறிப்புகள்



*செங்காந்தள் - இயற்கை*

# குறிப்புகள்



*செங்காந்தள் - இயற்கை*

# குறிப்புகள்